சுதேசமித்திரன்

வாரப்பதிப்பு

Vol. 13 No. 6 8-3-'42 Price 2 Annas

இயற்கையான வாஞ்சையுடன்
அடைய விரும்புதல்
குழந்தைக்கு ஆரோக்கியத்தைத்
தரும்
வுட்வார்ட் வைத்தியனின்
"கிரைப் வார்ட்டர்"
என்னும் மருந்துத் திராவகம்

WOODWARD'S
GRIPE WATER

W. WOODWARD LTD. LONDON. ENGLAND

சுதேசமித்திரன்
வாரப்பதிப்பு
8—3—42

சென்ற வார நிகழ்ச்சிகள்

★

புதிய வரிகள்

இந்தியா சட்டசபையின் கூட்டத்தில் பொக்கிஷ மெம்பர் புதிய வருஷ வரவு செலவுத் திட்டத்தைச் சமர்ப்பித்து பேசினுர்.

தமது பிரசங்கத்தில் புதிய வரிகளைப்பற்றி பிரஸ்தாபித்தார்:—

இந்த வருஷம் செலவுக்குப் போதிய வருவாயின்றி 47,07 லக்ஷம் துண்டு விழுந்திருப்பதை ஈடு செய்ய சர்க்கார் உத்தேசித்திருக்கும் வழிகளை நான் சபை முன் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். இந்த யோசனைகளைத் தான் வரி மசோதாவில் புகுத்தியிருக்கிருேம்.

நேரடியாக வரி விதிக்கும் முறையில் முதல் முதலாக நான் வருமான வரி விஷயத்தைப் பிரஸ்தாபிக்கிறேன். வருஷத்தில் 1000 ரூபாய்க்கு மேல் 2000 ரூபாய்க்குக் குறைவாக சம்பளம் வாங்குபவருக்கு முதல் 750-க்குமேல் முதலில் ரூபாய்க்கு ஆறு தம்பிடி வீதம் வரி விதிக்க உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. சேவிங்ஸ் பாங்கி கணக்கில் ஒரு குறிப்பிட்ட தொகையைப் போட்டு வைப்பவருக்கு வரியே இருக்காது.

பிறகு 2000 ரூபாய்க்கு அதிக வருமானமுடையவருக்கு சர்சார்ஜ் விதிக்கும் உத்தேசமிருக்கிறது. இதுவரை எல்லா வருமானத்துக்கும் ஒரேமாதிரியாக வரி விதிக்கப்பட்டு வந்தது. இப்போது 1500 ரூபாய்க்குமேல் 5000 ரூபாய் வரை வருமானமுடையவருக்கு ரூபாய்க்கு ஆறு தம்பிடி வீதம் சர் சார்ஜ் விதிக்கப்படும். அதற்குப்பின் 5000 ரூபாய்க்குமேல் 10 ஆயிரம் வரை வருமானமுடையவர்க்கு ரூபாய்க்கு 9 தம்பிடி வீதம் சர் சார்ஜ் விதிக்கப்படும். அதற்கு அடுத்து 5000 ரூபாய் வரை ரூபாய்க்கு ஒரு அணு இரண்டு தம்பிடி வீதம் சர்சார்ஜ் விதிக்கப்படும். மிஞ்சிய வருமானத்துக்கு ரூபாய்க்கு ஒரு அணு மூன்று தம்பிடி வீதம சர்சார்ஜ் விதிக்கப்படும். அமித லாப வரி இப்போதிருப்பது போலவே இருக்கும்.

கடற் சுங்க இறக்குமதி வரிகளுக்குப் பொதுவாக நூற்றுக்கு 20 வீதம் சர் சார்ஜ் விதிக்கப்படும். இது நெருக்கடி சமயத்துக்கான ஏற்பாடு. ஆனுல் மூலப் பருத்திக்கு இந்த சர் சார்ஜில்லை. ஏனெனில் சமீபத்தில் தான் ஒரு குறிப்பிட்ட காரியத்துக்காக அதன் வரி உயர்த்தப்பட்டது. அடுத்தபடி பெட்ரோல்; அதன் எதிர் வரியில் காலனுக்கு 3 அணு அதிகமாகும். இந்திய பர்மா வியாபார ஒப்பந்தப்படி விலக்கு அளிக்கப்பட்ட சில பொருள்களுக்கும் இந்த வரி உயர்வில்லை.

இறக்குமதியாகும் உப்பு வரி பழையபடியேயிருக்கும். இந் நாட்டுக்கு விதிக்கப்படும் உப்பு வரியும் அந்த வரியும் ஒன்ருக இருக்கும்.

மண் எண்ணெய் எதிர் வரியும் வெள்ளி எதிர் வரியும் இறக்குமதி வரிக்குச்சமான மாக விருக்கும். இந்த ஏற்பாடுகள் உடனே அமுலுக்கு வரும்;

தந்தி தபால் கட்டணத்தையும் சற்று உயர்த்த உத்தேசித்திருக்கிருேம். அதனுல் சுமார் ஒரு கோடி ரூபாய் அதிகமாகக் கிடைக்கும் எனக் கணக்கிட்டிருக்கிருேம்.

தபால் கவர் விலை 0-1-3 ஆக விருந்தது 0-1-6 ஆக உயர்த்தப்படும். தபால் கார்டின் விலை முன் போலவே யிருக்கும்.

சாதாரண தந்தியின் குறைந்த பட்ச கட்டணம் 10 அணுவிலிருந்து 12 அணுவாக உயர்த்தப்பட்டிருக்கிறது. அதேபோல் அவசரத் தந்தியின் குறைந்த பட்ச கட்டணம் 1-4-0 ஆக விருந்தது 1-8-0 ஆக உயர்ந்திருக்கிறது. டிரங் டெலிபோன் கட்டணம் நூற்றுக்கு 10 வீதத்திலிருந்து 20 வீதமாக உயர்த்தப்படும்.

மொத்தமாக இவற்றின் மூலம் 12 கோடி கிடைக்கும். ஆகவே மிஞ்சிய துண்டுத் தொகை 35,07 லக்ஷத்தைக் கடன் வாங்கி சமனப்படுத்த உத்தேசமிருக்கிறது.

* * * *

மௌலானு ஆஸாத் உபதேசம்

"உடனே ஏற்படவிருக்கும் ஆபத்தை"ச் சமாளிக்கக் காங்கிரஸ் என்ன செய்ய உத்தேசித்திருக்கிறதென்பதை மகம்மதலி பார்க்கில் நடந்த பெருங் கூட்டத்தில் பேசுகையில் காங்கிரஸ் தலைவர் மௌலானு ஆஸாத் விளக்கிச் சொன்னுர்.

மௌலானு ஆஸாத் பேசியதாவது:—

தற்போதைய நிலைமையை நாம் சரிவர அறிய வேண்டியது முதல் கடமை. உள்ளதைக் கூட்டியோ அல்லது குறைத்தோ நாம் பேசக் கூடாது.

அபாயம் மிக அதிகமானதே; இதில் சந்தேகமில்லை; ஆனுல் யாவற்றிலும் அதிகமான அபாயம் பீதியே. எந்தத் தேசத்தினர் சாவைக் கண்டு அதிகமாக அஞ்சுகின்றனரோ அவர்கள் தான் அதிகக் கஷ்டங்களுக்கு ஆளாகிறவர்கள். பீதி அடைவதால் நம்மையோ அல்லது நமது தேசத்தையோ நாம் காக்க முடியாதென்பதை நாம் உணர வேண்டும். இதர நாடுகளில் என்ன நடக்கிறது? எப்படி உயிர் வாழ்வதென்பதுபற்றி அந்நாட்களிலுள்ளவர்கள் கவலைப்படுவதில்லை. தங்கள் கௌரவத்தைக் காக்க எப்படி உயிர் விடுவது என்பதைப்பற்றியே அவர்கள் கவலைப்படுகின்றனர். இந்தியராகிய நாமும் நம் கௌரவத்துக்காகப் பிராணனை விட விரும்புகிருேம். ஆனுல் இதற்கான உரிமையை நமக்கு வழங்க பிரிட்டிஷ் சர்க்கார் மறுத்திருக்கின்றனர்.

ஆனுல் பிரிட்டிஷ் சர்க்கார் இந்த உரிமையை நமக்கு மறுத்து விட்டார்களே என்பதற்காக நமது சகோதரர்களுக்குச் செய்யவேண்டிய கடமையினின்றும் நாம் பின் வாங்கக் கூடாது.

* * * *

இந்திய சேனுதிபதியே ஜவாப்தாரி

சமீபத்தில் சீனத் தலைவர் சியாங்கெய்ஷேக்குடன் நடத்திய விவாதங்கள் காரணமாகவும் அவற்றின் பயனுக இந்தியாவுக்கும் சீனுவுக்கு மிடையே நேரடியான ஒத்துழைப்பு அதிகப்பட்டிருப்பதாலும் கீழ்த்திசைப் போர் நிலைமையால் சமீப காலத்தில் ஏற்பட்டுள்ள மாறுதல்களை யொட்டியும் பர்மா சம்பந்தமான யுத்த நடவடிக்கைகளுக்கு இந்திய ஸேனுதிபதி ஸர் வேவல்தான் ஜவாப்தாரியாக இருப்பாரென்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

* * * *



சமீபத்தில் ஸர் தேஜ் பஹாதூர் ஸப்ரூ தலைமையில் டில்லியில் இந்திய ராஜீய நிலைமைபற்றி விவாதிக்க மஹாநாடு கூடியது. படத்தில் ஸர் ஸப்ரூ தலைமைப் பிரசங்கம் புரிவதைப் பார்க்கலாம்.

ஐரோப்பியச் செய்திகள்

காமன்ஸ் விவாதம்

சென்ற வாரம் காமன்ஸ் சபையில் நடந்த விவாதத்தின் போது மிஸ்டர் ஹோர் பெலிஷா சர்க்கார் போக்கின் குறைகளில் சிலவற்றை எடுத்துக் காட்டி நிவர்த்தி கோரினுர். மலேயாவிலும், பர்மாவிலும் போல் காலந் தாழவிடாமல், இந்தியப் பிரச்னையை உடனே தீர்க்க வேண்டுமெனவும் மிஸ்டர் பெலிஷா வற்புறுத்தினுர்.

மற்றும் பல அங்கத்தினர்கள் இந்தியா சுதந்திர மளிக்கப்பட வேண்டுமெனக் கூறினுர்கள்.

விவாதத்துக்கு சர்க்கார் சார்பாகப் பதிலளித்த ஸர் ஸ்டாபோர்ட் கிரிப்ஸ் தெரிவித்ததாவது:—இந்தியாப்பற்றி பிரிட்டிஷ் சர்க்கார் அதி சீக்கிரம் முடிவு செய்யப் போகிருர்கள், இந்தியாவின் தொழிற்சாலை யபிவிருத்தி, பிரிட்டிஷ் காலனி ஆட்சி முதலியவை பற்றியும் நான் விசாரித்து வருகிறேன்.

நம் சரித்திரத்திலேயே நெருக்கடியான இச்சமயத்திலும் சிலர் சொந்த நன்மையைக் கோருகின்றனர்: விளையாட்டுகளில் வீண் செலவு செய்கின்றனர். இதையெல்லாம் தடுக்கப் போகிருேம். ஜனங்களெல்லோரும், வரும் நெருக்கடியான மாதங்களில் ஒற்றுமையாக உழைத்து, உறுதியாக நின்று, கடைசியில் வெற்றி பெறுவாராக.

* * *

இறுதியில் வெற்றி

யுத்த நிலைமையைப்பற்றிக் காமன்ஸில் செய்த பிரசங்கத்தில் மிஸ்டர் சர்ச்சில் குறிப்பிட்டதாவது:—

"யுத்த அரங்கங்கள் அதிகமாயிருப்பதாலும், நம் ஸப்மரீன் எதிர்ப்புப் படை பிரிட்டனுக்கு உணவு பொருள்கள், தளவாடங்கள் கொண்டு வருவதில் ஈடுபட்டுள்ளதாலும், நம் கப்பல் நஷ்டம் சென்ற இரண்டு மாதங்களில் அதிகரித்திருக்கிறது.

தூரக்கிழக்கில். 26 ஜப்பானிய டிவிஷன்களிருக்கின்றன; நமக்கு அங்கு அவ்வளவு படைகளில்லை. தற்காலிகமாக ஜப்பானியரின் விமான பலமும் அப்பிரதேசத்தில் அதிகமாயிருப்பதால், நம் விமானப்படை வேலை செய்வது கஷ்டப்படுகிறது.

"தற்சமயம் பல தோல்விகள் ஏற்படுகின்றன என்பது உண்மை தான்: ஆனுல் போன யுத்தத்திலும் இப்படித்தானிருந்தது. ஆயினும், சென்ற யுத்தத்தில் திடீரென நாம் வெற்றி பெற்றது போலவே இந்த யுத்தத்திலும் திடீரென வெற்றியடைவோம்"

* * * *

மிஸ்டர் ரூஸ்வெல்ட் பிரசங்கம்

ஜனுதிபதி ரூஸ்வெல்ட் சென்ற மாதம் 23-ந்தேதி செய்த ரேடியோப் பிரசங்கத்தில் கூறியதாவது:—

கொஞ்ச காலத்திற்கு நாம் பின்வாங்க நேரிடினும், நம் ஸப்ளைகள் ஏராளமாகச் செல்லும் வரை, எதிரிகளை எங்கு, எப்போது கண்டாலும் தாக்கிக்கொண்டேஇருக்கவேண்டும். ஜப்பானின் பலத்தைச் சிறுகச் சிறுகக் குன்றச்செய்து, இறுதியில் நிலம், ஆகாயம், கடல் மூன்றிலும் ஜப்பானை முறியடிப்போம்.

"நமது உறுதியையும். கட்டுப்பாட்டையும் அழிக்க அச்சு நாட்டுப் பிரசாரகர்கள் பல முறைகளைக் கையாளுகிருர்கள். பிரிட்டிஷார் சோர்ந்துவிட்டனரென்றும். ரஷ்யரும் சீனரும் யுத்தத்திலிருந்து விலகிவிடும் தறுவாயிலிருக்கின்றனரெனவும் எதிரிகள் கூறுகின்றனர். இந்தப் பேத்தல்களை. தேசபக்தியும் விவேகமுமுள்ள அமெரிக்கரெல்லோரும் நிராகரித்துத் தள்ளுவரென நம்புகிறேன்."

* * * *

நாஸிகளுக்குச் செய்தி

நாஸிக் கட்சி ஸ்தாபனத்தின் 22-வது ஆண்டு விழா சென்ற மாத முடிவில் மியுனிச்சிலுள்ள பிரசித்தி பெற்ற சாராயக் கிடங்கில்நடந்தது. அங்கு கூடிய நாஸிப் பிரமுகர்களுக்கு ஹிட்லர் அனுப்பிய செய்தியின் சாரம் வருமாறு:—

"குளிர்கால முடிவு நெருங்கி வரும் இச்சமயத்தில் நான் எனது தலைமை ஸ்தானத்திலேயே தங்கியிருக்க வேண்டியிருக்கிறது. எதிரிகளின் நம்பிக்கையெல்லாம் இந்தக் குளிர் காலத்தையே ஆதாரமாகக் கொண்டது.

இந்த முறை குளிர் காலம் நவம்பர் மாத இறுதியிலேயே ஆரம்பமாகிவிட்டது: சென்ற ஒரு நூற்ருண்டில் எந்த வருஷமும் இவ்வளவு முன்னதாகக் குளிர்காலம் ஆரம்பமானதில்லை. ஜெர்மன் ராணுவத்துக்கு ஏற்பட்டு வந்த ஒப்பற்ற வெற்றித் தொடர் பணியாலும் குளிராலும் தற்காலிகமாகத் தடையுற்றது. நம்மைப் பின் வாங்கச் செய்து விடலாமென்று எதிரிகள் நம்பினர். ஆனுல் அம் முயற்சி அடியோடு முறிவுற்றது நமது துருப்புகள் நமது நேச தேசங்களின் உதவியுடன் முன்பு ஜுன் ஜுலை ஆகஸ்டு செப்டம்பர் மாதங்களில் கடுமையான உஷ்ணத்தினிடையே மகத்தான வெற்றி எய்தியது. அதைப் போலவே டிசம்பர், ஜனவரி, பிப்ரவரி மாதங்களில் கொடிய குளிரையும் தனது வீரத்தாலும் தியாகத்தாலும் சமாளித்தது. குளிர்காலத்தில் மிகக்கொடிய பாகம் இப்போது தீர்ந்து விட்டது. தென் ரஷ்யாவிலும் கிரிமியாவிலும் பனி உருக ஆரம்பித்திருக்கிறது. எனவே நான் எனது தலைமை ஸ்தானத்திலிருந்து இப்பொழுது புறப்படுவது அசாத்தியம். இன்று இறுதியான போராட்டத்திற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன."

* * * *

இரவு நடமாட்டத் தடை

கொள்ளையிடுதல், தீ வைத்துக் கொளுத்துதல் முதலியவற்றைத் தடுப்பதற்காக பர்மாக் கவர்னரின் உத்தரவுக் கிணங்க ராணுவத் தலைவர் ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கிருர்.

ரங்கூனில் இரவு நடமாட்டத் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

* * * *

ஸ்டாலின் பிரசங்கம்

எதிரிகளை லெனின்கிராட் வாசலிலிருந்து விரட்டி உக்ரேன் கிரிமியா முதலியவற்றை விடுவித்து ஸோவியத் கொடியைப் பறக்க விடுவோம்" என்று மிஸ்டர் ஸ்டாலின் பிப்ரவரி 23-ந் தேதி விடுத்துள்ள செய்தியில் கூறுகிருர். அன்று ஸோவியத் சேனை ஏற்படுத்திய தன் 24-வது ஆண்டு நிறைவு. அதை முன்னிட்டு விடுத்துள்ள செய்தியில் ஸ்டாலின் மேலும் கூறுவதாவது:—

ஹிட்லர் தோற்கடிக்கப்பட்டு விட்டார் என்று ஜனங்கள் நம்பிவிடுவது தவறு. எதிர்பாராத வகையில் தாக்குவதே எதிரிகளின் தந்திரம். அதனுல் நாம் அடைந்த பிரதிகூலங்கள் சரி செய்யப்பட்டு விட்டதால் இனி அத் தந்திரம் பலிக்காது.

இன்னும் நாம் பலத்த போர் செய்ய வேண்டியிருக்கிறது: யுத்த முனைக்குப் புதிய படைகளை அனுப்ப வேண்டும். தொழிற்சாலைகள் மேலும் மும்முரமாகக் வேலை செய்வதவசியம்.

ஜெர்மன் மக்களை யழிப்பதில் ஸோவியத் சேனை உதவுகிறதெனக் கூறுவது முழுப் பொய். ஜெர்மன் மக்களும் ஹிட்லர் கக்ஷியும் ஒன்றுதானென நாம் கருதிவிடவில்லை. ஹிட்லரைப் போல் பலர் ஆட்சி செய்யலாம்; காலக்ரமத்தில் மறையலாம்; ஆனுல் ஜெர்மன் மக்கள் என்றென்றும் துலங்குவார்கள். ரஷ்ய சேனை ஜெர்மனியரைக் கைதிகளாகப் பிடிப்பதில்லை; வெறுப்புடன் கொலை வாங்கி விடுகிறதென்பது அணுவும் உண்மையல்ல.

ஸோவியத்தின் பலத்தைக் குறைவாக மதிப்பிட்டதாலேயே ஹிட்லர் ரஷ்யாமீது படையெடுத்தார். ஆனுல் நாம் பின் வாங்கும்போதே எதிரியை நையப் புடைத்தோம். பின்னுல் எதிரியைத் திருப்பி யடிக்கலாமென்றே நம்பி வந்தோம். அம் மாதிரியே நடந்து வருகிறது. டிக்வினிலும், ராஸ்டாவிலும் கிரிமியாவிலும், மாஸ்கோவிலும் எதிரிகள் தோற்கடிக்கப் பட்டனர். மாஸ்கோ ருலாப் பகுதியில் எதிரிகளே கிடையாது. நூற்றுக்கணக்கான ஊர்கள் விடுவிக்கப்பட்டன.

ஜெர்மனிக்குதவியாக சில வேறு நாட்டினரும் போர் செய்கின்றனர். இதுவரை நமக்குதவியாக அப்படி ஒருவரும் இல்லை. நாம் ஒண்டியாகவே எதிர்த்து நின்று வருகிருேம்.

இந்த யுத்தத்தில் நியாயம் நம் பக்கமேயிருக்கிறதென்பது ஒவ்வொரு ஸோவியத் வீரனுக்கும் தெரியும்.

ஜாதி வேற்றுமையும். ஜாதித் துவேஷமும் அதிகமான நாஸிகள் சுதந்திரம் விரும்பும் மக்களெல்லோருடைய விரோதத்தையும் பெற்றுள்ளனர். ஆனுல் ஜாதித் துவேஷமற்ற ஸோவியத் சுதந்திரம் விரும்பும் மக்களின் நட்பைப் பெற்றிருக்கிறது.

* * * *

ஸர் வேவலுக்கு விபத்து

"சிங்கப்பூர் ஜப்பானியர் வசமாவதற்கு 36 மணி நேரத்திற்கு முன்பு ஜெனரல் வேவல் சிங்கப்பூரில் இருந்தார். அவர் சிங்கப்பூரை விட்டுப் புறப்படுகையில் அவரது விமானம் விபத்துக்குள்ளாகியது; இதில் ஜெனரல் வேவலின் விலா எலும்புகளில் ஒன்று முறிந்து போயிற்று" என்று பத்திரிகா நிருபர்களுக்கு பேட்டி அளிக்கையில் அமெரிக்க யுத்த மந்திரியான மிஸ்டர் ஸ்டிம்ஸன் கூறினுர்.

* * * *

ஜாவா கடற் போர்

ஜப்பானியர் ஜாவாத் தீவின் வட கரையில் 3 இடங்களில் படைகளை இறக்கியதாக உத்தியோக முறையில் அறிவிக்கப்படுகிறது.

(28-ம் பக்கம் பார்க்க)

பிரஸிடென்ஸி காலேஜ் ஸ்தாபகர்

சென்ற வாரம் பிரஸிடென்ஸி காலேஜில் திருவாங்கூர் திவான் சசிவோத்தம ஸர் ஸி. பி. ராமஸ்வாமி அய்யர் அக்கலாசாலை ஸ்தாபனத்திற்குக் காரணபூதராயிருந்த லார்ட் எல்பின்ஸ்டன் உருவப் படத்தைத் திறந்து வைத்தார். (பி. பி. பி.)



புதிய காண்டர்பரி ஆர்ச் பிஷப் டாக்டர் டெம்பிள்.

ஸ்திரீகளும் சமூகமும்

★

ஸ்ரீமதி

விஜயலக்ஷ்மி பண்டிட்

எழுதியது.

★

"அபலை" களுக்கான கட்டுரைகள்

பிரதி தினமும் பத்திரிகைகளில் ஸ்திரீகளைப் பற்றியும் அவர்களது தேவைகளைப்பற்றியும், அவர்களது கல்வியை பற்றியும், அவர்களது லக்ஷியங்களைப் பற்றியும் பிரசுரமாகும் கட்டுரைகளைப்படிக்கப் படிக்க எனக்கு வியப்புமேலிடுகிறது. வியாசங்களை எழுதியவர்கள் யாவரும் புருஷர்கள்: தங்களது கூற்றில் தோஷம் கண்டுபிடிக்க முடியாதென்ற திடமான நம்பிக்கையுடன் அவர்கள் "அபலை"களுக்கானவிதிகளை நிர்ணயம் செய்கின்றனர். ஸ்திரீகள் சம்பந்தப்பட்ட விஷயங்களில் எல்லாம் அவர்கள் எழுதுவதே முடிவானது: அவர்களுக்குக் கொஞ்சமாவது சந்தேகமே இருப்பதில்லை. ஸ்திரீகளுக்கு எவை அவசியம் என்பதைத் தாங்களே அதிகமாக அறிந்திருப்பதாக அவர்கள் எண்ணுகின்றனர்: யோசனை கூறவும் உதவியளிக்கவும் அவர்கள் எப்போதும் சித்தமாக இருக்கின்றனர். அவர்களது கருத்துகளைக் கண்டித்து கனவு காணுவதைத் தடுப்பது மிகவும் பரிதாபகரமாகிறது!

என் துணிவு

நான் வெறும் ஸ்திரீ அல்லவா? புருஷர் போல் அறிவும் ஆர்வமும் மிகுந்து நான் எப்படி எழுத முடியும்? ஆனால் நான் ஒரு ஸ்திரீ என்ற காரணம் பற்றி என் இனத்தாரின் ஸ்வபாவத்தை நான் நன்கறிய முடியும். என் இனத்தார் போல் நானும் சில பிரதிகூலங்களுடன் போராடுவதாலும், சில இடையூறுகளை எதிர்க்க வேண்டியிருப்பதாலும், மற்றும் அவர்களது பண்டை நாளையப் பெருமையில் பங்கெடுத்துக் கொள்வதாலும், சிரத்தையுள்ளவர்களாவது படிப்பார்கள் என்ற எண்ணத்துடன் என் அபிப்பிராயத்தை இங்கு வெளியிடத் துணிகிறேன்.

ஸ்ரீமதி விஜயலக்ஷ்மி பண்டிட்

பொறுப்பு எத்தகையது?

இப்போது ஸ்திரீகளுக்கிடையே ஏற்பட்டிருக்கும் விழிப்பு காரணமாக, சமூகத்திலும் நாட்டிலும் அவர்களுக்குரிய ஸ்தானம் எது என்ற பிரச்னை பிரதானமாகக் கிளம்பியிருக்கிறது. நமது இயக்கத்தை ஆரம்பித்தவர்கள், அநியாயமான சட்டங்களையும் பயனற்ற மார்க்கங்களையும், மூட சம்பிரதாயங்களையும் மாற்ற மிகவும் முயற்சித்து வருகின்றனர். நாட்டில் இருக்கும் தங்களது சகோதரிகளுக்குக் கௌரவத்தைக் கொண்டுவர அவர்கள் கஷ்டப்படுகின்றனர்: இந்த கௌரவம் நிலைபெற்றிருக்க வேண்டுமாயின், புருஷர்களும் ஸ்திரீகளும் தங்களது கடமையின் மஹத்துவத்தை உணர்ந்து உழைக்குமாறு செய்ய நாம் இடைவிடாமல் பாடுபட வேண்டும். புத்தி புகட்டுவதுடனே அல்லது குற்றம காணுவதுடனே மட்டும் புருஷர் பொறுப்பு தீர்ந்துவிடாது: காரியத்தில் கண்ணுயிருக்க வேண்டும்: காரியத்தின் மூலம் தங்களது நல்லெண்ணத்தை அவர்கள் புலப்படுத்தவேண்டும். ஸ்திரீகளுக்கு நியாயமான அந்தஸ்து வழங்கும் ஒரு திட்டத்தை அமைப்பதற்கு முன், வருங்காலத்தில் ஸ்திரீகளுக்கும் புருஷர்களுக்கும் எத்தகைய பரஸ்பர சம்பந்தம் இருக்க வேண்டும் என்பதை நிர்ணயித்தல் முக்கியமாகும் ஆகவே 'ஸ்திரீத்துவம்' மட்டுமல்லாமல் 'புருஷத்துவம்' பற்றியும் நாம் விசாரிப்பது அவசியமாகிறது. இவ்விரண்டு பாவமும் வெவ்வேறு என்று சிலர் வற்புறுத்துவது தவறு: இவ்விரண்டு இனத்தையும் தனித்தனியாகப் பிரித்துப் பேசுவதுதகாது.

"அலக்ஷிய புத்தி கூடாது"

இப்போது நாம் இருக்கும் காலம் மிகவும் நெருக்கடியானது நம் முன் தோன்றியுள்ள பிரச்னைகளும் மிகவும் முக்கியமானவை: இப்போது நாம் ஒரு தவறு செய்துவிட்டால் பிற்காலத்தில் நம் சந்ததியார் அதற்காக வருந்த நேரிடும். ஆகவே நாம் நமது கடமையைப்பற்றி அலக்ஷிய புத்தி கொள்ளக் கூடாது.

"விபரீத மனோபாவம்"

தற்சமயம் தேசத்தில் சில புருஷர்களுக்கும் ஸ்திரீகளுக்கும் விபரீதமான மனோ பாவம் ஏற்பட்டு வருகிறது: இதைப் பற்றிக் கண்டனம் வலுத்து வருகிறதாயினும், நான் குற்றம் காட்டவோ கண்டிக்கவோ விரும்பவில்லை. சிறு பிராயத்தில் தகுந்த பயிற்சியின்மையால், தங்களையறியாமலே சிலர் ஒரு அசட்டுத்தனமான நடைமுறைகளைப் பின்பற்ற முற்பட்டிருப்பதே, இந்த விபரீத மனோபாவத்திற்குக் காரணமாகும்: இதனால் ஏற்படக் கூடிய தீமையை சீக்கிரத்திலேயே தவிர்க்கவேண்டும். ஆகையால்

நாம் கண்டனத்தில் இறங்காமல், செயற்கை அம்சம் நிறைந்த சமூகத்தில் நம்மைச் சிறைப்பிடித்துவைக்கும் சம்பிரதாயங்களைத் திருத்தியமைக்கவே துரிதமாக சேவை செய்யவேண்டும். நம் நாட்டு ஸ்திரீ புருஷர்களுக்கிடையே உத்தமமான உணர்ச்சி ஓங்கி வளர நாம் உழைப்போம். ஓட்டுரிமை, ராஜீய சுதந்திரம்- இவற்றைக்காட்டிலும், பிறர் தயவை எதிர்பாராமல் இருத்தல் தான் தற்சமயத்துக்கேற்றது என்பதை நம் பெண்டிர் உணர வேண்டும்: அப்போது எந்த புருஷரும் அவரைத் தாழ்த்திப் பேசமுடியாது; ஒரு ஸ்திரீ, தங்கள் மனம் போனபடியெல்லாம் வைத்து விளையாடக்கூடிய பொம்மை அல்ல என்பதை உள்ளத்தில் கொண்டு, வாழ்க்கைத் துறையில் அவள் தன் துணைவி, என்பதையும், தன் பொறுப்புகளையும், கடமைகளையும் பகிர்ந்துகொள்ளவேண்டியவள் அவள் என்பதையும், புருஷர்கள் மனதில் வைத்துக்கொண்டு நடப்பார்களேயாகில், எந்த ஸ்திரீயும் அவரிடம் அநியாயமாக நடந்துகொள்ளமாட்டாள் என்பது உறுதி.

எவை பிரதானம்?

நம் பெண்களுக்கு கல்வியளிப்பதா, கூடாதா, அல்லது அவர்கள் கீழ் நாட்டு சம்பிரதாயத்தைப் பின் பற்றுவதா அல்லது மேனாட்டு முறைகளைத் தழுவுவதா, பதினான்காம் பிராயத்தில் புருஷனைத் தேடிக்கொடுப்பதா, அல்லது இருபத்திநான்காம் பிராயத்தில் தான் விவாகம் பண்ணுவதா, என்பவை நம் முன் பிரதானமாக இருக்கும் பிரச்னைகள் அல்ல. இவை மிகவும் சாமான்யமானவை என்பதே என் கருத்து: நமது நாடு சுதந்திரம் பெற்றவுடனேயே இவை யாவும் தாமாகவே தீர்ந்துவிடும். நம் சிறுவர் சிறுமிகள் நல்லொழுக்கத்தை நாடும்படிச் செய்வதுதான் முதற்கடமை. இவ்வாறு ஒவ்வொரு ஸ்திரீ புருஷரும் உண்மையைக் கண்டெடுத்து எந்த நிர்ப்பந்தத்திற்கும் அஞ்சாமல் அதைத் தழுவும்படிச் செய்வதுதான் சிறந்தது.

குறைகளை அகற்ற

நம் பெண் பிள்ளைகள் சுதந்திர நாட்டாராக இருக்க வேண்டுமானால், நம்மைச் சுற்றியுள்ள தீய வழக்கங்களை முதலில் ஒழிக்க வேண்டும். நாம் அந்நியர் ஆதிக்கத்தின் கீழ் அடக்கியிருப்பதால் இது சிரமமானது. சுதந்திரம் மறுக்கப்பட்டால் கொடுமை அதிகரிக்கிறது: இப்போது நாம் தாழ்ந்திருப்பதற்கு நாம் சுதந்திரம் இழந்திருப்பதே காரணமாகும். இனி நாம் ஒவ்வொரு குறையையும் அகற்றிக் கொள்ள மிகுந்த ஜாக்கிரதையாயிருக்க வேண்டும்.

முதற் கடமை

நம் சிறுவர் சிறுமிகளுக்குத் தகுந்த கல்வி அளிப்பதே முதற் கடமையாகும். நம் தேசத்தில் தோன்றியுள்ள துர்ப் பழக்கங்களைத் தகர்ப்பதற்கு முன்னர், தனி நண்பர்களிடம் தலை காட்டும் தவறுதல்களைத் தாக்க வேண்டும். சிலர் காட்டும் அடிமை புத்தி மறைந்தால் தான் தேசத்திலும் அந்த நிலைமை மாறும். ஆதலால் நாம் அடிமுதற் கொண்டு ஆரம்பித்து, நாம் கட்ட விருக்கும் மாளிகைக்கு நல்ல அஸ்திவாரத்தைப் போடுவோம்.

பிரஸ்தாபத்திற்குரியன

என் கருத்துகள் இவ்வளவு தான்! இனி ஸ்திரீகளைப்பற்றிய கண்டனங்களையும், நன்றாகப் படித்தும் அவர்கள் புருஷர்களுடன் சமத்துவம் பெற முடியாமலிருப்பதையும், வெளித் தோற்றத்தைத் கண்டு அவர்கள் மயங்குவதைப்பற்றியும், தங்களது நோக்கம் நிறைவேறுவதற்காக சூழ்ச்சிகள் பண்ணுவதையும், முற்றும் இதுமாதிரி பல விஷயங்களைக் குறித்தும் இனி நான் பிரஸ்தாபிப்பேன்.

கல்வியின் நோக்கம்

வாழ்க்கையில் ஒவ்வொருவரும் யுக்தமாக நடந்து கொள்வதற்காகத்தான் சிறு பிராயத்தில் அறிவு புகட்டப்படுகிறது: ஒவ்வொரு சிறுவனும் பௌருஷத்துடன் நடந்து கொள்ளவும், ஒவ்வொரு சிறுமியும் பெண்மையுடன் இருக்கவும் போதிக்கப்படுகிறது. ஆரம்பத்திலிருந்தே தாங்கள் புருஷர்கள், தாங்கள் ஸ்திரீகள் என்ற எண்ணம் அவர்களிடம் வளருகிறதேயொழிய, தாங்கள் அனைவரும் மனுஷ்ய வர்க்கத்தார் என்ற விதத்தில் வாழ நாம் அவர்களுக்கு இடம் அளிப்பதே கிடையாது. பையன் வெளியே போய்ப் பார்த்து பல புது விஷயங்களைக் கற்றுக் கொள்கிறான்: வீட்டிற்கு வெளியே நடப்பதைப் பெண் அறியாள். இவ்விதமாக நாம் பெண்களுக்கு ஆரம்பத்திலிருந்தே, "ஸ்திரீ ஜாலங்கள்" என்றழைக்கப்படும் பலவித கெட்ட அம்சங்களை போதித்து விடுகிறோம்: ஆனால் நல்ல படிப்பு பெற்ற பெண்ணும் இந்த அம்சங்களைக் கொண்டிருப்பதில் என்ன ஆச்சரியம்?

ஸ்திரீயின் நிலைமை

ஒரு ஸ்திரீக்கு காம உணர்ச்சி ஏற்பட்ட வுடனேயே, அவள் ஒரு புருஷனுடைய ஆதரவை யண்டி நிற்க நிர்ப்பந்தம் பிறக்கிறது: சமூகம் இதைக் கட்டாயப் படுத்துகிறது. வேலை செய்து சம்பாதிக்கும் ஒரு ஸ்திரீயின் நடத்தையில் தோஷம் காணப்பட்டால், அவள் தன் வேலையை எவ்வளவு திறமையுடன் செய்து வந்த போதிலும், உடனேயே வேலையை விட்டு விலகிப்போக நேரிடுகிறது. உலகத்தின் ஒழுக்கத்தைப் பாதுகாப்பதாக பெருமை யடித்துக் கொள்வோர் அவளிடம் அனுதாபம் காட்டுவதில்லை: ஆகவே அவள் தன் வாழ்க்கையை விபசாரியாகவே ஒழித்து விடுகிறாள். சுருங்கச் சொல்வோம்: அண்டி வாழ்வதா, அல்லது ஆகாரமின்றி அவதிப்படுவதா-இவ்விரண்டு மார்க்கங்களுள் ஏதாவது ஒன்றை அவீர்கள் தற்காலத்திலும் கடைபிடிக்க வேண்டியிருக்கிறது. தனது இஷ்டம் சித்தி பெற அவள் சூழ்ச்சி பண்ணுவதிலும், புருஷருக்குப் போட்டியாக நிற்க அவளுக்கு சாத்தியமில்லாமற் போவதிலும் ஆச்சரியப் படத் தக்கது எது?

"ஸ்திரீ ஸ்வபாவம்" எது?

ஸ்திரீகளுக்கு, தங்களது உணர்ச்சிகளை மறைத்து வைக்க வல்ல பாடம் போதிக்கப்பட்டிருக்கிறது: அவள் உண்மையை ஊன்றிப் பார்க்கக்கூடாது: தனது ஆசாபாசங்களையும் வெளியிடலாகாது. இதற்கு "ஸ்திரீ ஸ்வபாவம்" என்று பெயர் இடப்பட்டிருக்கிறது; இதைப் புறக்கணித்து எந்த ஸ்திரீயாவது முன் வந்தால் உடனே வயதானவர்கள் கூக்குரலிடவாரம்பித்து விடுகின்றனர்! ஸ்திரீகள் தங்களது வினயத்தை உதறித்தள்ளிவிட்டு மான அவமானமின்றி போகக்கூடாது என்று முறையிடுகின்றனர் அவர்கள். இந்தியாவின் பண்டைய நாளில் ஸ்திரீகளது பெருமைக்குக் காரணமாயிருந்த இந்த குண விசேஷங்களை நிராகரிக்கக் கூடாது என்று அவர்கள் கோருகின்றனர். இவர்கள், நாட்டில் ஒழுக்கத்தையும் பாதிவ்ரத்யத்தையும் பாதுகாக்க விரும்பவில்லை: ஆனால் அநேக காலமாக ஸ்திரீகளை அடிமைச் சுழலில் அகப்பட வைத்து, இப்போது அறிவுச்சுடர் முன் அகன்று வரும் அஞ்ஞானத்தான் நீடித்திருக்க விரும்புகின்றனர். இந்தச் சுடர் கொழுந்து விட்டெறிந்தால், அதன் பிரகாசம் ஸ்திரீகளது கண்களுக்கும் புலப்படுவதை எந்த சக்தியும் தடுக்க இயலாது: அதற்கப்புறம் அவர்கள் எந்தக் கட்டுப்பாடும் பயமும் இன்றி, ஆடவர்களுக்கு நிகரானவர்களாய் முன்னேற்றமடைந்து, ஒரு திருப்திகரமான நிலைமை ஸ்தாபனமாவதற்கு உதவுவார்கள்.

எப்பொழுதும்
பாதுகாருங்கள்
பீனசம்—இருமல், மார்புசளி, கபவாதஜுரம்
மற்றும் சுவாச உருப்புகள் சம்பந்தமான சகல வியாதிகளுக்கும்
PULMOVERON
★ முதல் டோஸ் உட்கொண்ட உடனேயே நிவர்த்தி காணுவீர்கள்.
★ சுலபமும், பத்திரமும், நிச்சயமுமான நிவாரணி என வைத்யர்களால் சிபார்சு செய்யப்படுவது.
VERO-PHARMA PRODUCT
VERO PHARMA, 7, Second Line Beach, MADRAS.

மாருதி
ஜன்ம நக்ஷத்திர பலன், தினசரிக் குறிப்பு-அதிருஷ்ட எண், ரேஸ், பஞ்சு, நூல், பொன், கோதுமை ஷேர் மற்றும் எல்லா வஸ்துக்களின் மார்க்கெட் எதிர்காலம், இதில் வெளி வரும். மாதப் பதிப்பு பிரதி 1 அணா. எல்லா ஊர்களுக்கும் ஏஜண்டு தேவை.
மாருதி ஆபீஸ், திருத்தணி.

1942-ம் வருஷத்து புது கியாட்லாக் இனம். 2 அணா ஸ்டாம்பு அனுப்புகிறவர்களுக்கு 'மந்தரத்தின் ரகஸ்யங்கள்' என்ற புத்தகம் இனாம். எந்த தேசத்து ஸ்டாம்பும் அனுப்பலாம்.
ஒற்றுமை ஆபீஸ், தியாகராயநகர், மதராஸ்.

சிறுவர் பகுதி

படிக்காசுப் புலவர்

"சிவன்"

முத்து பாவலர் ரொம்ப நல்லவர். நல்ல படிப்பாளி. சிறந்த விவேகி. ஆனால் தரித்திர நாராயணன் தான். எவ்வளவு படிப்பும், அறிவும் இருக்கிறதோ, அவ்வளவு வறுமையும் கொடுமையும் தான் தாண்டவமாடின. அவருடைய நல்ல குணத்துக்கு எதிர்மாறாக வாய்த்தது மூர்க்கமான மனைவி. எந்த நேரமும் பணம், பணம் என்று பிடுங்கி விடுவாள். ஏதாவது ஊதியம் கொண்டு வரவில்லையேல் அன்று சாப்பாடு பூஜ்யம் தான். என்ன பண்ணுவார்? இக் காலத்தில் யார் காசு கொடுப்பார்கள்? அக் காலத்தில் கம்பன் கவிக்கு ஆயிரம் பொன் கொடுத்தார்கள். இவர் கவிக்கு யார் ஒரு காசு கொடுப்பார்கள்? ஆனால் ஊரில் என்னமோ சிறந்த [illegible] தான்! காசு கொடுப்பார் யாரும் இல்லை. சிறந்த தெய்வப் பக்தி யுள்ளவர்; எல்லாம் அவன் செயல் என்று சொல்லுவார்.

பட்டினி கிடப்பது சர்வ சகஜமாகப் போய் விட்டது முத்துப் பாவலருக்கு. ஆனால் மனைவி ஒரு வேளை பசி தாங்க மாட்டாள். ஒரு வயது குழந்தைக்கும் பால் கிடையாது. மனைவி பாவலரிடம் "என்னங்கோ, உங்களைக் கட்டிக் கொண்டு நான் கண்ட சுகம் போதும். குழந்தைக்கு பால் கிடையாது. வயிற்றுக்கு உணவும் கிடையாது. சாப்பிடுவதற்கு பொருளும், குழந்தை பாலுக்கு ஒரு பசுவும் சம்பாதித்து வாருங்கள். இல்லையேல் நாங்கள் இரண்டு பேரும் எங்கேயாவது கிணற்றில் விழுந்து செத்து விடுவோம்" என்றாள். எல்லாம் அவன்

செயல் என்று பூஜை விக்ரஹத்தினிடம் முறையிட்டு அவர் கண்ணீர் வடித்தார்.

அரிய நல்லூரில் மிராசுதார் ஒருவர் இருக்கிறார். அவர் பெரிய தர்மிஷ்டர். அவரிடத்தில் நம் கவியைப் பாடினால் ஏதாவது அவர் சன்மானம் தருவார் என்ற யோசனை அவருக்கு உதித்தது. தன்கிழிந்த உடைகளை சீர்படுத்திக் கொண்டு, கிழிந்த நார் முடியை மேலே போட்டுக் கொண்டு கிளம்பினார்.

"ஊரூராய் உட்கார்ந்திருக்கும் உலகப்பா—என்னுடன் எழுந்து வாரும் காளப்பா" என்று ஒரு கவி பாடினார். அவருடைய முகத்தில் பிரகாசம் தோன்றியது. தன்னை மறந்து அரிய நல்லூரை நோக்கி நடந்தார். மிராசுதார் வீட்டையடைந்தார். வாசற்படியில்வாயில் காப்போர் நின்றிருந்தனர். பாவலரை உள்ளே விடாது தடுத்து விட்டனர். அவர்கள் கண்ணுக்கு பாவலர் பயித்தியக்காரன் மாதிரி தென்படவே அவரைத் துரத்த ஆரம்பித்தனர். பாவலர் "அப்பா, உள்ளே போயாவது ஏஜமானிடத்தில் முத்துப் பாவலர் வந்திருக்கிறார் என்றாவது சொல், இல்லையேல், இந்தக் காயிதத் துண்டையாவது கொண்டு போய் கொடு" என்று, ஒன்றை அவன் கையில் கொடுத்தார். அதில்,

"சீர் பெருகும் புனிதா,
சிறந்த நன்கொடையா
உயர்திரு மகளிர் குலத்தில்
உதித்த உத்தமா,
பததிரு முத்துப்பாவலர்
பதமலர் வந்துள்ளனே"

என்று எழுதியிருந்தது.

சேவகன் காகிதச் சுருளை கொண்டு மிராசுதார் கையில் கொடுத்தான்: வாங்கிப் பார்த்தார். ஆனந்த பாஷ்யம் பொங்க, "டேய்! அவரை உள்ளே தக்க மரியாதையுடன் இட்டுவா" என்றார். சேவகன் பாவலர் பாதத்தில் விழுந்து "சாமி! தெரியாமல் தவறு இழைத்து விட்டேன். மன்னிக்கவேணும் எஜமான் தங்களை அழைக்கிறார்" என்று வந்தனத்துடன் அழைத்துக் கொண்டு போனான். பாவலரைக் கண்ட மிராசுதார், சந்தோஷமிகுதியால் அவரை ஆலிங்கனம் செய்து கொண்டு அவர் வந்த காரியத்தைப் பற்றிக் கேட்டார்.

"ஒன்றுமில்லை. வீட்டில் ஒரு வயது குழந்தைக்கு பால் இல்லை. ஒரு பசு தானம் வேணும். வயிற்றுப் பசிக்கு உணவு வேணும். வறுமையால் குடும்பமே ஐந்து நாள் பட்டினி" என்றார். அவர் சொல்லில் இரக்கம் தாண்டவமாடியது. இதைக் கேட்டதும் மிராசுதார், "பாவலரே! உம் கவிக்கு என் ஆஸ்தி எல்லாம் போதாதே, உமக்கு தேவையானது எடுத்துக் கொண்டு போம்" என்றார். கணக்குப் பிள்ளையைக்கூப்பிட்டு "இவருக்கு வேண்டிய திரவியமும், ஒரு பசுவும், கன்றும் அனுப்பு" என்று சொல்லி தகுந்த மரியாதைகளுடன் அனுப்பினார். அது பாவலருக்கு இரண்டு மாத காலம் வந்தது. திரும்பவும் கஷ்ட காலம் துவங்கி விட்டது. சம்பாதிக்க வழி தேடினார். பழைய கந்தை வேஷ்டிகளை அணிந்து கொண்டு கிளம்பினார். ஊரூராய்த் திரிந்தார். களைப்பின் மேலீட்டால் ஒரு விஷ்ணு கோவிலை அணுகினார். உள்ளே போய் சிரம பரிகாரம் செய்து கொண்டார். வந்தது வந்தோம். ஆண்டவனை யாவது தரிசித்து விட்டு போவோம் என்று மூலஸ்தானத்தண்டை போனார். கோயில் அர்ச்சகருக்கு மணியாகி விட்டது. மூலஸ்தானத்தை பூட்டிக் கொண்டு வெளியில் வந்தார் அர்ச்சகர். "ஐயோ, ஆண்டவனைத் தரிசிக்கவும்



முடியவில்லையே. அவர்களுக்கு கொடுக்கவும் கையில் காசு இல்லையே" என்று சிந்தை நொந்து கண்ணீர் விட்டார் முத்துப் பாவலர்.

"கலியுக வரதப்பா, உன்
னைக் காண முடியவில்லையப்பா—கால் நோவ வந்
தும், கண் குளிர
காணலையே" என்றார்.

கவி பாடி மனம் நொந்து மூர்ச்சையானார்.

மூலஸ்தான வாசற்படியில் தங்கக் காசுகள் குவியலாயின. "முத்து-எழுந்து உன் கண்ணைத் திறந்து பார். உனக்கு இனிமேல் வறுமைப் பிணி தொலைந்தது. இனிசுகப்படுவாய்" என்ற குரல் கேட்டது. முத்து பாவலர் சுய அறிவு வந்து கண்ணைத் திறந்தார். எதிரில் பொன் காசு குவியல் இருந்தன. இதுவும் ஆண்டவன் திருவருள் என்று பொன் காசுகளை வாரி கந்தையில் முடி போட்டுக் கொண்டு கிளம்பினார். அர்ச்சகர் இதைக் கண்டார். "ஐயோ, சிறந்த பக்தனை நாம் அவமதித்தோமே," என்று மனம் நொந்து ஓடோடியும் வந்தார். இவரைக் கூப்பிடவும், பேர்தெரியவில்லை. படி மீது காசு இருந்ததால்—"படிக்காசுப் புலவர்" என்று அழைத்தனர். பாவலர் நின்றார். "சாமீ, தெரியாமல் நாங்கள் தப்பு செய்து விட்டோம். எங்களை மன்னிக்கவும்" என்றார்கள். அவர்களை அனுப்பிவிட்டு வீடு போய் சுக ஜீவியாய் வாழ்ந்து வந்தார் பாவலர்.

ஹிந்திக் கதை

'காதல் - சாதல்'

ஸ்ரீ பிரேம் சந்த் எழுதியது

2

மிருது பாஷிணி மீரா ஜனங்களுக்குப் பக்தி மார்க்கத்தை உபதேசித்து வந்தாள். ரணசோட்ஜீயின் மந்திரத்தில் அவள் பாடும் பாட்டுகளைக் கேட்டு ஜனங்கள் மதிமயங்கி இருந்தார்கள். பிரதி தினமும் அந்த தேவகானத்தைக் கேட்க சித்தோடு கிராமத்தவர்கள் எல்லோரும் அங்கு வருவார்கள். அந்த தேவகானத்தைக் கேட்டு சித்தோடு கிராமத்தவர்கள் மாத்திரம் உன்மத்தராகிவிடவில்லை. எல்லா தேசத்து ஜனங்களும் அரசர்களும் கூடத்தான்!

ஜால்வாடின் ராவ் சாஹெப்பும், மந்தார் தேசத்து அரச குமாரனும் பரிவாரங்களுடன் சித்தோடுக்கு வந்தார்கள். ராவ் சாஹெப்புடன் அவருடைய குமாரத்தி ப்ரபாவும் வந்திருந்தாள். அவளுடைய அழகைப் பற்றிய செய்தி எல்லா தேசத்திற்கும் பரவியிருந்தது. ரணசோட்ஜீயின் மந்திரத்தில் ராஜகுமாரன் கண்களும், ப்ரபாவின் கண்களும் சந்தித்தன. மன்மதன் அவர்கள் இருவர் பேரிலும் ஆதிக்கத்தைச் செலுத்த ஆரம்பித்தான்.

அரச குமாரன் நாள் பூராவும் சமுத்திரக் கரையோரமாகச் சுற்றிக்கொண்டிருப்பான். குமாரி ப்ரபா விரஹதாபத்தினால் நாள் பூராவும் ஒரே இடத்தில் உட்கார்ந்து சிந்தித்துக் கொண்டிருப்பாள். இருவரும் மாலை பஜனை மண்டபத்தில் சந்திப்பார்கள். உடனேயே சந்திரனைக் கண்ட கடல் போல் ஆனந்தத்தில் மூழ்கி விடுவார்கள்.

மீரா அவர்களது நடவடிக்கைகளை அடிக்கடி கவனித்து, அவர்களது மனதில் உள்ளதைத் தெரிந்து கொண்டாள். ஒரு நாள் பஜனை முடிந்ததும் ஜால்வாடின் ராவ் சாஹெப், வீட்டுக்குத் திரும்பிப் போகும் சமயம்: அவரைக் கூப்பிட்டு மந்தார் தேசத்து அரசகுமாரன் முன் "ராவ் சாஹெப், நான் ப்ரபாவுக்காக இந்த வரனைத் தேர்ந்தெடுத்திருக்கிறேன். இதை நீர் ஏற்றுக்கொள்ளும்" என்று ராஜகுமாரனைச் சுட்டிக் காண்பித்தாள்.

ப்ரபா வெட்கத்தால் தலை குனிந்து கொண்டாள். ராஜகுமாரன் குணத்தை முன்பே அறிந்து கொண்டு ராவ் சாஹெப் அவன்மேல் கண்ணை வைத்திருந்தார். அவர் உடனே அவனை மார்புடன் தழுவிக் கொண்டார்.

அதே சமயம் சித்தோடின் அரசன் ராணா பிரதாப்சிங் அந்த மந்திரத்திற்குள் வந்தான். ப்ரபாவின் அழகைக் கண்டு அப்படியே பிரமித்து விட்டான்.

ராஜகுமாரி ப்ரபாவுக்கு அன்று கலியாணம் நடக்கும் என்று ஜனங்கள் எல்லோரும் குதூகலமாக இருந்தார்கள். மந்தார் தேசத்திலிருந்து ஜால்வாடிற்கு விருந்தாளிகளும் சம்பந்திகளும் வரும் பொழுது அவர்களுக்கு மரியாதை செய்ய ஏற்பாடுகள் நடந்துகொண்டிருந்தன, ஆனால் அந்த அலங்காரங்களெல்லாம் யாருக்காகச் செய்யப்பட்டனவோ அவள் நந்தவனத்தில் ஒரு மரத்தின்கீழ் உட்கார்ந்துஅழுது கொண்டிருந்தாள்.

எல்லோரும் நிர்ப்பாக்கியர்கள் என்றும் தான் தான் பாக்கியசாலி என்றும் ராணி நினைத்துக்கொண்டாள். மேலும் அவள் தன்னையும் மறந்து உள்ளிருக்கும் நகைகள் பூராவையும் வாரித்தன் கழுத்தில் அணிந்து கொண்டாள். அன்று ப்ரபாவுக்குக் கலியாணம் என்ற ஆனந்தத்தால் ராணிக்குத் தலைகாலே தெரியவில்லை! அனைவரும் தன் தன் சிங்காரங்களிலேயே ஈடுபட்டிருந்தார்கள். மரத்தடியில் உட்கார்ந்து அழுது கொண்டிருக்கும் பிரபாவைக் கவனிப்பாரில்லை!

பிறகு இருவர் ப்ரபாவைத் தேடிக்கொண்டு தோட்டத்திற்கு வந்தார்கள். ஒருவள் ப்ரபாவின் தலையை வாரிப் பின்னத் தொடங்கினாள். ப்ரபா தலைகுனிந்து கொண்டே கண்களிலிருந்து கண்ணீரைப்பெருக்கினாள்.

ரமணி கொஞ்சம் திடுக்கிட்டவளாய், "அக்கா, இம்மாதிரி மனதைப் புண்படுத்திக் கொள்ளாதே, நீயே ப்ரியப்பட்ட கணவனை அடையப் போவதற்குள் ஏன் இந்தமாதிரி வருத்தப்படுகிறாய்?" என்றாள்.

ப்ரபா அவள் பக்கம் பார்த்துக்கொண்டே "இல்லாவிட்டால் நான் நினைத்தபடியா முடியப்போகிறது?" என்றாள்.

ரமணி கோபமடைந்து கம்பீரத்துடன் "கிடைக்காமல் போய் விடுமா? கட்டாயம் அவரே தான் உன் கணவராவார்" என்றாள்.

ப்ரபா வருத்தத்துடன் "என் மனதில் இடம் பெற்றுக் கொண்ட சுகுமாரனுடன் இன்று கலியாணம் நடைபெறுது" என்றாள்.

ப்ரபாவின் தலை மயிரைச் சிக்கல் எடுத்துக்கொண்டே "சூரியன் உதயமாவதற்குமுன் எப்படி இருள் சூழ்ந்து கொள்கிறதோ அதுபோல் உனக்கு உன் இஷ்டம் நிறைவேறுவதற்குள்ளாகவே மன வருத்தமும் உண்டாகிவிட்டது" என்றாள் ரமணி.

"இல்லை, அந்தப்பேச்சில்லை. நான் காலை எழுந்தது முதல் என் மனம் எதனாலோ சஞ்சலப் பட்டுக் கொண்டிருக்கிறது. வலது கண் துடித்துக் கொண்டே இருக்கிறது. ராத்ரி முழுவதும் பல விதமான கெட்ட ஸ்வப்னங்கள் தென்பட்டன. எதனாலோ என் மனதில் இன்று கட்டாயம் ஏதாவது தடங்கல் ஏற்படும் என்று தோன்றுகிறது. உனக்கு ராணா போஜ ராஜனைத் தெரியுமா?"

சூரியன் மறைய, இருளும் சூழ்ந்து கொண்டது. சிறிது நேரத்திற்கெல்லாம் நக்ஷத்திரங்கள் வைரங்கள் போல பிரகாசித்தன. ஜால்வாடில் சிறு குழந்தை முதல் தொண்டு கிழவன் வரை எல்லோரும் மாப்பிள்ளையை எதிர் பார்த்துக் கொண்டிருந்தார்கள். ஆண்களும் பெண்களும் நல்ல ஆடைகள் அணிந்து கொண்டு நகரத்தைச் சுற்றிச் சுற்றி வந்தது, அந்த நகரத்தை ஒரு புது மாதிரியாக அலங்காரம் செய்தது போல் இருந்தது. யுவதிகள் ஆடிப் பாடிக் கொண்டு குதூகலமாக இருந்தார்கள். ஆயிரக்கணக்கான ஸ்திரீகள் கல்யாணப் பிள்ளை வரும் திக்கையே பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

திடீரென்று பீதியை உண்டாக்கும் வண்ணம் சேனைகள் வந்தன. ஜனங்கள் திடுக்கிட்டனர், கண் மூடித் திறப்பதற்குள் அரண்மனையின் எதிரிலேயே ஒரு பெரிய படை வந்து நின்றது. ஜனங்கள் வெகு ஆச்சரியமடைந்தார்கள்—அது மந்தார தேசத்தரசன் சேனை அல்ல, ஆனால் ராணா போஜனின் சேனை!

ஜனங்கள் என்ன செய்வது என்று தெரியாமல் பிரமித்து நின்றார்கள். அதற்குள் சித்தோடின் சேனை அரண்மனையைச் சூழ்ந்து கொண்டது. உடனே சிலர் கையில் கத்தியை உருவிக் கொண்டு கலியாண மண்டபத்தினுள் புகுந்தார்கள். ராணாவும் உள்ளே போனான். உடனே ஜயபேரிகை முழங்கியது.

ப்ரபா தன் தோழிகளுடன் தோட்டத்திலேயே உட்கார்ந்திருந்தாள். அந்த பேரிகைகளின் சப்தத்தைக் கேட்டு திடுக்கிட்டு விட்டாள். அதற்குள் ராவ் சாஹெப் ஓடி வந்து, "ப்ரபா! ராணாபோஜன் நம் அரண்மனையைச் சூழ்ந்து கொண்டான். நீ சட்டென்று நமது அந்தரங்க அறைக்குச் சென்று கதவைத் தாழ்ப்பாள் போட்டுக்கொள். நாம் நிஜமான க்ஷத்ரிய வம்சத்தில் பிறந்தவர்களாக இருந்தால் அவனைக் கட்டாயம் முறியடிக்காமல் விடமாட்டோம்" என்று அவர் சொல்லிக்கொண்டிருக்கும் பொழுதே ராணாவும் சில வீரர்களும் அவர் எதிரில் வந்து நின்றார்கள்.

"சித்தோடுக்காரர்கள் தான் உயிருக்குத் துணிந்து வந்திருக்கிறார்களே. ஆனால் நாங்களும் உண்மையான க்ஷத்ரியர்களாக இருந்தால் ராஜகுமாரியை உடன் அழைத்துக் கொண்டு போகாமல் வீடு திரும்பமாட்டோம்" என்று ராணா கம்பீரமாகக் கூறினான்,

கிழ ராவ் சாஹேப்பின் கண்களில் நெருப்புப் பொறி பறந்தது. அவர் கத்தியை எடுத்து ராணாவின் மீது வீசினார். ஆனால் அவன் அதைத் தடுத்துக் கொண்டே, 'ப்ரபா! நீ எங்களுடன் வருகிறாயா?" என்று கேட்டான்.

ராவ் சாஹேப்பைச் சிலர் வந்து பிடித்துக்கொண்டார்கள்.

ப்ரபா தலையைக் கீழே சாய்த்துக்கொண்டு, "ஹும்! வருகிறேன்" என்றாள்.

ராவ் சாஹேப் திமிறிக் கொண்டு படபடப்புடன், "ப்ரபா! நீயும் ஒரு க்ஷத்ரியப் பெண்ணா?" என்று கேட்டார்.

ப்ரபாவின் கண்களில் நீர் ததும்பியது. தடைப்பட்ட குரலில் "ராணாவும் க்ஷத்ரியன் தான்!" என்றாள்.

ராவ் சாஹேப் மிகுந்த கோபத்துடன், "மானம் கெட்டவளே!" என்றார்.

பலியிடுவதற்காகக் கட்டப்பட்டிருக்கும் மிருகம் கத்தியைக் கண்டு பயந்து எப்படி நாலா பக்கமும் பார்க்குமோ, அது போல் ப்ரபா பார்த்தாள். பிறகு ராவ் சாஹேபின் பக்கம்

"வாடின புஷ்பம் எப்போதும் மலர்வது கிடையாது". ப்ரபாவை திருப்தி பண்ண ராணா போஜ ராஜ் பலவித ஏற்பாடுகளைச் செய்து வைத்தான்: சௌகர்யத்திற்குக் குறைவில்லை: வசதிக்கும் வரையறை இல்லை. எவ்வளவிருந்தும் ப்ரபாவின் கவலையும் கலக்கமும் அவளைவிட்டகலவில்லை: ஒரு நாள் ப்ரபா ராணாவைக் கூப்பிட்டனுப்பினாள்: இருவரும் உள்ளத்தில் இருப்பதை ஒளியாமல் எடுத்துரைத்தனர். ப்ரபாவும் ராணாவும் சந்தித்ததெவ்விதம்? இருவரும் காதல் கொண்டிருந்தனரா? — இவ்வினிய ஹிந்திக் கதையை மொழிபெயர்த்தவர் ஸ்ரீ வி. எஸ். வெங்கடேசன்.

பார்த்து, "நான் எந்த நாட்டின் மடியில் வளர்ந்தேனே அந்த நாட்டை ரத்தக்கரையாகச் செய்வதா?" என்று கேட்டாள்.

ராவ்சாஹெப் கோபத்தால் கைகால்கள் நடுங்க "க்ஷத்ரியர்கள் ரத்தம் அவ்வளவு சுலபத்தில் வெளிவராது. சத்யத்திற்காக உயிரைத் தியாகம் செய்வது அவர்களுடைய தர்மம்!" என்ருர்.

ப்ரபாவின் கண்கள் சிவந்தன, முகம் மாறுதலை அடைந்தது.

"க்ஷத்ரியக் கன்னிகையின் மானத்தைக் காப்பாற்ற உங்களால் முடியும். ஆனால் அதற்காக ரத்த வெள்ளம் ஓடுவது கூடாது" என்ருள் பிரபா.

ராணு பிரபாவைத் தோளில் தூக்கிககொண்டு மின்னலைப் போல் வெளிப்புறத்திற்கு வந்தான். ப்ரபாவைக் குதிரை மீது ஏற்றினன். தானும் அதில் ஏறிக்கொண்டான். மற்ற வீரர்களும் குதிரை மீது ஏறி ராணுவைப் பின் தொடர்ந்தார்கள். ராவ் சாஹெப்பின் இருநூறு வீரர்கள் இறந்து பூமியில் விழுந்து கிடந்தார்கள்!

இரவு பத்துமணிக்கு மந்தார் தேசத்து அரசகுமாரன் சேனைகளுடன் வந்தார். ஆனால் அந்த சோக சமாசாரத்தைக்கேட்டு அவர்கள் தம் ஊருக்குத் திரும்பினர்கள். ஜால்வாட் முழுவ்தும் நாசமாகிவிட்டது போல் நிசப்தமாக இருந்தது.

3

ப்ரபா சித்தோடின் அரண்மனை அந்தப் புறத்தில் தனிமையாக உட்கார்ந்து எதிரிலிருந்த அரச இலையைக் கிழித்துக்கொண்டிருந்தாள, சந்தியா சமயம். பல ஜாதிப் பறவைகள் பலவிதமான குரலில் பாடிக்கொண்டிருந்தன. அந்த சமயம் ராணு உள்ளே பிரவேசித்தான். ப்ரபா திடுக்கிட்டு எழுந்து நின்ருள்.

"ப்ரபா! நான் மிகவும் துன்மார்க்கன். என்னுடைய சேனை பலத்தினல் உன்னை உன் பெற்ருேரிடமிருந்து பிரித்து எடுத்து வந்துவிட்டேன். ஆனல் அதையெல்லாம் உன் பேரிலிருக்கும் காதல்பற்றிதான் நான் செய்தேன். நீ சிரித்து ஆனந்தமாக என்னுடன் பேசுவாய் என்பது தான் என் எண்ணம், நான் உன்னை எப்பொழுது ரணசோட்ஜியின் மந்திரத்தில் பார்த்தேனே அன்று முதல் உன்னை எப்படி அடைய முடியும் என்ற கவலையே என்னை வாட்டியது. உன்னை அடைய வேறு ஏதாவது மார்க்க மிருந்தால் நான் அந்த மாதிரி முரட்டுத் தனத்தில் இறங்கி இருந்திருக்க மாட்டேன். உன்னுடைய தகப்பனர் எனக்குப் பல விதத்தில் உதவி செய்திருக்கிருர். உனக்குக் கல்யாணம் நிச்சயமாகிவிட்ட விஷயம் எனக்குத் தெரிந்ததும்—நீ வேறு ஒருவனுக்கு அடைக்கலமான பிறகு நான் உன்னை நினைப்பது கூட பாபமாகும். அதனல் தான் நான் கடைசியாக யோசித்து அந்த மாதிரி பலாத்காரம் செய்ய முன் வந்தேன். இந்த வாழ்வெல்லாம் எனக்கு எப்பொழுதும் நிரந்தரமாக இருக்கும் என்று எண்ணிகொண்டிருக்கிறேன். நான் என்னுடைய காதலுக்கு முன் உன்னுடைய வாழ்க்கையைத் துச்சமாக நினைத்து விட்டேன். ஆனல் "காதல்" என்பது தனிப்பட்ட ஒரு மறை பொருள். அப்பொழுது இருவர் மனமும் ஒத்து வாழ எண்ணுகிறதோ அப்பொழுதுதான் "பிரேமை" என்பது உற்பத்தியாகிறது—இல்லையேல் அவை உண்மையானதல்ல. நீ என்னை உன் மனப்பூர்வமாகக் காதலிப்பாய் என்றுதான் நான் நம்பியிருக்கிறேன். நீ என்னை காதலித்த பிறகுதான் உன்னை நான் அடைய முடியும். எவன் ஒருவன் அம்மாதிரி காதல் தாகத்தால் அலைகிருனே அவன் அடையும் கஷ்டத்திற்கு ஒரு எல்லையே கிடையாது. நானும் அந்த மாதிரி அலைபவன் தான். மீரா என்னுடைய ஸஹதர்மிணி, அவளுடைய பிரேமைக்குக் கங்கு கரையே கிடையாது. அவளுடைய அன்பே என்னை பவித்திரமாக்கப் போது மானது. ஆனல் எந்த ஹ்ருதயத்தில் பகவானுக்கு இடம் ஏற்பட்டதோ அவ்விடத்தில் எனக்கு இருப்பிடமேது? நீ என்னைக் கேட்கலாம்: "உனக்குக் காம வெறி அதிகமாகி விட்டால் உலகத்திலுள்ள க்ஷத்ரியப் பெண்களையெல்லாம் இம் மாதிரியா செய்வது?" என்று. வேறு எந்த ராஜ குலத்திலும் உன்னைப் போல அழகுடையவர்கள் கிடையாது. மேலும் சித்தோடின் அதிபதியாக நான் இருக்கும்வரை, வேறு யாரும் உன்னை மணக்க விடமாட்டேன். ஆனல் இதற்குப் பதிலும் நீ தான்! ஒரே ராணுதான் இருக்கிருன்!! மேலும் ஒரே ஒரு ப்ரபாதான்! என்னுடைய அதிர்ஷ்டத்தில் அந்தப பிரேமானந்தத்தைப் பற்றி எழுதியிருக்கிறதோ என்னமோ, ஆனல் நான் மாத்திரம் என்னுடைய ஜன்மம் கடைத்தேற அதையே நம்பியிருக்கிறேன். ஆனல் அதை எண்ணி உட்கார்ந்து கொண்டிருப்பது ஆண்களுக்கு அழகல்ல. எனக்கு அந்தத திர்மானத்தைச் சொல்லும பொறுப்பு உன் கையில் தான் இருக்கிறது" என்ருன் ராணு போஜன்.

ப்ரபாவின் பார்வை பூமியின் மீதே இருந்தது. அவளுடைய மனம் பறவைகளின் இன்பமயமான குரலில் லயித்திருந்தது. அவள் ஜால்வாடின் மனிதர்களைக் காப்பாற்ற ராணுவுடன் வந்தாள்! ஆனல் அவளுடைய மனதில் ராணுவைப்பற்றி அதிக வஞ்சம் இருந்தது. ராணு தன் எதிரில் வந்தால் "க்ஷத்ரிய தர்மத்தைக் கெடுத்தவன், மடையன், துராத்மா, மோகம் பிடித்தவன்" என்று சொல்லி அவனைக் கண்டதுண்டமாக வெட்டிவிட வேண்டும் என்று மனதில் நினைத்துக்கொண்டிருந்தாள். அவன் தன்னிடம் பலாத்காரம் செய்வான் என்றும் நினைத்துக் கொண்டிருந்தாள். அதற்காக அவள் ஒரு கூறிய கத்தியையும் தயார் படுத்தி வைத்திருந்தாள், பலாத்காரம் நடக்கும் பட்சத்தில் முதலில் ராணுவைக் கொன்று விட்டு பின்பு தானும் உயிரை மாய்த்துக் கொண்டு விடுவது என்று திர்மானித்

ரூ. 50,000 மதிக்கப்பெற்ற நகைகள்

பொது மக்களுக்கு அளிக்கப்படுகின்றன



"லண்டன் நியூ கோல்டால்" இப்பொழுது புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டவை. இதை உலகத்தின் எட்டாவது அதிசயம் என்றே சொல்லலாம்- இது இப்பொழுது இந்தியா முழுவதும் பிரபலமாகிவிட்டதால், இதை இன்னும் பிரபலப்படுத்தவேண்டிய அவசியமுமில்லை. பொதுமக்களும், பத்திரிகைகளும் இதையே அதிகமாகப் புகழ்கிருர்கள். இந்த கெமிகல் தங்கத்தின் நிறம் மாருமலிருப்பதால் இதிலிருந்து நல்ல நகைகள் செய்யலாம்.

இதை பிரபலப்படுத்துவதற்காக இப்பொழுது 6 தோல "லண்டன் நியூ கோல்ட்" 2ஜதை வளையல்கள் 2 ஜதை தோடுகள் 2 மோதிரங்கள் மிகவும் அழகாகச் செய்யப்பட்டதுமான நகைகள் சாம்பிளாக அனுப்பப்படும் இந்த குறைந்த கட்டணம் சில நாட்களுக்குத் தான். உடனே எழுதவும்.

இலவசம்:—விவரங்கள் அடங்கிய படங்களுடன் கூடிய காட்லாக் இனம்.

London Commercial Co.,

(EAB) Post Box 165. (S M.M) LAHORE (India)

பாத்ருடுவின் "பாலசஞ்சீவினி"

குழந்தைகளின் ஈரல் குலைக்கட்டிகளை குணப்படுத்தும்

Dr பிள்ளா பாபய்ய பாத்ருடு & Bros.,

11, தெற்கு மாடவீதி, மயிலாப்பூர். போன் 86257. :: திருச்சி பிராஞ்சு: 81, ஆண்டார் தெரு, தெப்பக்குளம்.

41 வருட அனுபவம் உள்ளது.

இழந்துபோன பலத்தை திரும்பக் கொடுக்கும்.

தாது புஷ்டிக்கி நிகறற்றது

பழநி ஆர். எம். கே. **தங்க் மாத்திரை.**

ஒரே குளிகையில் பரீக்ஷிக்கலாம்

இந்தப் பெயர் ரிஜிஸ்டர் செய்யப்பட்டிருக்கிறது.

தாது புஷ்டிக்கி இதற்கு நிகரான மருந்து ஒன்றுமே யில்லை. தாதைக்கட்டி, ஆண்மைக் குறைவை நீக்கி நரம்புகளுக்கு பலத்தைக் கொடுத்து உங்கள் மனக் கவலையை நீக்கி, தமபதிகளை மகிழ்விக்கச் செய்யும். லாகிரி சேராதது. இதை ஆண், பெண் சகலரும் சாப்பிடலாம். நாத, விந்தில், கருவமைக்கும் சக்தியையும் உண்டாக்கும்.

100–வேளை தங்க மாத்திரையும் அனுபானம் மகாமன்மத காமகேசரி சாலாமிசிரி அல்வா 100-உருண்டையும் } ரூ. 10

25-நாள் 50-வேளை ஷை மருந்துகள் ,, ரூ. 5

(தபால் செலவு வேறு)

வைத்திய ஆசிரியர், **ஆர். எம். கே. வேலுசாமி,**

சித்த வைத்திய சாலை, பழநி. PALNI (S. I. R.)

பிராஞ்சுகள் : 16, திருவல்லிக்கேணி ஹை ரோட், மதராஸ். 68, செட்டியார் தெரு, கொழுப்பு.

சிறந்த மூன்று ஆயுர்வேத ஔஷதங்கள்

I.D.L.12. டானிகாப் (F) இருமல், க்ஷயம், சுவாசத்திற்கு டானிக்
I.D.L.42. டிகாசோ ரக்தசுத்தி, ரக்தவிருத்தி, உஷ்ணசமன டானிக்
I.D.L.22. மகரத்வஜம் பலவிருத்திக்கும் ஆரோக்யத்திற்கும்

(வியாதி விபரம் தபால் பில்லையுடன் எழுதி சிகிச்சை பெறுக.)

சோல் ஏஜண்ட்ஸ்:-யுனைடேட் கன்ஸர்ன், 54, பந்தர் தெரு, மதராஸ்

திருந்தாள். ஆனல் ராணுவினுடைய வினயமான பேச்சையும் அவனுடைய உண்மையான வசனத்தையும் கேட்டு அவள் அந்த மாதிரி செய்ய இயலவில்லை. அவளுடைய கண்களில் நீர் ததும்பியது. ராணு சிறிது நேரம் அங்கு உட்கார்ந்திருந்தான். பிறகு, மௌனமாக எழுந்து போய் விட்டான்.

ப்ரபா சித்தோடிற்கு வந்து இரண்டு மாதங்கள் ஆகிவிட்டன. ராணு திரும்பவும் அவளிருக்கும் இடத்திற்கு வரவில்லை. அதற்குள் அவனுடைய மனதில் என்ன தோன்றிவிட்டதோ! ஜால்வாடின் ஆக்ரமிப்பு நடப்பதற்கு முன் அந்த விஷயங்கள் மீராபாய்க்குத் தெரியாது. ராணு அந்த விஷயத்தை மர்மமாக வைத்திருந்தான். ஆனல் அந்தத் துராக்ரக காரியத்தினல் மீரா மிகவும் வெட்கமடைந்து விட்டாள்: மேலும் ராணுவுக்கும் கொஞ்சங் கொஞ்சமாகப் பிரபா தன்னைக் காதலிக்க மாட்டாள் என்று தெரிந்து விட்டது! அப்படியிருந்தும் அவன் அவளுக்கு வேண்டிய சுக வசதிகளையெல்லாம் தடையில்லாமல் செய்து வந்தான். ஆனல் அவள் அவன் பக்கம் பார்வையைக் கூடத் திருப்புவதில்லை. ப்ரபாவிடத்திலிருந்து தாதிகளின் மூலமாக அதே விருப்பமில்லாத சமாசாரத்தை ராணு கேட்டு வந்தான். வாடின புஷ்பம் எப்பொழுதும் மலர்வது கிடையாது! அவனுக்கு எப்பொழுதாவது அந்தக் கெட்ட செய்கையைப்பற்றி நினைப்பு வரும்! உடனே அவன் அதற்காக வருத்தப்படுவான். ஆனல் ப்ரபாவின் முக பிம்பம் அவன் கண் முன் தோன்றிவிட்டால், உடனே அந்த எண்ணங்களெல்லாம் ஓடி மறைந்து "ஒரு சுந்தரியின் காதல் அவ்வளவு சுலபத்தில் கிட்டி விடுமா? எப்படியிருந்தாலும் என் மனதில் உள்ளபடி சீக்கிரத்திலேயே நடைபெற்று விடும்" என்ற எண்ணங்களைத் தூண்டிவிடும்.

ப்ரபா தனிமையாகவே உட்கார்ந்து விசனித்துக் கொண்டிருந்தாள். அவளை சந்தோஷப் படுத்துவதற்காக அநேக பாடகிகளையும், நாட்டியக்காரிகளையும் அவளருகில் வைத்திருந்தான். ஆனல் அவளுக்கு ஆட்டமும் பாட்டமும் அருவருப்பாக இருந்தன. அவள் எந்த நேரமும் கவலையாகவே இருந்தாள்.

ராணுவினுடைய பயபக்தியெல்லாம் ஒரு விதமாகப்போய் விட்டன. மேலும் அவனுடைய எண்ணங்கள் அவன் கண் முன் வந்து நின்றன. அவனுக்குச் சாதாரண பேச்சில் மனம் சாந்தியடைவதில்லை. அவன் யார் பேச்சுக்கும் பதில் சொல்லாமல் இருந்து விடுவான், ப்ரபா அவனுடையவளாக ஆகப் போவதைப்பற்றி அவன் ஆனந்தமடைந்தான். அவள் ராணுவுக்கு எதிரில் நின்று பதிலும் சொல்ல ஆரம்பித்தாள். அவள் சில சமயங்களில் தன்னுடைய கஷ்டங்களை நிவர்த்திக்குமாறு சண்டையும் போடுவாள்.

ஆனல் இப்பொழுது எதற்கு அந்த தர்க்கமெல்லாம்? அவள், தான் ராவ் சாஹேபினுடைய பெண் என்று நினைத்தாள்—குடும்ப விவகாரங்களில் ராணுவினுடைய 'ராணி' ஆகிவிட்டாள். 'இப்பொழுது தப்பித்துக்கொண்டு போனல் எங்கு போய்த் தங்குவது? நான் எப்படி என் முகத்தை வெளியிலிருப்பவர்களுக்குக் காட்டுவது? இதனல் எனக்கு மாத்திரமில்லை -க்ஷத்ரிய குலத்திற்கேஒரு அபகீர்த்தி உண்டாகிவிடும். மந்தார் தேசத்து இளவரசர் என் உண்மைக் காதலர். ஆனல் இப்பொழுது அவர் என்னை ஏற்றுக் கொள்வாரா? அப்படி அவர் என்னை மணந்துகொண்டாலும் உலகம் அவரைத் தூற்றும். பிறகு அவர் என்னை வெறுக்க நேரிடும். என்னல் தன் குலத்திற்கே களங்கம் ஏற்பட்டது என்று அவர் நினைப்பார். இங்கிருந்து தப்பித்துக்கொண்டு ஓடிவிடலாமா? ஆனல் எங்கே போவது? தகப்பனரிடத்திற்கா?—அங்கு எனக்கு இடமில்லை! மந்தார் தேசத்து இளவரசர் இடத்திற்கா? அதனல் எனக்கும் அவருக்கும் பெருத்த அவமானம் ஏற்படும். இல்லாவிட்டால் பிச்சைக்காரியாகிவிடலாமா? அப்படிச் செய்தாலும் ஜனங்கள் கேலி தான் செய்வார்கள். கடவுள் கிருபையால் க்ஷத்ரிய வம்சத்திற்குக் களங்கம் ஏற்படுத்தியவள் என்னும் பெயர் வராமலிருக்கட்டும். க்ஷத்ரிய வம்சத்தினர் மானத்திற்காகத் தங்கள் ரத்தத்தை ஆறு போல் பெருக்கச் செய்திருக்கிருர்கள். அவர்களுடைய கணக்கிலடங்காத பத்னிகள் பர புருஷனின் முகத்தைப் பார்க்காமல் காய்ந்த மரத் துண்டைப்போல் எரிந்து சாம்பலாகி விட்டார்கள். கடவுளே! எனக்காக எந்த ராஜகுமாரனும் வெட்கத்தால் தலை குனியும்படி செய்யாதிருக்கவேண்டும். நான் இனி இங்கேயே இருந்து விடுவேன். ராணுவின் அக்ரமங்களைச் சகிப்பேன்; மனதை அடக்கிக்கொள்வேன்—இறந்தும் விடுவேன்—ஆனல் இதே இடத்தில்! விவாகம் என்னமோ நான் நினைத்தவருடன் ஆகிவிட்டது. மனதில் அவரை நினைத்துக்கொண்டிருப்பேன். ஆனல் அந்தச் சொல்லை தொண்டையிலிருந்து மேல் வரவிடமாட்டேன்" என்று ப்ரபா பலவிதமாக யோசித்துக் கொண்டிருந்தாள்.

ஒருநாள் ப்ரபா மிகுந்த சிடுசிடுப்புடன் தாதிகள் மூலம் ராணுவைக் கூப்பிட்டனுப்பினள். அவனும் வந்தான்; அவனுடைய முகம் எதனலோ வாட்டமடைந்திருந்தது, ஆனல் அவன் ஏதோ யோசித்துக் கொண்டிருந்தான். ப்ரபா ஏதோ கேட்க விரும்பினள். ஆனல் அவனுடைய வாட்டமடைந்த முகத்தைப் பார்த்ததும் அவள் கோபமெல்லாம் எங்கோ பறந்துவிட்டது. ஆனல் ராணுவோ அவளுக்குப் பேச இடங்கொடுக்காமல் அவனே பேச ஆரம்பித்தாள்,

"ப்ரபா, நீ இன்று என்னைக் கூப்பிட்டனுப்பினய். அது என்னுடைய அதிர்ஷ்டம்தான். என் உணர்ச்சியை நீ பிடுங்கிக் கொண்டு விட்டாய். ஆனல் நான் உன் உத்திரவைப் பெற்றுக்கொண்டுதான் இங்கு வந்திருக்கிறேன் என்று நினைக்கமாட்

இருமல், சளி, மார்புக் கோளாறுகளை ஒழியுங்கள்



இருமல் ஜளிப்பு, தொண்டை உபத்திரவங்களால் அவதிப்பட்டால் பெப்ஸ் கிருமிநாச சுவாச மாத்திரைகள் நிச்சய நிவாரணியாகும.

வாயில் கரைந்தவுடன் ஏற்படும் மருந்து பூர்வமான ஆவி சுவாசத்துடன் கலந்து, சுவாசப்பைக்குள் செல்லுகின்றது தொத்து கிருமிகளை பெப்ஸ ஒழித்து விடும. சுவாசக குழாய் அடைப்பை நீக்கி, தொண்டைக்கு சமனமூட்டி பாதுகாக்கின்றது.

எல்லா மருந்து வியாபாரிகளும் பெப்ஸ் ரூ 1. வீதம் விற்கின்றனர் ஏஜண்டுகள்: மெஸ்ர்ஸ் தாதா & கம்பெனி பி டி. மதராஸ்.

எப்பொழுதும் பெப்ஸ் உபயோகியுங்கள்.

PEPS

கிருமி சுவாச மாத்திரைகள்

அன்றுவேலையைநன்றுதுவக்குங்கள்

நரஸூஸ்

டீ அல்லதுகாபி அருந்தி

அன்று வேலைகளை நன்று செய்ய, காலையிலெழுந்தவுடன் அரை குறை தூக்கத்தையும், சோம்பலையும் துரத்தி, உற்சாகத்தையும் ஊக்கத்தையு மளிக்கவல்லது ஒரு கப் காபி அல்லது டீதான். வாங்கும்போது நரஸூஸ் காபி, டீயை வாங்கத்தவருதீர்கள். அவைகள் எப்பொழுதும் உயர்ந்தவை.

எந்தத் தரத்திலும், எவ்வளவு வேண்டுமானலும் இந்தியா, பர்மா, சிலோனில் ஏந்த பாகத்திற்கும் அனுப்பப்படும்.

மற்ற விவரங்களுக்கு கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதவும்:—

நரஸூஸ் மான்யுபாக்சரிங் கம்பெனி

ஹெட் ஆபீஸ்:—சேலம். MNK.10 TM



மத்யதரைக் கடலில் லிபியாவுக்காக 10000 பேர் கொண்ட துருப்புகளை ஏற்றிச் சென்ற கப்பல்களை பிரிட்டிஷ் சப்மரீன்கள் சமுத்திரத்தில் மூழ்கடித்தன இந்தக் கப்பல்களுக்குப் பலத்த பந்தோபஸ்து இருந்தபோதிலும், அவை நாசமாக்கப்பட்டன.

டேன். நீ என்னை எதற்காகக் கூப்பிட்டிருக்கிருய் என்பது எனக்குத் தெரியும். இதோ உன் குற்றவாளி உன் எதிரிலேயே நிற்கிருன். அவனுக்கு என்ன தண்டனை கொடுக்க எண்ணுகிருயோ, அதைக் கொடுத்துவிடு, எனக்கு இதுவரை இங்கு வர மனம் துணியவில்லை, அதனுடைய காரணமும் இந்தத் தண்டனையின் பயன் தான். நீ க்ஷத்ரிய ஸ்திரீ. மேலும் க்ஷத்ரியர்களுக்கு மன்னிக்கவே தெரியாது. ஜால்வாடிலிருந்து எப்பொழுது நீ என்னுடன் வருகிறேன் என்று சொன்னுயோ அப்பொழுதே நான் உன் சுதந்திரத்தைப் பிடுங்கிக் கொண்டேன், நீ என்மீது அன்பு வைத்திருக்கிருய் என்றும் அந்த அன்பை எப்படி நான் அனுபவிப்பது என்ற வழி தெரியாமல் தவிப்பதாயும் என் மனம் எண்ணுகிறது. நான் இந்த ஒரு மாதமாக எப்படித் தவித்துக் கொண்டிருக்கிறேன் என்பது உனக்குத்தெரியாது! இரவு பகல் தூக்கமில்லாமல் இதே கவலையாக இருக்கிறேன். வேடனைக் கண்டு பறவைகளும் மான்களும் எப்படிப் பயந்து ஓடுமோ அதே போலத்தான் என் கதியும்! நான் பல தடவை இங்கு வந்திருக்கிறேன். நீ அப்பொழுதெல்லாம் விசனமாக மூலையில் உட்கார்ந்திருப்பாய். அந்த சமயங்களில் உன் அறையில் கால் எடுத்து வைக்கக் கூட எனக்குத் தைரியம் ஏற்படுவதில்லை. ஆனுல் இன்று நான் அழைக்கப்படாத விருந்தாளியல்ல, நீ தான் கூப்பிட்டனுப்பினுய், ஆகவே உன் அதிதியைத் திருப்தி செய்வது உன் கடமை தான். உண்மை மனத்துடனுவது, அல்லது வெறும் வெளிவேஷத்திலாவது, பேச்சிலாவது. உன்னுடைய மனவேதனைகளை அடக்கிக்கொண்டு அதிதியைத்திருப்தி செய். வாழ்க்கையில் விரோதியினுடைய ஆதரவு நண்பனுடையதை விட மேலானதாகும்.

"ப்ரபா! கணநேரத்திற்குக் கோபத்தை விலக்கி விட்டுத் தீர ஆலோசனை செய், நான் உன்னை உன் தாய் தகப்பனுரிடமிருந்து பிரித்துக்கூப்பிட்டு வந்ததற்காக நீ எனக்கு என்ன சாபம் கொடுத்தாலும் கொடு. ஸ்ரீ கிருஷ்ணபகவான் ருக்மிணி தேவியை எப்படித் தூக்கி வந்தார் என்பது உனக்குத் தெரியுமா? க்ஷத்ரியவம்சத்தில் அது ஒன்றும் புதிதில்லை. நீ வேண்டுமானுல் ஜால்வாடின் குடும்பத்தவர்களுக்கும், ராஜகுலத்திற்கும் பெருத்த அவமானம் ஏற்பட்டுவிட்டது என்று சொல்லலாம். ஆனுல் அம்மாதிரி சொல்வது சரியாகாது. அன்று ஜால்வாடில் உள்ளவர்கள் நடந்துகொண்ட முறை தான் ஆண்களுக்கு அழகானது, அவர்கள் நடத்தையைக் கண்டு நாங்கள் எல்லோரும் ஆச்சரிய மடைந்து போனேம். அவர்கள் நடந்துகொண்ட முறை மிகவும் தப்பானது என்று எண்ணினுல் அது அவர்களின் தப்பல்ல! வீரர்கள் எப்பொழுதும் தோல்வியடைய மாட்டார்கள். நாங்கள் ஒரே நோக்கத்துடன் உன்னை அபகரித்துக் கொண்டு வர எண்ணியிருந்ததால் வரும்பொழுது சேனை பலத்தை அதிகப்படுத்திக் கொண்டு வந்திருந்தோம். ஜால்வாடில் உள்ளவர்கள் அம்மாதிரி எதிர்பாராத சம்பவம் நடக்குமென்று எண்ணுது கலியாண விஷயமாக ஆனந்தத்துடன் இருந்தார்கள். அதனுல் தோல்வியுற்ளுர்கள். நாங்களும் உன்னைக் கூப்பிட்டுக் கொண்டு உடனே புறப்பட்டு வராதிருந்தால் உன் தகப்பனுர் சொன்னபடி நாங்கள் அனைவரும் முறியடிக்கப்பட்டிருப்போம்—ஒரு சித்தோடின் வீரனும் பிழைத்திருக்க மாட்டான். ஆனுல் அந்த அக்ரமச் செயலைப் பற்றிக் கடவுள் எனக்களிக்கும் தண்டனையை கூட பயப்படாமல் ஏற்றுக் கொள்வேன். நான் செய்தது அக்கிரமந்தான். அதற்காக நான் என் மனதினுள்ளேயே வெட்கப் படுகிறேன். ஆனுல் எது நடக்க வேண்டியிருந்ததோ அது நடந்துவிட்டது. நான் செய்த அந்த அக்ரம விளையாட்டுகள் எல்லாம் உனக்காகத்தான் என்று உன் மீது பழியைப் போடுகிறேன். எனக்கு உன் மனதில் எந்த விதமான இடம் கொடுத்தாலும் அதை நான் ஸ்வர்க்கபோகமாக எண்ணுவேன். ஆற்ருேடு போகிறவனைக் கரையில் தூக்கி விட்ட புண்ணியம் உனக்குக் கிடைக்கும். என் நிலைமை அப்பேர்ப்பட்டது தானே?" என்ருன் ராணுபோஜன்.

"இல்லை" என்ருள் பிரபா.

"ஜால்வாடிற்குப் போக எண்ணுகிருயா?"

"இல்லை."

"மந்தார் தேசத்து அரச குமாரனிடம்?"

"கனவிலுமில்லை!"

"ஆனுல், உன் வருத்தமான முகத்தைப்பார்க்க என்னுல் சகிக்கமுடியவில்லையே!"

"தாங்கள் இந்தக் கஷ்டங்களிலிருந்து சீக்கிரத்திலேயே விடுதலை அடைந்து விடுவீர்".

ராணு கலவரத்துடன் "எப்படி உன் இஷ்டமோ அப்படியே செய்" என்று சொல்லிக் கொண்டே வெளியே போய் விட்டான்.

(அடுத்த இதழில் முடிவுபெறும்)

உங்கள்
அபிமானம் பெற்ற கடை
வெள்ளி சாமான்கள்
* சமீபத்திய மோஸ்தர்
* ரகம்
* விலைக்கு
உத்திரவாதம்.
ஜி. ஸ்ரீராமுலுசெட்டி & ஸன்
184, சைனு பஜார், மதராஸ்.
போன் : 3268.

கவலைவேண்டாம்
உங்கள் வியாதி எதுவாயிருந்தாலும் சரி; உண்மையான நல்ல மருந்து வேண்டுமானுல், அடியில்கண்ட நமக்குத் தெரியப்படுத்தினுல் நிவர்த்திக்க தக்க வழிகளைத் தெரிவிப்போம்.
மலையப்பசாமி
வைத்தியசாலை,
பழனி. S. I.

CATARACT
and all Eye diseases cured radically by COCONAUT Brand LOTUS Honey World-wide Reputed and Tested.
½ Dram Re, 1-4. 1 Dram Rs. 2
ULCERINE
A sovereign remedy for all sorts of Boils, Piles, Sinus, Fistulls, Carbuncles, Gangrenes, Foul-ulcers operated wounds, etc. Bottle Rs. 1-4 For these products All India Karachi Congress & Lucknow Govt. Exhibitions awarded medals Free details from:
DADHA & Co., P. T. Madras.

காந்தி ஜோஸியர்

ஒரு வருஷப் பலன் மாதவாரி ரூ. 3.
ஆருடம் 5 கேள்விகளுக்குப் பதில் ரூ. 1.
வி. பி. செலவு அணு 5.
ஜனனகால விவரம் or எழுதும் நேரம், சுமார் வயது தேவை.
ஹனுமான் ஆச்ரமம், திருத்தணி S.I.

அமிர்தாஞ்சன்

போலிகள் எச்சரிக்கை
"சுதேஹமித்திரன்"
எல்லாவித நோய்களையும் தீர்க்கும்
அமிர்தாஞ்சன் லிமிடெட்,
பம்பாய் - சென்னை - கல்கத்தா.

பிரகாசம் கம்பெனியாரின் உயர்தரமான அல்லாய் கோல்டு நகைகள்.
சவரன் பொன்னுக்கு ஒப்பான பிரகாசமும், பள பளப்பும் உள்ளது.
5 வருஷம் உத்திரவாதமுள்ளது.

வளையல் ஜோடி 1க்கு ரூ. 3.
கழுத்து சங்கிலி „ „ 7.
வங்கி ஒட்டியாணம் (பெரிய சைஸ்) 1க்கு ரூ. 20.
(கேட்லாக் இனம்.)
R. S. பிரகாசம் & கோ., 187, சைனுபஜார் ரோட், ஜி. டி., மதராஸ்.

ஜஹ்னரா

"ஸலாங்கமணி" எழுதியது

மூன்ரும் அங்கம்

முதல் காட்சி

ஓர் சாலை. மாலை. நேரம் முகம்மதிய சிப்பாய்கள், பலர் இருக்கின்றனர். ரகுவீர்பட் பாடியவண்ணம் வருகிருன். ரஹீம் வருகிருன்.

ரஹீம்:—அரேபொம்மன் இதர் ஆவ்!

ரகுவீர்பட்:—என்னமோ இருக்குது இன்னிக்கி. வீட்டை விட்டு புறப்படச்சியே பூனை குறுக்கே வந்தது. அப்பவே தெரியும், எனக்கு அஷ்டமத்து சனியன் பிடிக்கப் போர்துன்னு.

ரஹீம்:—அரே உன் கிட்டே என்னு இருக்குதுன்னு கேட்கிருன். பைசா கைசா இருந்தா கிழே வச்சிப்போடு

ரகுவீர்பட்:—இனிமே வீட்டிலே இருக்கிறவாளை பார்க்கிறது அங்கேதான்!

ரஹீம்:—அரே பொம்மன்! நம்பள் கேட்கிருன் நிம்பள்கு சொல்ல மாட்டேன்கிருன். ஜிஸியா! பாய்! ஜிஸியா!

ரகுவீர்பட்:—கார்த்தாலேயிருந்து உபாதானம் வாங்கி பிழைக்கிற பிராமணனுக்கு எங்கேந்து காசு அம்படும்! ஒன்னு வேணு செய்யத்தெரியும். உனக்கு மாத்திரம கர்மம் பண்ணிவைக்கரேன்.

ரஹீம்:—அரே! அது நம்பள்கு என்னுத்துக்கு. நம்பள்க்கு சொல்ருன் நிம்பள்க்கு கேட்கிருன் இல்லை. நம்பள்க்கு கோவம் வருவான். பைஸா கிழே வை. இல்லாப்போனு உன் தலை ஸாப்!

ரகுவீர்பட்:—சாஹேப்! நான் சொல்றேன் கேள் இன்னிக்கெல்லாம் ஓதைச்சாலும் என்னிடத்திலே ஒரு செல்லாக் காசு கூட வாங்க முடியாது. இப்பவே சொல்லிப்புடரேன், என்னை உட்டுடு.

ரஹீம்:—தேக்கோ பொம்மன்! நம்பள்க்கி சும்மா கேட்டா நிம்பள்க்கி வழிக்கு வரமாட்டான்.

(குழாய் ஊத நான்கு சிப்பாய்கள் வந்து ரகுவீர்பட்டைப் பிடித்துக் கொள்கிருர்கள்.)

ரகுவீர்பட்:—ஐயா, என்னை உட்டுடுங்கையா. நான் எங்கம்மாவுக்கு ஒரே பிள்ளை.

ரஹீம்:—ஜிஸியா தேவ்.

ரகுவீர்பட்:—ஜிஸியாவுமில்லை, கிஸியாவுமில்லை. பசியாதான் இருக்கு.

(ரஹீம் ஜாடை செய்ய முகம்மதிய சிப்பாய்கள் முகம்மதிய உடுப்பைக் கொண்டுவந்து ரகுவீர்பட்டை வற்புறுத்தி அணியச்செய்கிருர்கள்.)

ரஹீம்:—நிம்பள் பேர் என்னு?

ரகுவீர்பட்:—ரகுவீர்பட்!

ரஹீம்:—ரகுவீர்பட். நான் சொல்ருன் ரஹ்மட். இல்லாப்போனு உன் தலை பட்.

ரகுவீர்பட்:—ஐயையோ, இது எதுடா பெரிய இதுவாயிருக்கே! இனிமே தப்பிக்கிறது தம்பிரான் புண்ணியம் தான்.

ரஹீம்:—சப்! சுப்ரஹோ!! போலோ அல்லாஹோ அக்பர்!

(ரகுவீர்பட் அலர அவனை இழுத்துச் செல்கிருர்கள்.)

இரண்டாம் காட்சி

அரண்மனையில் ஓர் அறை. மாலை: வேளை கிருஷ்ணுஜி பாஸ்கருடன் அப்ஸல்கான் உட்கார்ந்துகொண்டு பேசிய வண்ணம் இருக்கிருன்.

அப்ஸல்கான்:—சுல்தான் கட்டளையோ மிகவும் கடுமையாக இருக்கிறது! இம்மலையெலியைப் பிடிப்பது யாரால் சாத்தியமாகும். அசாத்தியமே, எலியைப் பிடிக்கப்போனுல் அது பொந்தில் ஒளிந்து கொள்கிறது. கையை விட்டாலோ கடிக்கிறது. அவன் மஹாராஷ்டிர வீரனும் வீரன்! எல்லோரையும் கண்டு கைகால் நடுங்கி ஒளிந்து கொள்பவன் வீரனும்! இவனுக்கு 3000 வீரர்கள் துணையாம், இனி எலியை ஒழித்தால்தான் எனக்கு மனச்சாந்தி ஏற்படும்! அப்ஸல் கான்! பல இடத்தில் போர் புரிந்தும், பல நற்கூற்றுகள் பெற்றும் எல்லோராலும் வீரனென சிறப்பிக்கப்பட்ட உன்னுலா அம்மலையெலியைப் பிடிக்கமுடியாது. (சிரிக்கிருன்) சரி, இனி நாம் சைனியத்துடன் கிளம்ப வேண்டியதே. ஆனுல் அவன் பெரிய குள்ளநரியாயிற்றே. அத்துடன் அவன் வெகு தந்திரசாலி! சபாஷ், அப்ஸல்கான்! நம் ஜமேதார் கிருஷ்ணுஜீ பாஸ்கர் இருக்க நமக்கென்ன குறை? யாரங்கே. (சேவகன் வருகிருன்.) நம் ஜமேதாரை அழைத்துவா,

[கிருஷ்ணுஜி பாஸ்கர் வருகிருர்.]

கிருஷ்ணுஜி:—நமஸ்தே!

அப்ஸல்கான்:— பாபாஜி, தங்களால் எனக்கு ஓர் உதவி ஆகவேண்டியிருக்கிறது. தங்களால்தான் அது முடியவேண்டும்.

கிருஷ்ணுஜி:—ஸர்க்கார்? அது எதுவோ.

அப்ஸல்கான்:—பாபாஜி, அம்மலை எலியை எப்படியாவது பிடித்து அவன் எனக்கு முன் செய்த அவமானத்திற்குப் பழி வாங்காவிடில் என் மனம் ஆருது.

கிருஷ்ணுஜி:— அதற்கு நான் என்ன செய்யவேண்டும்?

அப்ஸல்கான்:—பாபாஜி, நீரோ ஹிந்துக்களில் ஒருவர். தங்கள் அனுமதியின்றியே ராய் காருககும் செல்ல முடியும். தாங்கள் எப்படியாவது அந்த மலை எலியை எனக்குப் பிடித்துத் தர வேண்டும்.

கிருஷ்ணுஜி:—ஸர்க்கார், அப்படியானுல் நான் என்ன ராய்காருக்கு தூது. போக வேண்டுமா?

அப்ஸல் கான்:—நான் சொல்ல வந்ததும் அதுதான் பாபாஜி!

கிருஷ்ணுஜி:—ஸர்க்கார்! அவர்களிடம் தூது என்றும் தங்களிட்மிருந்து வந்தேன். என்றும் சொல்லிக்கொண்டு அவன் கோட்டைக்குள் செல்வது மிகவும் கடினமாயிற்றே.

அப்ஸல்கான்;— இப்பொழுது எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது. தாங்கள் அவரிடம் ஓர் உடன்படிக்கை செய்வதற்காக வந்ததாகக் கூறும், அதற்குள் மைதானத்தில் கூடும் என் கூட்டத்தில் சந்திக்கும்படி சொல்லும். பிறகு நான் பார்த்துக்கொள்கிறேன்.

கிருஷ்ணுஜி:— அப்படியே ஆகட்டும்.

அப்ஸல் கான்:—பாபாஜி, அவனை சேனையில்லாமல் சேவகனுடன் வரும்படிச் செய்யுங்கள். நான் சுல்தானிடம் சென்று இதைச் சொல்கிறேன். நான் அவரைக் கண்டு ஏற்பாடுகளைச் செய்கிறேன்.

மொகலாய சக்ரவர்த்தி ஷாஜஹானின் அந்திய காலம்: படுத்த படுக்கையாக இருந்த அவருக்கு அவரது ப்ரிய புத்ரி ஜஹ்னரா சிச்ருஷை செய்கிறள்: சாதுந்தறுவாயில் மிகுந்த கவலை தரும் செய்திகளைக் கேட்டுக் கொண்டே, சக்ரவர்த்தி உயிர் இழக்கிறர்: பிள்ளைகள் தம்மை மீறிக் கொண்டு படையெடுப்பை ஆரம்பித்த செய்தி தான் அவரை அந்திம காலத்தில் மிகவும் வாட்டிற்று. ஷாஜஹான் இறந்ததும் துயரம் தாங்காமல் ஜஹ்னரா தற்கொலை புரிய முயற்சிக்க, அதை ஒருவர் தடுக்கிறர். இந்த நிலைமையில் சிவாஜியின் ஆதிபத்தியமும் ஆரம்பமாகிவிட்டது: மகாராஷ்டிர வீரர்களுடன் அவர் முன் வரலானுர்: வேவுகாரர் மூலம் தினமும் மொகலாய சாம்ராஜ்ய ரகசியங்களை அவர் அறிந்து வரலானுர்.

மூன்றும் காட்சி

கிருஷ்ணுஜி பாஸ்கர் வீதியில் பேசிக் கொண்டே வருகிரூர்.

கிருஷ்ணுஜி:—ஏ சகடேஸ்வரா! ஸகல லோகம் புகழும் சத்ரபதியை அநியாய மாய்ச் சதி செய்ய நான் உடந்தையாய் இருக்கவேண்டுமா? கேவலம் ஒருவன் கையில் அடிமைத் தொழிலினுல் அன்ருே நம் மனஸ்சாட்சிக்கு விரோதமாய்ப்போக வேண்டியிருக்கிறது. மறுத்தாலோ யஜமானத்ரோகம். ஆம்! இக்கொடூரன் எதற்கும் அஞ்சான். இவன் சொல்வதைப் பார்த்தால் சத்ரபதி சிவாஜியை நம்பிக்கைத் துரோகம் செய்துவிடுவான் போலிருக்கிறது. தேவீ! இதற்கு நீ தான் துணை செய்யவேண்டும். நாம் பிறந்து வளர்ந்த நாட்டைச் செழிப்புறவும் அதன் குடிகளை ரக்ஷிப்பதுமல்லாமல், கேவலம் ஓர் அந்நியன் கீழ் அடிமைப்பட்டிருப்பது மனிதனுக்கழகா? தேவி, எனக்கு ஓர் வழியும் தெரியவில்லையே! இவனை வெறுத்து இவ்வேலையை மறுத்தாலோ வேறு பிழைப்பில்லை. எதற்கும் உன் கருணையை இவ்வடியேன் மேல் இருக்கச் செய். [போகிருன்.]

நான்காம் காட்சி

ஒரு சாலை ஓரம்.

கரீம்கான்:—ஆ ஸலீம்! இன்கி நம்பள்கி ஜோர்தான். ஆளுக்கு மேலே குஷியாயிருக்குது. பாதுஷா அலம்கீர் இருக்கிரூர். நமக்கென்ன குறை?

சிப்பாய்:—ஹி ஹ்ற ஹி [சிரிக்கிருன்.]

கரீம்கான்:—என்ன ஸலீம்?

ஸலீம்:—நம்கு ரொம்ப குஷி. ஷர்பத் குஷி. குஷி மேலே பசி.

ஷேர்கான்:—என்ன ஸலீம்? என்ன ஜோர்? இதன். ஷோக்கு ஷோக்கு தான் கொஞ்சம் போட்டுப் பார்! அப்பரம் நீயே சொல்வே. இதை போட்டுக்குனு மேலே போய் அந்த சந்திர சூரியனை எல்லாம் பார்த்தூட்டு வந்தூடலாம்,

கரீம்:—ஏய் பாதுஷா குடிக்கிருரா, இந்த மாதிரி 'மதியிழந்து' பேசறையே, உனக்கு ஏன் இந்த புத்தி,

ஸலீம்:—ஹி ஹ்ற ஹி, இந்த மஜா உனக்கு என்னுத் தெரியும்.

(ரகீம் கையில் மதுபாண்டத்துடன் வருகிருன். எல்லோரும் எழுந்திருக்கிருர்கள்.)

ரகீம்;—ஷர்பத் ஆவ் [கொண்டு வருகிருர்கள், குடிக்கிருன். ஸலீம் பாட எல்லோரும் ஆனந்தமடைகிருர்கள். ராதா வருகிருள்.]

ரகீம்:—(கையிலிருந்த மதுபாண்டத்தை கீழே வீசி எறிந்து) தேகோ ஏக் பீப்பி அஇங்கா அச்சா பஹுத் குஷியோ ஹயா பீபி நிம்பள்கி நீ யார்?

ராதா:—ஐயா, நான் ஓர் அனுதை. அதிலும் ஓர் ஏழை.

ரஹீம்:—நீ நம்பள்கி பீபி ஆய்ட்டேனு பஹுத் குஷியோகயா.

ராதா;—அடே, என்ன சொன்னுய்?

ரஹீம்:—ஹ ஹா! என்ன 'சொன்னுய் நம்பள்கி இந்த நாய் வேனுங்கிருன்!

ராதா;—ஆ தெய்வமே, இச்சண்டாளர் கையில் சிக்கினேனே, இனி நான் கற்புடன் பிழைப்பதேது? இதை அடக்க ஓர் வழியும் இல்லையா? ஆ தெய்வமே!

ரஹிம்:—தேகோ, நீ என்ன சொன்னுலும் நம்பள் கேட்க மாட்டான். நம்பள் நிம்பள் பாடி கேட்கிருன்.

ராதா:—இப்பேர்ப்பட்ட வீரர்களிடத்திலா! சீ போங்கள்!

ரஹிம்:—ஆ! ஆ!! கபர்தார் நம் அல்லா இப்போ என்னு பன்ருன் பார்க்கலாம்.

[அவளை பிடிக்கப் போக அவுரங்கசீப் வருகிருன். ராதா ஓடிச்சென்று அவுரங்கசீப்பின் கால்களில் வீழ்ந்து விடுகிருள்.]

ராதா:அபயம்,அபயம்!காப்பாற்றுங்கள்.

அவுரங்கசீப்:—பேடி, நீ யார்? எழுந்திரு.

[ரஹீம் கோபத்துடன் பார்க்கிருன்.]

ரஹிம்;—(பயத்துடன்) குச் நஹீ! பாதுஷா, குச் நஹீ.

அவுரங்கசீப்:— கபர்தார்; தும் ஜாவி! அம்மா நீயோ சிறிய பெண்ணுயிருக்கிருய். இதுபோல் இந்த நாட்டில் என்னை அறியாமலே பல கேடுகள் விளைந்து வருகின்றன. உன் பெயரென்ன?

ராதா:—ராதா.

அவுரங்கசீப்;—உனக்கு உறவினர் உண்டா?

ராதா:—நான் ஓர் திக்கற்ற அநாதை.

அவுரங்கசீப்:—அப்படியா! நீ இன்றையிலிருந்து நம் ஜெனுனுவில் வாழலாம். ஆனுல் நீ உன் மதத்தைவிட்டு இஸ்லாமைத் தழுவ வேண்டுமே!

ராதா:—ஐயா......

அவுரங்கசீப்:—வேறு வழியில்லை. இல்லையேல் நீ (கத்தியை காண்பித்து) இதற்கு இறையாக்க வேண்டியது.

ராதா:—எல்லாம் தெய்வச் செயல்!

அவுரங்கசீப்:—ஆனுல் நீ இன்றையிலிருந்து ரஸியா என்ற பெயருடன் நம் ஜனுனுவில் வாழலாம்.

ராதா:—ஸர்க்கார் தங்கள் இஷ்டம்.

[போகின்றனர்.]

ஐந்தாம காட்சி

சிவாஜி அரண்மனையில் ஓர் அறை, மாலை நேரம், கிருஷ்ணுஜி பாஸ்கர், சிவாஜி இருவரும் பேசியவண்ணம் வருகிருர்கள்.

சிவாஜி:—ஐயா, நான் சொல்வதைக் கேளும். தாங்களோ உபநிஷத்துக்களையும் சாஸ்திரங்களையும் நன்குணர்ந்தவர். தங்களுக்கு நான் சொல்லவேண்டியது ஒன்றுமில்லை. நீர் அழைப்பதிலிருந்து ஒருவித சந்தேகம் உண்டாகிறது.

கிருஷ்ணுஜி:—இப்படி தாங்கள் சந்தேகப்பட இடமில்லை.

சிவாஜி:—அவன் கொடூர நெஞ்செழுத்தத்தை உடையவனுயும் போர் புரிந்து தேசத்தை நாசமாக்குவதில் பற்றுள்ளவனுயிருந்தும் இப்போது என்னிடத்தில் உடன்படிக்கை செய்துகொள்வது என்ருல் அதில் ஏதோ ஒரு சூழ்ச்சி இருக்கவேண்டும். தங்களுக்கு ஓர் விஷயமும் தெரியாதா?

கிருஷ்ணுஜி:—ஸர்க்கார், இவ்வேழை பூர்வத்தில் ராம் சாஸ்திரி என்ற நாமதேயமுடைய ஓர் பிராம்மணுயிருந்து பிழைக்க வழியில்லாமலும் வேறு கதியில்லாமலும் சர்க்காரின் சேவையை நாடி வருங்கால், அவ்வரக்க வீரர்களுடன் சிக்கி இப்படி ஊழியம் செய்து பிழைக்க வேண்டியிருக்கிறது. இதைத்தவிர எனக்கு வேறு ஒன்றும் தெரியாது.

சிவாஜி:—ஐயா, கேவலம் வயிற்றுபிழைப்புக்காக கொடூர ஆத்மாக்களிடத்தில் ஊழியம் செய்வதால் ஆகும் பயனென்ன? எல்லாம் தெரிந்த நீர் ஏன் என்னிடம் ஒளிக்கவேண்டும்?

கிருஷ்ணுஜி:—உண்ட வீட்டிற்கு இரண்டகம் நினைக்க கூடாதென்பார்களே......!

சிவாஜி:—ஐயா, பிறந்த நாட்டிற்குக் கேடு விளைவிப்பதா? நீர் பிராம்மணராயிருந்தும் தம் சொந்த மதத்தைக் கெடுக்க நினைக்கின்றீரே? வயிற்றுப் பிழைப்புக்காக நம் தாய் வயிற்றைக் கிழிப்பதா? இதை நீரே சிந்தித்துப்பாரும்!

கிருஷ்ணுஜி:—ஸர்க்கார், தன்யனுனேன், என்னை மன்னியுங்கள் [காலில் விழுகிருன்.]

சிவாஜி:—பிரம்மணரே, இப்போதாவது சொல்லக்கூடாதா.

கிருஷ்ணுஜி:—அவன் சொல்லும் தோரணையிலிருந்து தங்களுக்கு ஏதோ அபாயத்தை உண்டாக்குவான் போல் தோன்றுகிறது. எதற்கும் தாங்கள் ஜாக்ரதையாகவேயிருக்கவேண்டியது தங்கள் பொறுப்பு. உத்திரவு......

சிவாஜி:—[தலையை ஆட்டுகிருர் கிருஷ்ணுஜி செல்கிருன்] ஏ அப்ஸல்கான், நீ என்னை அழிக்கப்போகின்ருயோ அல்லது நான் உன்னை அழிக்கப் போகின்றேனே என்பது நாளை காலையில் தெரிந்துவிடும் [பிச்சுவாவை கையில் எடுத்து] நீ எக்காலத்திலும் உதவியும் ஆத்மநண்பனுயிருக்கின்ருய். அவன் வஞ்சகத் தொழிலை ஆரம்பிப்பானுகில், அம்முரடனுடைய ரத்தத்தை உன் மனமார குடித்துக்கொள். அப்ஸல்கான் நம் இருவருக்குள் யாருக்கு முடிவு என்று பார்த்துக்கொள்வோம்.

மூன்ரும் அங்கம் முடிந்தது

(தொடரும்)



இது ஒரு சித்திரம். அதிகாரிகள் அளித்த தகவல்களைக் கொண்டு எழுதப்பட்டது பிரிட்டிஷ் விமானமொன்று ஜெர்மன் வசமான பிரெஞ்சு துறைமுகத்தில் நாசகாரியத்தைச செய்வதைக் காட்டுகிறது. அந்த சமயம் ஜெர்மன் யுத்தக் கப்பல் ஒன்று அங்கு வந்து தங்கியிருந்தது. கப்பலை கண்டதும் விமானம் மெதுவாக கீழே இறங்கி, சமுத்திர மட்டத்திற்கு 100 அடிகள் மேலே இருந்து கொண்டு வெடி குண்டுகளை எறிந்தது.

பெல்ஜிய வேவுகாரன்

★

நியாயவாதி

எழுதியது

★

இது தன்னலத்தைக் கருதாது தனது தேசத்துக்கு சேவை செய்து அதன் பயனுய் தனது உயிரை இழந்த ஒரு பெல்ஜிய வேவுகாரனின் உண்மைக் கதை.

அவன் பெயர் துதன் லாம்பிரெக்ட்: அவன் லீஜ் நகரத்தில் மோட்டார் பழுது பார்க்கும் தொழிற்சாலை வைத்திருந்தான். 1914-ம் வருஷத்தில் ஐரோப்பிய யுத்தம்தொடங்கிடனவுடன் பெல்ஜியம் ஜெர்மானியரது ஆக்கிரமிப்புக்குள்ளானதால் அந்நகரத்தில் எதிரிகளால் ஸ்தாபிக்கப்பட்ட ராணுவ ஆட்சி நடைபெறலாயிற்று. துதனின் தொழிற்சாலையும் மூடப்பட்டது.

துதன் தேசபக்தி நிரம்பிய நெஞ்சினன். தனது நாடு சத்ருக்களின் கொடுமைக்குள்ளானது அவனது ஆத்திரத்தையும் துயரத்தையும் எழுப்பியது. தனது தேச மக்கள் ஜெர்மானியரால் அடிமைகளைப்போல் துன்புறுத்தப்பட்டது அவனுல் சகிக்க முடியாத அவமானமாக இருந்தது. தனது தேச விடுதலைக்காக அவன் தனது எஞ்சிய வாழ்க்கையை அர்ப்பணம் செய்வது என்று சங்கல்பம் செய்து கொண்டான்.

> வேவு பார்ப்பது சுலபமான காரியமல்ல: திடமனதும் தியாக புத்தியும் இருந்தால் தான் இக்காரியத்தில் உத்சாகத்துடன் இறங்க முடியும். துதன் லாம்பிரெக்ட் என்ற பெல்ஜிய வேவுகாரனின் கதை இதற்கு தகுந்த உதாரணமாகும்: தேசத் தொண்டு துதனுக்குத் திருப்தி தந்தது: துதனின் ரகஸ்ய வேலை எதிரிகளுக்குத் தெரிந்தது: அவனைப் பிடித்துக்கொண்டனர்: கொடிய மரண தண்டனையும் விதித்தனர்: உயிரை இழக்கவும் துணிந்து முன் வந்த துதன் கவலையின்றி வாழ்க்கையை விட்டுப் பிரிந்தான். ஆனுல் அவனது தேச பக்தியையும் தன்னலமற்ற ஸ்வபாவத்தையும் மனுே தைர்யத்தையும் போற்றிப் புகழாதவர்களே கிடையாது!

★

சேவை செய்யுர் வழி

இந்த உத்தேசத்துடன் அவன் ஹாலந்துக்கு வந்தான். அங்கே அவன் பிரிட்டிஷ் வேவு இலாகாவைச் சேர்ந்த ஒரு ஒரு உத்தியோகஸ்தனை சந்தித்தான். அவனது ஆர்வத்தையும் ஜெர்மன் அதிகாரிகளின் மீது அவன் காட்டிய துவேஷத்தையும் உணர்ந்த அவ்வுத்தியோகஸ்தன் "நீ உன் தேசத்துக்கு செய்யக்கூடிய சேவை இது தான். உன் நகரத்துக்குத் திரும்பி நீ ஒரு ரகசிய வேவு ஸ்தாபனத்தை ஆரம்பம்செய். அங்கிருந்து வேவு பார்த்து உன்னுல் சேகரிக்கக் கூடிய தகவல்களை தூதர்கள் மூலம் இங்குள்ள எங்களது ஏஜெண்டுக்கு அனுப்பினுல் மிகவும் உபயோகமாக இருக்கும். ஜெர்மனியின் வீட்சிக்காக நீ எங்களுடன் ஒத்துழைக்க விரும்பினுல் உன்னுல் செய்யக்கூடியது வேவு பார்ப்பதேயாம்" என்ருன். துதன் வேவு பார்ப்பது என்ற தீர்மானத்துடன் தனது ஊருக்குத் திரும்பினுன்.

எதிரிகளது ராணுவ ஆட்சிக்குட்பட்ட ஒரு பிரதேசத்தில் அவர்களுக்கு விரோதமாய் உளவு பார்ப்பது மிகா அபாயகரமானது. அப்படிச் செய்யத் துணிபவன் மிகவும் ஜாக்கிரதையாயும் புத்திசாலித்தனத்துடனும் வேலை செய்ய வேண்டும். தன்னுடன் ஒத்துழைக்கக் கூடியவர்கள் தன்னுடைய நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்களாயும் வேவு பார்ப்பதற்கு ஏற்ற திறமையுடையவர்களாயும் இருக்கின்றனரா என்பதை அவன் தெரிந்து கொள்ள வேண்டும், ஏதேனும் ஒரு சிறு பிசகோ அல்லது தவறுதலோ ஏற்பட்டால் அதனுல் அவனுக்கு மட்டுமன்று, அவனைச் சேர்ந்தவர்கள் எல்லாருக்குமே கேடு சம்பவிக்கும்.

நண்பர்கள் உதவி

இதை துதன் அறியாதவனன்று. ஆரம்பத்திலே அவன் மிகவும் ஜாக்கிரதையுடன் வேலை செய்தான். தனது நம்பிக்கைக்கு லாயக்கானவர்கள் சிலரிடம் தன் கருத்தை எடுத்துரைத்தான். அவர்கள் அவனுக்கு உதவி செய்ய இசைந்தனர்; ரயில்வே ஸ்தலத்துக்குப் பக்கத்திலிருந்த அவன் நண்பன் ரயில்களின் போக்குவரத்தைப் பற்றியும் அவற்றில் ஏற்றிச்செல்லப்படும் துருப்புகளைப் பற்றியும் விவரங்கள் அறிந்து தகவல்கள் அனுப்ப முன் வந்தான். தபால்காரன் ஒருவன் தன் கட்புலனுக்கு அகப்படக்கூடிய விஷயங்களை எல்லாவற்றையும் வெளியாக்க சம்மதித்தான். மற்றும் சிலர் தங்கள் தங்களால் சேகரிக்கக் கூடிய சமாசாரங்களை தொகுத்துக் கொடுக்க ஊக்கம் கொண்டனர்.

இப்படி துதனுல் ஆரம்பிக்கப்பட்ட வேவு இயக்கம் வெகு சீக்கிரத்தில் அதிசயமான சக்தியுடன் வேலை செய்யலாயிற்று. சுய நலத்தையும் பண உதவியையும் எதிர் பாராத அவனது ஆட்கள் எதிரிகளைப் பற்றிய தகவல்களைச் சேகரித்து அவனிடம் ஒப்புவித்தனர். அவற்றை பரிசிலனை செய்து ரகசிய அறிக்கைகள் தயாரித்து நம்பிக்கையான ஒற்றர்கள் மூலம் டச்சு எல்லைக்கு அனுப்புவதில் அவன் சிரத்தையும் ஊக்கமும் கொண்டான்.

ஒரு சமயம் அவன் ஹாலந்து சென்றிருந்த பொழுது "எவலின்" என்ற புனைப்பெயர் கொண்ட ஆங்கில வேவு உத்தியோகஸ்தனை சந்தித்தான். அவன் பெல்ஜிய வேவுகாரனது சேவையையும உதவியையும் பெரிதும் பாராட்டினுன். துப்பறிவதிலும் வேவு பார்ப்பதிலும் மிகுந்த அனுபவசாலியான எவலின் அவனுக்கு பின் வரும் யோசனையை கூறினுன் "நீயே நேர்முகமாய் தூதர்களை ஹாலந்துக்கு அனுப்புவது பிசகு. பிரத்யேகமான ஒரு "தபால் பெட்டி" (அதாவது அறிக்கைகளை வாங்கி வைத்துக் கொள்ள சித்தமாயுள்ள நபர் ஒருவர்) இருப்பது தான் சிலாக்யம். உனது அறிக்கைகளை அந்த தபால் பெட்டிக்கு அனுப்புவதுதான் உன் வேலை. அங்கிருந்து தூதர்கள் அவற்றை எடுத்துக்கொண்டு இங்கேயுள்ள நமது காரியாலயத்துக்கு வரட்டும்" என்ருன். அப்படியே செய்வதாக ஒப்புக்கொண்டு துதன் தனது ஊருக்குத் திரும்பினுன்.

"தபால் பெட்டி"

எவலின் கூறின யோசனைப்படியே துதன் தன்னுடைய நெருங்கிய உறவினனும் நண்பனுமான ஆர்தர். லேகிளேராக் என்பவனை "தபால் பெட்டி" யாக நியமித்தான். இந்த சீர்திருத்தம் ஏற்பட்ட பின் அவ்விரகசிய வேவு முன்னிலும் அதிகமான மும்முரத்துடன் நடைபெறலாயிற்று. லீஜ் நகரத்திலும் அக்கம்பக்கத்திலும் என்னென்ன தகவல்கள் அறியக் கூடுமோ அவையெல்லாம் துதன் தனது ஆட்கள் மூலம் அறிந்து அவற்றைக் குறிப்பிட்டு அறிக்கைகள் தயாரித்து அவற்றை ரகசிய மையில் எழுதி தபால் பெட்டிக்கு அனுப்புவான். அங்கிருந்து அவற்றுடன் கிளம்பிய தூதர்கள் பெல்ஜிய எல்லையைக் கடந்து ஹாலந்துக்குச் சென்று அங்கேயுள்ள பிரிட்டிஷ் வேவு ஏஜண்டிடம் அவற்றை சமர்ப்பிப்பார்கள்.

இப்படி துதனுல் ஸ்தாபிக்கப்பட்ட ரகசிய வேவு 1915-ம் வருஷம் பூராவும் யாதொரு விக்கினமும் ஆபத்தும் இல்லாமல் நடைபெற்று வந்தது. அவன் வேவு பார்த்த பிரதேசத்தில் புலப்படக்கூடிய ராணுவ சம்பந்தமான எல்லா தகவல்களையும் அப்பொழுதுக்கப்பொழுது ஆங்கிலேய அதிகாரிகள் அறிந்துகொண்டனர். முக்கியமாய் ரயில்களின் மீது வைக்கப்பட்ட மோசூல் முதல் தரமானதாக இருந்தது. ரயில்களில் கொண்டு வரப்பட்ட துருப்புகளைப்பற்றி துதனுல் அனுப்பப்பட்ட செய்திகள் பிரிட்டிஷ் ராணுவ அதிகாரிகளுக்கு மிகவும் உபயோகமாய் இருந்தன.

என்றும் ஆபத்துதான்

"கள்வனுக்கு வாழ்க்கைப்பட்டவள் என்றும் கைம்பெண்" என்பது பழமொழி. அதேபோல் எதிரிகளிடையே வேவுபார்ப்பது என்றும் ஆபத்துதான். என்றேனும் ஒரு நாள் அப்படிச் செய்யத் துணிந்தவனது உயிர் பறி மூதல் தான். அது துதன் லாம்பிரெக்ட விஷயத்திலும் உண்மையாயிற்று.

எப்படியோ ராணுவ அதிகாரிகளுக்கு லீஜ் பிரதேசத்தில் தங்களுக்கு விரோதமாய் ஒற்றர்கள் வேலை செய்து வந்தது தெரிய வந்தது. டச்சு எல்லைக்கு ரகசிய அறிக்கைகள் அனுப்பப்பட்டு வருகிறதென்ற சந்தேகம் அவர்களுக்கு உண்டாயிற்று. பெல்ஜிய-டச்சு எல்லைப் பிரதேசத்தில் காவலும் கட்டுப்பாடும் பலப்படுத்தபட்டன. அதனுல் லீஜிலிருந்தோ ஹாலந்திலிருந்தோ ரகசியமாக தூதர்கள் வருவதும் போவதும் அஸாத்யமாகி விட்டன.

எனினும் அச் சமயந்தான் துதனுக்கு நம்பிக்கையான தூதர்களின் சேவை மிகவும் தேவையாயிருந்தது. ஏனெனில் அச்சமயம் ஜர்மானியர் ரிவர்டன் போர்க்களத்தில் ஆங்லோ-பிரஞ்சுப் படைகளை மிகுந்த பலத்துடன் தாக்க உத்தேசித்திருந்தனர். அதன் பொருட்டு அவர்கள் கிழக்கிலிருந்து ஆயிரக் கணக்கில் துருப்புகளை வருவித்துக் கொண்டிருந்தனர். இவற்றைப் பற்றிய விவரங்கள் துதனுக்கு தெரிய வந்தன.

சாகஸத்திலும் துணிச்சலிலும் வல்ல ஆள் ஒருவனைக அட்டாயம் அனுப்ப வேண்டுமென்று துதன் ஹாலந்திலுள்ள பிரிட்டிஷ் ஏஜண்டான ஆர்னுல்ட் என்பவனுக்கு சொல்லியனுப்பியிருந்தான். அதற்கு சீக்கிரம் ஹாலந்திலிருந்து பதில் வந்தது.

"தபால் பெட்டி"யான ஆர்தர் லெகிளேராக் வீட்டுக்கு ஒரு ஆள் வந்தான். அவன் அதற்கு முன் அங்கு வந்ததில்லை. ஜெர்மன். ஜாதியைச் சேர்ந்தவன் போல் தோன்றிய அவன் அங்

கேயிருந்த ஸ்ரீமதி லெகிளேராக்கிடம் ஒரு கடிதத்தைக் கொடுத்து அதன் விலாசதாரரை தான் நேரில் பார்க்க விரும்புவதாய்க் கூறினன்.

சந்தேகம் எழுந்தது

“ஸ்ரீமதி டியூபிரண்” என்ற பெயருக்கு அனுப்பப்பட்ட அந்தக் கடிதம் உண்மையில் துதனுக்குத் தான். ஆனால் அதைக் கொணர்ந்த துதனின் தோற்றமும் பேச்சும் ஸ்ரீமதி லெகிளேராக்கின் சந்தேகத்தையெழுப்பின. மேலும் அதற்கு முன் வந்த தூதர்கள் துதனுக்காக கொண்டு வந்த கடிதங்களை யாதொரு வார்த்தையுமின்றி அவ்விடத்தில் வைத்து விட்டுப் போவது வழக்கம். ஆனால் அந்த மனிதனது நடத்தையே வேறு விதமாயிருந்தது.

“அப்பா! இந்த கடிதம் வேறு யாருக்கோ எனக்குத் தெரியாது. நீ தவறுதலாய் இந்த வீட்டுக்கு வந்திருக்கிறாய்” என்றாள் ஸ்ரீமதி.

“அம்மணி! இல்லை! நான் தவறுதலாய் வரவில்லை. நீங்கள் என் மீது சந்தேகப்பட வேண்டாம். நான் ஹாலந்திலிருந்து முக்கியமான தகவல்களுடன் வந்திருக்கிறேன்” என்று கூறிய அம்மனிதன் மெதுவான குரலில் “மூவர்ண சுருட்டுக் கட்டுகள் ஏழும் பத்திரமாய் வந்து சேர்ந்தன” என்றான.

அந்த வார்த்தைகளை செவியுற்றதும் ஸ்ரீமதி லெகிளேராக் திடுக்கிட்டாள். ஏனெனில் அம்மனிதன் கடைசியில் கூறியது அந்த வேவு ஸ்தாபனத்தின் சங்கேதச் சொல். (Passwor) உண்மையான தூதர்களும் ஒற்றர்களும் அதை அறியலாமே யன்றி இதரர் யாரும் அதை உணர்ந்து கூற ஹேதுவில்லை.

எனினும் அவள் ஸந்தேகம் தணியவில்லை. தன் முன்பு ஆவலுடன் நின்ற தூதனை நோக்கி அவள், “நீ பேசுவது ஒன்றும் புரியவில்லை. நீ கொண்டு வந்திருக்கும் கடிதமும் யாருக்கு என்பது எனக்குத் தெரியாது. எனினும் இவற்றைப்பற்றி என் கணவர் அறிந்திருக்கக்கூடும் நீ நாளைக்கு மத்தியானம் வா” என்றாள்.

“அம்மணி! அப்படியே வருகிறேன். என்றாலும் நீங்கள் காரணமின்றி என் மீது சந்தேகப்படுகிறீர்கள்” என்று கூறிவிட்டு துதன் வெளியே சென்றான்.

“காரணமில்லாத பயம்”

அவன் சென்றபின் ஸ்ரீமதி லெகிளேராக் துதன்வீட்டுக்குஓடினாள். சகலவிஷயங்களையும் அவனிடம் தெரிவித்து, கடிதத்தையும் அவனிடம் கொடுத்தாள். “என்னமோ அவன் உண்மையான தூதன் இல்லை. ஜெர்மன் போலீசைச் சேர்ந்தவன் என்றுஎனக்குத்தோன்றுகிறது” என்றாள் கடிதத்தை பிரித்துப் படித்துவிட்டு துதன் நகைத்தான் ‘நீ காரணமின்றி பயப்படுகிறாய். இது ஆர்னல்டினிடமிருந்து வந்த கடிதம். இதில் உள்ள கையெழுத்து அவனது தான். அவனிடமிருந்து வந்திருக்கிறான் அந்த மனிதன் என்பதில் சந்தேகமேயில்லை. நானே அவனை நேரில் பார்ப்பேன்” என்றான்.

குறிப்பிட்ட காலத்தில் அவன் லெகிளேராக் வீட்டில் ஹாலந்திலிருந்த மனிதனை சந்தித்தான். இருவரும் வெகுநேரம் பேசிக்கொண்டிருந்தனர். துதன் கூறிய விவரங்களிலிருந்து அவன் உண்மையில் ஹாலந்திலுள்ள ஏஜெண்ட் ஆர்னல்டினிடமிருந்து வந்திருக்கவேண்டும் என்று நிச்சயித்துக்கொண்டான். அவனிடம் தான் தயாரித்த ரகசிய அறிக்கையைக் கொடுத்து. “இதை ஆர்னல்டிடம் கொடு. என்றைக்கு நீ புறப்படுவாய்?” என்று வினவினன்.

“இன்னும் இரண்டு நாட்களில் கிளம்பவேண்டும். அதற்குள் தங்களை ஒரு முறை பார்க்க விரும்புகிறேன்” என்றான் துதன் அந்த அறிக்கையை வாங்கிக்கொண்டு.

“நாளைக்கு இதே சமயத்தில் இவ்விடம் வா” என்றான் துதன்.

வேலை முடிந்தது

இருவரும் வெளியே கிளம்பினர், தன் வீட்டுப் பக்கம் புறப்பட்ட துதன் ஒரு மூலையில் ஜெர்மன் ரகசிய போலீஸ் உத்தியோகஸ்தன் நின்றுகொண்டிருந்ததைக் கண்டான் அவன் நெஞ்சம் கலங்கியது. துதன்மீது அவனுக்கு சம்சயம் உண்டாயிற்று.

தான் அம்மனிதன் கையில் ஒரு முக்கியமான அறிக்கையைக் கொடுத்துவிட்டது அவன் நினைவுக்கு வந்தது. அவ்வறிக்கை ஜெர்மன் அதிகாரிகளிடம் சிக்கினுல் அவனுக்கு சாவு நிச்சயம் என்பதில் சந்தேகமில்லை.

உடனே அவன் ஆர்தர் லெகிளேராக்கடைக்கு ஓடினான். ஜெர்மன் போலீசைச் சேர்ந்த இருவர் தன்னைப் பின் தொடருவதைக் கண்ட அவன், ‘இனி எனக்கு மீட்சி இல்லை” என்று சொல்லிக்கொண்டான்.

‘ஆர்தரை சந்தித்து அவன் விஷயங்களை தெரிவித்தான். “நாளைக்கு அந்த துதன் வருவான். அவன் உண்மையான மனிதனுயின் அவனிடம் எனது அறிக்கை இருக்கும். அதை வாங்கி சுக்கல சுக்கலாய் கிழித்துவிடு” என்று கூறிவிட்டு துதன் தன் வீட்டுக்குத் திரும்பினன்.

மறு நாள் துதனும் அவன் உற்றினனை ஆர்தர் லெகிளேராக்கும் தூதனை எதிர்பாரத்துக் கொண்டிருந்தனர். ஆனல் அவன் ஏன் வருவான்? ஜெர்மன் ரகசிய போலீஸைச் சேர்ந்த அவன் ஆடவேண்டிய பாகம் முடிந்து விட்டது. இனி அவனுக்கு அவர்களிடம் வேலை யில்லையன்றோ?

கடிதம் சிக்கியது

ஆர்னல்ட் என்ற ஏஜண்டால அனுப்பப்பட்ட கடிதம் பெல்ஜிய எல்லையில் ஜெர்மன் போலீசாரிடம் சிக்கிவிட்டது. விஷயங்களை அறிந்த பின் அவர்கள் அடைந்த வியப்புக்கு எல்லையில்லை. துதன் புகைப்படத்தை எடுத்துக்கொண்ட அவர்கள் அதைக் கொணர்ந்த துதனை கைது செய்து அவனிடமிருந்து கிரகிக்கக்கூடிய விஷயங்களெல்லாவற்றையும் கிரகித்துக்கொண்டனர்.

அந்தக் கடிதத்துடன் ஜெர்மன் ரகசிய இலாகாவைச் சேர்ந்த ஒருவன் துதனிடம் வந்து அவனை ஏமாற்றி அவன் கொடுத்த ரகசிய அறிக்கையைக் கவர்ந்து செல்வது மிகவும் எளிதான காரியமாயிருந்தது. துதனும் அவனது சகாவான ஆர்தர் லெகிளேராக்கும் கைது செய்யப்பட்டனர். இருவர்மீதும் ராணுவச் சட்டப்படி குற்ற வழக்கு தொடரப்பட்டது. துதன் தன் குற்றத்தை ஒப்புக்கொண்டான். தனது அறிக்கைகளைப்பற்றியும் ஹாலந்திலிருந்து வந்த 24 கடிதங்களைப் பற்றியும், யாதொரு தகவலும் ஆர்தருக்குத் தெரியாது என்றும், அவற்றை ஆர்தர் பிரித்து பார்ப்பதில்லை என்றும், துதன் கூறியதின் பயனாய் ஆர்தர் லெகிளேராக் விடுதலை செய்யப்பட்டான்.

துதனுக்கு மட்டும் மரண தண்டனை விதிக்கப்பட்டது.

அவனது தேசபக்தியும், தன்னலமற்ற சுபாவமும், மனோதைரியமும் மக்களது உள்ளங்களை கவர்ந்தன: அயல் நாடுகளிலும் அவன் பரிதாபகரமான கதை, பரவியது. அவனுக்கு மன்னிப்பு அளிக்கும்படி ஸ்பெயின் தேசத்து ஸ்தானீகரும், ஹாலந்து தேசத்து பிரதிநிதியும் அமெரிக்கா தேசத்து அதிகாரியும் ஜெர்மன் அதிகாரிகளை வேண்டிக்கொண்டனர். ஆனல் அது ஏற்றுக் கொள்ளப்படவில்லை. 1916-ம் வருஷம் ஏப்ரல் மாதம் 18-ந் தேதி அவனுக்கு இடப்பட்ட மரண தண்டனை நிறை வேற்றப்பட்டது. தேசபக்தியுடனும் வீரத்துடனும் பொலிந்த அவனது ஆவி அவனது உடலை விட்டு மறைந்தது. தனது மனைவியையும் 4 மாதக் குழந்தையையும் பிரிந்து செல்வதில் அவனுக்கு சிறிதேனும் கவலையில்லை. ஏனெனில் அவர்களை தனது தேசம் கைவிடாது என்பது அவனுக்கு நிச்சயமாகத் தெரியும்!

கவர்ன்மெண்டில் வைத்ய நிர்வாஹ ஸபைகளில் மெம்பரும், கவர்ன்மெண்டுவைத்திய பட்டதாரியுமான

வைத்தியரத்ன பண்டிட்

யு. ராமநாத சாஸ்திரியாருடைய

(Examiner in Medicine & Clinics,) (Govt. Diploma Examination, Etc.)

(In Govt. of India Medical Dress.)

மஹா பில்வாதி லேகியம்

பித்தம், வாந்தி, அன்னத்துவேஷம், அஜீர்ணம், உப்புஸம், புளியேப்பம், தலைச்சுற்றல், பித்த மயக்கம், பித்த வாயு, பலஹீனம், மலச்சிக்கல் இவைகளை தக்ஷணமே கண்டித்துவிடும். 1 சேர் கொண்ட டப்பி 1-க்கு ரூ. 3 வி. பி. வேறு.

ஆனந்த பற்பொடி

“மார்க்கட்டில் விற்கப்படும் இந்தியன் பற்பொடிகளுக்குள் ஆனந்த பற்பொடி ஒன்றுதான் மிக்க பிரவித்தியுடன் எங்கும் பெயர்பெற்றதென்பதற்குக் கொஞ்சம்கூட சந்தேகமே இல்லை” என்று சென்னை ஹைகோர்ட்டார் தீர்ப்பு செய்து இருக்கிறார்கள். எல்லா ஷாப்பு வியாபாரிகளிடமும் கிடைக்கும். போலிகளைக்கண்டு ஏமாறாதீர்கள். நேரில் வருவோருக்கு கன்ஸல்டிங் சார்ஜ் கிடையாது. கேட்லாக் இனும்.

வைத்தியஸித்தாச்ரமம்,
39, பஜார் ரோட்,
மைலாப்பூர் :: மதராஸ்.

பாபாலாலின்

இணையற்ற வைரங்கள்

உத்திரவாதமுள்ள நகைகள்

பாபாலால் & கம்பெனி,

“RAMAKOTI BLDG.”

ராட்டன் பஜார், பி. டி., மதராஸ்.

நாம், பழைய 216, சைனபஜார் கட்டிடத்திலிருந்து மேற்கண்ட இடசதிற்கு மாற்றியிருக்கிறோம் என்பதைக் கவனிக்கவும். ஞாயிற்றுக்கிழமை பகல் 1 மணிவரைதான் கடை உண்டு.

ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட் அவர்களால் தயாரிக்கப்பட்ட

I.D.L. 71. மாதர்களுக்குகந்த டானிக்
I.D.L. 81. சூதக கஷ்டங்களுக்கு டானிக்
I.D.L. 91. பிரசவத்திற்குப்பிறகு உதவும் டானிக்
I.D.L. 96. கர்ப்பிணிகளுக்கு டானிக்

வியாதி விபரம் ஸ்டாம்புடன் எழுதுக) (உதவி வைத்தியர் Dr. P.S.C. மணி
சோல் ஏஜண்ட்ஸ்:-யுனைடெட் கன்ஸர்ன், 54, பந்தர்தெரு, மதறாஸ்.

சீனாவின் சரித்திரம்

★

கிழ்த்திசை நாடுகள்

மேனாட்டு முறைகளைப் பின்பற்றி முற்போக்கடைவதா? அல்லது பழைய பாதையிலேயே நிர்விசாரமாகப் போய்க் கொண்டிருப்பதா? சென்ற நூற்றாண்டில் கிழ்த்திசை நாடுகள் முன்பு இந்தப் பெரும் பிரச்னை தலைகாட்டியது இதைக் காலஹரணமின்றி தீர்த்து வைத்து அனுகூலமடைந்த தேசம் ஜப்பான் தான்: ஆனல் சீனா மட்டும் உலகின் இதர பாகங்களில் ஏற்பட்டு வரும் மாறுதல்களைப் பற்றிச் சிறிதாவது சிந்திக்கவுமில்லை: கவலை காட்டவுமில்லை: தீர்க்கதரிசிகள் தீர்த்து வைத்திருந்த தத்துவங்களில் ஊன்றியும், அருங்கலைகளின் ஆனந்தத்தில் ஆழ்ந்தும் சீனர்கள் தங்கள் காலத்தைக் கடத்தினர்: பரத்தில் அதிக பற்று காட்டினரே தவிர இகத்தைப் பற்றி கருத்து கொள்ளவில்லை: காலச் சுழலில் தத்தளிக்காமல் தப்புவதெப்படி என்பதைப் பற்றி சீனர்கள் சிரத்தை காட்டவில்லை. அநேக ஆண்டுகள் இவ்விதம் நிம்மதியாக வாழ்க்கையைக் கடத்தினர்: நிர்ப்பந்தம் பிறந்ததும் தான் இந்த நிம்மதி நீங்கியது; சுக வாழ்வுக்குப் பங்கம் வந்த போது தான் சிறியெழுந்தனர்: ஆனல் ஒரு விஷயம்: சமயம் வந்தவுடன பின் வாங்கவில்லை: இன்று அவர்கள் மிகவும் ஆச்சர்யகரமான விதத்தில்போராடுகின்றனர்; ஆணவத்திற்கும் குறைவில்லை: அதற்கு அழிவில்லை என்பதற்கு சென்ற நான்கு வருஷ காலத்திற்கு மேலாகவே அவர்கள் ஜப்பானை எதிர்த்து நிற்பது தான் அத்தாக்ஷியாகும்

சியாங் கே ஷேக் தம்பதிகள்.

மேனாட்டுத் தொடர்பு

1793-ம் வருஷம்: பீகிங்கில் இருந்த சீன சக்ரவர்த்தியிடம் பிரிட்டிஷ் தூதர் ஒருவர் வந்தார்: இங்கிலீஷ் மன்னர் மூன்றாம் ஜார்ஜிடமிருந்து ஒரு கடிதமும் கொணர்ந்தார்: வர்த்தகச் சலுகையும் வியாபார ஸ்தலத்தையும் கோரினர்: பிரிட்டிஷ் ஸ்தானீகர் இருக்க இடத்தையும் வேண்டினர்: உறங்கிக் கிடந்தவருடன் உறவுகொள்ள கிளம்பினர், உரிமைகள் பெற உத்சாகம் காட்டினர்: இதறகு சக்ரவர்த்தி சீன்லங் உடனே பதில் அனுப்பிவிட்டார்: இதில் சீனாவின் மனப்பான்மையைக் காணலாம்: தூதரை யனுப்பியதை சக்ரவர்த்தி பாராட்டினர்: ஆனல் கோரிக்கைக்கு இணங்க தாம் சம்மதிக்கவில்லையென்றும் தெரிவித்துவிட்டார். நல்லாட்சி நடத்தி, பொறுப்பை நிறைவேற்றுவதே என் கடமை என்றார்: என் தேசத்தில்கிடைக்காத பொருளில்லை. ஆகவே இதர நாட்டு மிராண்டிகள் அனுப்பும் பொருள் எனக்கு எதற்கு என்றார் அவர். சீனப் பொருள்கள் வெளிநாடுகளுக்குப் போக மட்டுமே அவர் அனுமதியளித்தார். காண்டனிருந்து வர்த்தகம் பண்ணுவதற்கு அவர் சம்மதித்தார். இவ்விதமிருந்தது. சீனர் மனோ நிலை ஆத்மியத்தில் அவகாசத்தைச் செலவழித்தனரே தவிர, விஞ்ஞானத்தில் விருப்பம் காட்டவில்லை: அது தான் சீனாவுக்கு விபரீதமாக முடிந்தது: எதிகளது வெடி குண்டுகளிலிருந்து விடுதலைபெற அவர்கள் வழியறியவில்லை.

பிற நாடுகள் படையெடுப்பு

1840-ல் அபினி ஏற்றுமதி விஷயமாக மறுபடியும் பிரிட்டிஷார் சீனாவின் சகாயத்தை வேண்டினர். சீனா மறுத்தது: உடனே யுத்தம் ஆரம்பித்தது. அலக்ஷிய புத்தி ஆத்திரத்திற்கிடமளித்தது. முடிவு என்ன? ஹாங்காங் தீவு சீனாவை விட்டுப்பிரியநேர்ந்தது: ஐந்து துறைமுகங்களை பிரிட்டிஷ் வர்த்தகத்திற்காகத் திறந்துவிடவும் கட்டாயம் ஏற்பட்டது. இவ்வாறு பிரிட்டிஷார் வலுச் சண்டை போட்டு வர்த்தக உரிமையை அபகரித்தது, இதர நாடுகளுக்கும் வழிகாட்டியாகியது. 1856-ல் மறுமுறை சீனாவுடன் யுத்தம் தோன்றியது:

இச்சமயம் பிரிட்டிஷ்காரர்களும் பிரெஞ்சுக்காரர்களும் ஒன்று சேர்ந்தனர்: யாங்ஸி பள்ளத்தாக்கில் ஆதிக்கம் பெற்றனர்: இன்னும் ஏழு துறைமுகங்களையும் கைப்பற்றினர். தகராறு இத்துடன் தீரவில்லை 1870-ம் வருஷம் ஒரு பிரிட்டிஷ் உத்யோகஸ்தர் சீனாவில் கொலை செய்யப்பட்டார்; இது என்ன அக்ரமம் என்று ஆக்ரோஷம் ஆவிர்ப்பவித்தது; இந்த அநியாயத்திற்கும் பிரிட்டிஷ் பரிஹாரம் கேட்டனர் : மேலும் ஐந்து துறைமுகங்கள் வசப்படுத்திக் கொண்டதே பரிஹாரம் மாகியது. பிரெஞ்சுக்காரர் அன்னமையும் பிரிட்டிஷ் பர்மாவையும் பிடித்துக் கொண்டனர்: இவை இரண்டும் முன்பு சீன சாம்ராஜ்யத்தைச் சேர்ந்திருந்தன. 1894-ம் ஆண்டில் ஜப்பானும் சேர்த்து கொண்டது. புதிதாகப் பிடித்த ஏகாதிபத்தியப்பித்துடன் அந்த தேசம் சீனாமீது யுத்தத்தைத் தொடுத்தது; பர்மோஸாவையும் கொரியாவையும் பிடித்துக் கொண்டது : இதற்கப்புறம் ருஷ்யாவும் சேர்ந்துகொண்டு மஞ்சூரியாவில் சில முக்கியமான உரிமைகளை ஸ்வீகரித்தது.

இந்த நிலைமை நீடித்து வந்தது: ஆகவே பத்தொன்பதாம் நூற்றாண்டு முடிவடைந்த சமயத்தில் மிகவும் விஸ்தாரமான சீன சாம்ராஜ்யம் சீர் குலைந்து, பல நாட்டினர் வந்து குடியேறும் பிரதேசம் போல் மாறிவிட்டது.

சீன புனருத்தாரணம்

இதனால் ஏற்படும் கேட்டை அந் நாட்டு மக்கள் உணராமல் இல்லை. இதர நாடுகளுடன் செய்யப்பட்ட ஒப்பந்தங்கள் தாய் நாட்டிற்குத் தீங்கிழைப்பவை என்று பலர் பஹிரங்கமாகத் தெரிவிக்க முற்பட்டனர். இத்தகைய கொடுமையிலிருந்து சீனாவை விடுவிக்க கங்கணம் கட்டிக்கொண்டனர் பலர்: 1894-ல் “சீனா புனருத்தாரண சங்கம்” ஸ்தாபிக்கப்பட்டது: டாக்டர் ஸன் யாட் ஸென் இதை நிறுவினார். இந்த சங்கத்தை மிகுந்த பிரயாசையுடன் அவர் வலுப்படுத்தினர்: ஜப்பானில் சில காலம் தங்கி உயர்ந்த கொள்கைகளைக் கிரஹித்தவர்: வெகு விரைவில் ஆதரவு அதிகரிக்கச் செய்தார். இதில் யுவர்கள் அநேகர் மிகுந்த சந்தோஷத்துடன் சேர்ந்து கொண்டனர். அமெரிக்காவையே உதாரணமாகக் கொண்டார் டாக்டர் ஸென்: ஜனங்களுக்காகவே ஜனங்களால் நடத்தப்படும் ஜனங்களின் ஸர்க்காரை நிறுவுவதே அவரது திட்டம். அவர் கோரியது குடியரசு: பிரிட்டனில் இருப்பது போன்ற சட்ட வரம்புக்குட்பட்ட ஆட்சியல்ல: ஜப்பானில் காணப்படும் சக்ரவர்த்தியையும் அவர் ஆதரிக்கவில்லை: இவ்வாறு நாட்டில் ஒரு புது உணர்ச்சி தோன்றிக் கொண்டிருந்த சமயம் 1908-ல் சீன சக்ரவர்த்தினி காலமானாள்: ஒரு குழந்தை சக்கிரவர்த்தியாக முடி சூட்டப்பட்டது: நாட்டில் தோன்றிய த்வேஷ உணர்ச்சி கொஞ்சமும் தணியவில்லை: ஆர்ப்பாட்டம் அதிகரித்துக் கொண்டே போயிற்று: புரட்சிக்காரர்களது பலம் பெரிதாகி வந்தது. இந்த புது இயக்கத்தை அப்போது எதிர்த்து நிற்கக் கூடியவர் ராஜப் பிரதிநிதிகளுள் ஒருவரான யுவான் ஷி கேதான்: அவர் ஒரு பழைய பெருச்சாளி: ராணுவத்தைத் தம் கைகீழ் வைத்துக் கொண்டிருந்தார்: சமயாசந்தர்ப்பம் அறிந்தவர்: புது சக்ரவர்த்தியின் மாமா, அசட்டுத்தனமாக அவரை அலக்ஷியம் செய்

“கே. எஸ். ஆர்.”

சியாங் கே ஷேக் தமது கட்சியார்முன் பிரசங்கம் புரியும் காட்சி.

தார்: அதுவே அவர்களுக்கு விரோதமாக விடிந்தது.

சீனப் புரட்சி

டாக்டர் ஸென் ஸ்தாபித்த சங்கத்தின் பெயர் 1911-ல் "கொமின்டாங்" என்று மாற்றப்பட்டது. இதற்குப் பொருள் "ஜனங்களின் தேசீயக் கக்ஷி" என்பதே. இவ் வருஷம் அக்டோபர் மாதம நாட்டில் புரட்சி ஏற்பட்டது: யாங்ஸி பள்ளத்தாக்கில் ஆரம்பித்து, மத்ய சீனுவுக்கும் வட சீனுவுக்கும் இந்தக் கலகம் பரவியது. மறு வருஷத்தின் முதல் நாளில் கலகக்காரர் கைக்கு வந்த மாகாணங்களில் ஒரு குடியரசு ஸ்தாபிக்கப்பட்டதாகப் பறையடிக்கப்பட்டது: நாங்கிங் தலை நகராகியது: இக் குடியரசின் தலைமைப் பதவியை டாக்டர் ஸன் யாட் ஸென்னிடம் ஒப்படைத்தனர்: இந்த நிலைமையில் சீன ரீஜண்ட் யுவானின் உதவியை அபேக்ஷித்தார்: காலம் கடந்து விட்டதைக் கண்ட யுவான், சக்கிரவர்த்தி முடி துறப்பதைத் தவிர வேறு வழியில்லை எனக் கூறி விட்டார்: சீனுவில் சக்கிரவர்த்தி அதிகாரமும் இத்துடன் மறைந்தது: 250 ஆண்டுகளாக சீனுவில் நிலவி வந்த சக்கிரவர்த்தியின் ஆதிபத்தியம் இந்த சம்பவத்திற்கப்புறம் சிதறிப் போயிற்று: பிப்ரவரி மாதம் 12-ம் தேதி சக்கிரவர்த்தி சிங்காதனத்தைத் துறந்தார். டாக்டர் ஸன் யாட் ஸென்னின் அபீஷ்டம் நிறைவேறும் நிலைமையை எட்டியது: சீனுவின் சுதந்திரத்தைப்பற்றிய சந்தேகம் நீங்கும் ஸ்திதியும் ஏற்பட்டது: சுதந்திரம் கிடைப்பது அவ்வளவு சாமான்யமா? டாக்டர் ஸென் மேலும் சில கஷ்டங்களை யனுபவிக்க வேண்டியதாயிற்று. மஞ்சு வம்சத்தார் மறைந்தபோதிலும், யுவானின் ஆதிக்கம் வடக்கிலும் தெற்கிலும் வலுத்திருந்தது; டாக்டர் ஸென் மட்டும் சமாதானத்தையே விரும்பினர்: சாந்தியையே அவர் கோரினர்: சண்டை சச்சரவுகளை வெறுத்தார். குடியரசின் தலைமைப் பதவியை யுவானிடம் கொடுத்துவிடவும் அவர் சித்தமானர். ஆனல் யுவானுக்கும் குடியரசுக்கும் எவ்வளவோ தூரம்? அவனுக்கிருந்தது அதிகாரப் பித்துதான்: தான் மேலோங்கி மற்றவர்களைக் கீழ்ப்படிய வைக்க வேண்டும் என்பதுதான் அவனது ஆசை தன்னைத் தலைவனகக் கொண்ட குடியரசையே தகர்க்கும் நோக்கத்துடன் அவன் பிற நாடுகளிடமிருந்து கடன் வாங்கினன்: பார்லிமெண்டைக் கலைத்துவிட்டான்: குமின் டாங்கையும் அசட்டை பண்ணினன். இந்த நிலைமை எவ்வளவு நாள் நீடித்திருக்கக் கூடும்? அவனுக்கு எதிராக மற்றொரு ஸர்க்கார் மறுபடியும் முளைத்தது: டாக்டர் ஸென் தென் சீனுவில் மறுபடியும் எதிராகக் கிளம்பினர். டாக்டர் ஸென் எதை ஆதரிக்கவில்லையோ அதுவே அமுலுக்கு வந்துவிட்டது: சீனுவில் இரண்டு ஸர்க்கார்கள் இவ்விதம் போட்டியிட்டுக்கொண்டிருந்த சமயம் 1914-ல் மஹா யுத்தம் ஆரம்பித்தது. யுவான் மகுடம் தரிக்க விரும்பினன்.

மறுபடியும் உபத்ரவம்

இந்த நிலைமையில் ஜப்பான் மறுபடியும் சீனுவை உபத்திரவித்தது: சீனுமீது படையெடுத்தது: சீன அதிகாரிகள் காரணம் கேட்க எதிரிகள் சீறியெழுந்தனர். சீனுவை ஜப்பான் வசப்படுத்துவதற்கான 21 நிபந்தனைகளை அவர்கள் விதித்தனர். வட சீனுவில் அதிகாரம் வஹித்தவர்கள் ஆக்ஷேபித்துப்பார்த்தனர்: சக்தி இருந்தால்தானே சக்கரம் ஓடும்? வலுவில்லாமல் வெட்ட முயற்சிக்கலாமா? மற்றொரு விஷயம்: வட சீன ஸர்க்கார் பொதுஜன சம்மதி பேற்றதில்லை: இந்த சந்தர்ப்பத்தில் அந்த ஸர்க்கார் ஜப்பான் தெரிவித்த கோரிக்கைகளை பிரசாரப்படுத்தினர்: இதுவே பலன் அளித்தது: வெளி நாட்டாரும் உண்மையை உணர்ந்தனர்: ஜப்பானிடம் அமெரிக்காவும் ஆக்ஷேபம் தெரிவித்தது: இது காரணமாக சில விதிகள் திருத்தப்பட்டன: பல சாமான்யமாக்கப்பட்டன: மிகுந்த சிலவற்றை வட சீன ஸர்க்கார் ஒப்புக்கொள்ளவேண்டி வந்தது: இது நடந்தது 1915-ம் வருஷம் மேமாதம்: இது காரணமாக சீனு முழுதும் ஜப்பானிடம் விரோத உணர்ச்சி ஏற்பட்டது. யுவானும் இவ்வருஷமே இறந்தான். இதற்கப்புறமும் உள் நாட்டுச் சண்டைகள் தீர்ந்தபாடில்லை: புதிய தளபதிகள் தோன்றினர்.

1917-ம் வருஷம் ஆகஸ்ட்மாதம் சீனு ஜர்மனிமீது யுத்தம் தொடர்ந்தது. நேச தேசங்களுடன் தொடர்புகொண்டு, ஜப்பானிய ஆக்ரமிப்பைத் தவிர்ப்பதே இதன் நோக்கமாகும். இதே வருஷம் நவம்பர் மாதம் ருஷ்யா புரட்சி ஏற்பட்டது, ஐரோப்பிய நாடுகள் யுத்த காலத்தில் ருஷ்யாவுடன் கொண்டிருந்த சிநேகத்தில் டாக்டர் ஸென்னுக்கு மட்டும் நம்பிக்கையில்லை ஆகையால் ருஷ்ய புரட்சி ஏற்பட்டதும் அவர் அதை மனமார வரவேற்றார். ருஷ்யர்களும் சீனுவில தங்களுக்கிருந்த உரிமைகளை விட்டுக் கொடுத்து சீன கொமின்டாங் கட்சிக்கு சந்தோஷத்தைத் தந்தது; கீழ்திசை நாடுகள் கொள்ளையிடப்படுவதை தடுக்க ருஷ்யா விரும்பியது; ஆகவே ருஷ்யாவிடம் சீனுவுக்கு நம்பிக்கை பிறந்தது. ருஷ்யப் பிரதிப்ரோயோஜனத்தை எதிர் பார்க்காமல் விட்டுக் கொடுக்க சம்மதித்தும், ருஷ்யாவுடன் பஹிரங்கமாகச் சேர சீன சர்க்கார் பயந்து. ஐரோப்பிய நாடுகள் என்ன நினைக்குமோ என்ற சங்கையே முன் நின்றது. ஆயினும் கடைசியில் சீனுவின் பீகிங் ஸர்க்கார் பிரதிநிதிகளும் ருஷ்ய குடியரசுப் பிரதிநிதிகளும் 1924-ல் சந்தித்து சம்பாஷித்தனர்: சில விஷயங்களிலும் இருவரும் இணங்கினர். இந்த ஒப்பந்தத்தைப் பற்றி யறிந்ததும் பிரெஞ்சு அமெரிக்க ஜப்பானிய ஸர்க்கார்கள் பலமாக ஆக்ஷேபித்தனர். பீகிங் ஸர்க்காருக்கு நடுக்கம் ஏற்பட்டுவிட்டது. ஒப்பந்தத்தில் போடப்பட்ட கையெழுத்தை நிராகரித்தது: பீகிங் ஸர்க்கார் நிலைமை மிகவும் கேவலமாகிவிட்டது. உடனே ருஷ்ய ஒப்பந்தம் வெளியிடப்பட்டது: அப்போது சீனுவிடம் அது எவ்வளவு நியாயமாகவும் கௌரவமாகவும் நடந்து கொண்டது என்பது ஸ்பஷ்டமாகத்தெரிந்தது. ஜனங்களும் அதை சிலாகித்தனர்.

டாகடர் ஸென் கட்சி ஆதரவு

இந்த சமயத்தில் ருஷ்ய ஸர்க்கார் காண்டனில் இருந்த டாக்டர் ஸென்னின் தென் சீன ஸர்க்காரிடம் வந்து சேர்ந்தனர்: பரஸ்பர நல்லெண்ணம் இருவருக்கிடையே பிறந்தது: இந்தக் காலமெல்லாம் வட சீன ஸர்க்காருக்கும் தென் சீன சர்க்காருக்குமிடையே சண்டை நின்ற பாடில்லை. வடக்கே பல தளகர்த்தர்கள் கிளம்பினர். அதிகார ஆசையால் அநியாயம் செய்தனர். சுய நலம் கோரி சண்டையைப் பெரிதாக்கினர்: கொள்கைக் கோட்பாடில்லாமல் கொடுமை இழைத்தனர்: ஒரு விஷயம் இந்தத் தலைவர்கள் நினைத்தபோதெல்லாம் ஒன்று சேர்ந்தனர்: இஷ்டமில்லாதபோது வேற்றுமை கொண்டாடினர். ஆகவே நிலைமை மகா மோசமாக இருந்தது: இவர்கள் அந்நிய நாடுகளுடன் சேர்ந்து கொண்டு சொந்த தேசத்தைக் காட்டிக் கொடுக்கவும் தயங்கவில்லை: கேவல புத்தியையே இவர்கள் காட்டினர். டாக்டர் ஸென்னின் அதிகாரம் நடந்தி வந்த பிரதேசத்தில் தான் மக்கள் திருப்தியுடன் இருந்தனர். அவர் தமக்கு ஒரு திட்டம் தயாரித்துக் கொண்டார்: பொருளாதார அபிவிருத்தியில் நாட்டம் காட்டினர்: பிரஜா படையைத் திரட்ட உத்தேசித்தார்: தாய் நாடு சுதந்திரமடைவதில் ஆர்வம் மிகுந்திருந்தார்: அறியாமையை ஒழிக்க கங்கணம் கட்டிக் கொண்டார். 1924-ல் கொமின்டாங்கின் முதல் தேசிய மகா நாட்டை டாக்டர் ஸென் நடத்தினர். இங்கு அவர் ஒரு அறிக்கையை சமர்ப்பித்தார்: தமது லக்ஷியங்களை அவர் அதில் எடுத்துரைத்தார்: இதுதான் இதற்கப்புறம் இக் கட்சியாரின் பிரமாணமாகவும் விளங்கியது. ருஷ்யாவிலிருந்து டாக்டர்ஸென் பல நிபுணர்களை தம் நாட்டிற்கு வரவழைத்தார்: பொரோடின் என்ற நிபுணரும் வந்தார்: தேசத்தில் ஒரு புத்துணர்ச்சி பரவ வழி தேடினர்: தொழிலில் சிரத்தை ஏற்படுவதற்காக உழைத்தார். வெகு விரைவில் டாக்டர் ஸென்னின் ஸர்க்காருக்கு ஆதரவு அபிவிருத்தியாகியது: மூலைக்கு மூலை கிளம்பியுள்ள ராணுவத் தலைவர்கள் பலரையும அடக்கி அமைதியை நிலவச் செய்வதில் இந்த காண்டன் ஸர்க்கார் மும்முரமாய் முன் வந்தது.

சியாங் கேஷேக்

காண்டன் ஸர்க்காரின் ராணுவத்தில் தலைமை வகித்தது சியாங கே ஷேக்: இவருக்கு அப்போது வயது அதிகமாகவில்லை வாலிப பருவம்தான். ருஷ்யர் உதவியால் ஊக்கம் பெற்றார். காண்டனிலிருந்து ஹாங்கோவுக்கு படையைக் கொண்டு போனர்: அந்நாளில் ரயில் பாதை கிடையாது: பாதையெல்லாம் படை போகு முன்பேயே பல பிரசாரகர்களை அனுப்பி விடுவது வழக்கம்: போகும் இடங்களில் எல்லாம் அவர்கள் மக்களை உத்சாகப் படுத்தினர்: சுதந்திரததில் ஆசை கொள்ளச்செய்தனர்: அக்கிரமத்தைத் துலைக்க முன் வரும்படிக் கோரினர்: இவ்விதம் சியாங் கே ஷேக் படை சென்ற விடமெல்லாம் ஜனங்கள் அவரது கக்ஷியை ஆதரித்தனர். இவ்விதம் படை யெடுப்பின்றியே ஏதிர்ப்பு தளர்ந்தது. ஹாங்கோவில் ஒரு புதிய ஸர்க்கார் நிறுவப்பட்டது. இதற்கிடையில் டாக்டர் ஸென் 1925-ம் வருஷம் மார்ச்சு மாதம் காலமானர்: அதிகாரமும் இதற்கப்புறம் கொமின்டாங் கட்சியாரிடம் மாறியது: ருஷ்யத் தொடர்பு காரணமாக கொமின்டாங் கட்சியில் பொதுவுடமைக்காரர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டனர். 1920-ம் வருஷம் முதற்கொண்டே சீனுவில் பொதுவுடமைப் பிரசாரம் நடந்து வரலாயிற்று: பொதுவுடமைக் கட்சியார் சீனு தேசியக் கட்சியில் சேர்க்கப்பட்டது பலருக்கு அதிருப்தியாகவே இருந்தது: பல பொதுவுடமைககாரரும் இதை வெறுத்தனர்: இந்தச் சேர்க்கையால் தங்களது கட்சியின் ஆர்வம்தணிந்துவிடக்கூடும் என்பது அவர்களது கருத்து.

காசி விஸ்வ வித்யாலயம்

நம் பாரதநாடு மறுபடியும் பழைய பெருமையை அடைய வேண்டும் என்ற உன்னத நோக்கம்தான் காசி விஸ்வ வித்யாலயம் ஸ்தாபிக்கப்பட்டதற்குக் காரணமாகும் கிறிஸ்து பிறப்பதற்கு 70 ஆண்டுகளுக்கு முன்னரே தக்ஷசீலத்தில் ஒரு பெரிய சர்வகலாசாலை இருந்தது. பிரசித்தி மிகுந்தது. அதன் கீர்த்தியும், கௌரவமும் இன்றைக்கும் நமக்கு எட்டி வருகின்றன. ராஜகுமாரர்கள், பிராம்மணர்கள் மற்றும் எல்லா வர்ணத்தாரும் இதில் சேர்ந்து வித்யாப்யாஸம் செய்தனர்: நாட்டின் பல பாகங்களிலிருந்தும் வந்து குவிந்து குருக்களின் ஆசிர்வாதங்களைப் பெற்று அழியாப்புகழ் எய்தினர். மகத தேசத்திலிருந்து ஜீவகன் இங்கு வந்து சஸ்த்ர சிகிச்சையில தேர்ச்சியுற்றன்; பின்பு பிம்பிஸார மஹாராஜாவிடம் ராஜ வைத்தியனகவும பதவி வஹித்தான். இதற்கப்புறம் 400 வருஷங்களுக்குப் பின்பு அசோகன் காலத்தில் பாடலிபுத்ரத்தில் மற்றொரு பெரிய ஸர்வகலாசாலை நிறுவப்பட்டு நடந்துவந்தது. மாணவர்கள் இங்கு தங்கிப் படிக்கவும் அக்காலத்தில் வசதி அளிக்கப்பட்டது. இதற்குப் பின் வெகு காலம் கடந்து விட்டது; கிறிஸ்து பிறந்தபின் ஏழாவது நூற்றாண்டில் மறுபடியும் நம் நாட்டில் ஒரு பிரசித்தபெற்ற வித்யாபீடம சோபித்தது. இதுதான் நாளந்தா ஸர்வகலாசாலை; இதைப்பற்றித் தான் சீன யாத்ரிகர் ஹுவான் ஸாங் மிகவும் தடபுடலாக விஸ்தரித்திருக்கிறர். இங்கு பிராமமணீயமும் பௌத்தமும் நிர்த்தோஷமாகப் போதிக்கப்பட்டன. பண்டைய நாட்களில் நிலவி வந்த சர்வகலாசாலைகளைப்பற்றிநாம் ஆராயப புகுந்தால அந்த மாணவர்களுக்கு போஜன சௌகர்யமும் இட வசதியும அளிக்கபபட்டு வந்தன எனபதை நாம் அறியலாம்: இதுமட்டுமல்ல: வித்தியார்த்திகள விஷயத்தில் வர்ண பேதமே காட்டப்பட்டதில்லை; ஹிந்து மதத்தின் சிறப்பும் ஹிந்து தர்மத்தின் உயர்வும் அவர்களுக்குப் போதிக்கப்பட்டன. எட்டாம் நூற்றாண்டுக்குப் பின்பு நம் நாட்டில பௌராணிகர் அதிகம் தலை காட்டினர். இதனுல நமது கலாஸாரத்திற்கு அதிகப் பாதகமதான் நேரிட்டது. நம தேசீய உணர்ச்சிகளும இது தடையாகவே குறுககிட்டது பின்னர் வங்காளத்தில நவத்வீபத்திலும், காசியிலும தோன்றிய சர்வகலாசாலைகளில் குறுகிய மனப்பான்மை காட்டப்பட்டது. பிராமமணர்களை மட்டும சேர்ப்பது என்றஎண்ணம வலுத்தது. இதர வகுப்பார் படிப்பதற்கு அனுமதி மறுக்கப்பட்டது. இவவாறு நாட்டில பெரும்பான்மையான மக்களுக்கு வித்யாதானம வழங்கப்படாதது தான் தற்காலத்திலும் நம நாட்டில் அறியாமை அதிகரித்திருந்து வருவதற்கு ஓர் காரணமாம்.

மாளவியாஜியின் சேவை

பண்டித மதன் மோஹன் மாளவியா ஹிந்து தர்மத்தில் விசேஷ சிரத்தையுள்ளவர்: அதில் அவருகிருக்கும் பக்தி விசேஷத்தை அளவிட முடியாது. நம் இந்தியா எல்லாத் துறைகளிலும் முன் போல் முன்னணியில் நிற்க வேண்டும் என்பதையே அவர் பிரதானமாகக் கொண்டவர். இந்த சிந்தனை தான் சதா அவர் மனதில். 1904-ம் வருஷாரம்பத்தில காசியில காசி மஹாராஜா தலைமையில் ஒரு பெரிய கூட்டத்தைக் கூட்டினர். காசியில ஹிந்து தர்மத்தைப பிரசாரம பண்ணும் ஒரு ஸ்தாபனத்தை நிர்மாணிப்பதற்காக கூட்டத்தில் எல்லோரும் யோசனை பண்ணினர். இதற்காகத் தயாரான ஒரு திட்டம்மறுவருஷம்அக்டோபர் மாதம் அச்சிடப்பட்டது. பல மாகாணங்களிலும் பிரதான ஸ்தானம் வஹித்த பெரியோர்களுக்கு இதன் பிரதியொன்று அனுப்பப்பட்டது. திட்டத்தைப் படித்தவர்கள் யாவரும் அதை ஆதரித்தனர். சற்றும் தயக்கம் காட்டவில்லை. 1905-ம் வருஷம் டிசம்பர் மாதம் 31-ம் தேதி காசி டவுன்ஹாலில் திட்டத்தை ஆதரித்த பிரபலஸ்தர்களது கூட்டம் நடைபெற்றது. பாபு சுரேந்திரநாத்பானர்ஜி, கோபால கிருஷ்ண கோகலே, லோகமான்ய பால கங்காதர திலக், பாபு அரவிந்த கோஷ், லாலா லஜபதிராய், கங்கா பிரஸாத வர்மா, வி கிருஷ்ண ஸ்வாமி அய்யர். முதலிய பிரமுகர்கள் இங்கு ஆஜராயிருந்தனர். பண்டித மாளவியா அச்சமயம்செய்த அருமையான பிரசங்கத்தைக் கேட்டு இவர்கள் யாவரும் பரவசமடைந்தனர், இக் கூட்டத்தில் திட்டத்தை குற்றம் குறையின்றி சீர்படுத்தி அமைப்பதற்காக ஒரு தற்காலிக கமிட்டியும் நிறுவப்பட்டது: 1905 இந்து சரித்திரத்தில் முக்கியமானது. அந்நிய சாமான் பஹிஷ்காரத்தை ஒருபுறம் அரவிந்தர் ஆரம்பித்தார்: கோகலே சங்கத்தை [illegible] மற்றுமொரு புறம்: வந்தேமாதர கீதம் வங்கத்தில் வானைப் பிளந்ததும் இந்த வருஷம்தான். 1906-ம் ஆண்டு ஜனவரி மாதம் கடைசி வாரத்தில் கோவர்த்தன மடாதிபதிகளான ஜகத்குரு சங்கராச்சாரிய ஸ்வாமிகளது தலைமையில் கூடிய சநாதன தர்ம மஹா சபையில் இத்திட்டம் சமர்ப்பிக்கப்பட்டது அங்கீகாரமும் இதற்குக் கிடைத்தது.

ஸர்வகலாசாலை உப அத்யக்ஷகர் ஸர். எஸ். ராதாக்ருஷ்ணன்.



ஸயாஜிராவ் கெய்க்வார் லைப்ரரி.

கே. எஸ். ஆர்.

திட்டத்திற்கு ஆதரவு

புதிதாக ஸ்தாபிக்கப்படவிருக்கும் ஹிந்து சர்வகலாசாலையின் நோக்கங்கள் பின் கண்டவை என்று குறிப்பிடப்பட்டது. (1) ஹிந்துக்களது கலைகளைப் பாதுகாப்பதற்காக ஹிந்து சாஸ்திரங்களிலும சம்ஸ்கிருத பாஷையிலும் பயிற்சியளிப்பது. (2) எல்லாப் பகுதி

டாக்டர் ஸென் மரணத்திற்கப்புறம் காண்டன் ஸர்க்காரின் வலது சாரிக்கும் இடது சாரிக்கும் அடிக்கடி தகராறு ஏற்பட்டு வந்தது: இவ்விரு கட்சிகளும் ஒன்று மாற்றி மற்றொன்று அதிகாரத்தை கைப்பற்றி வந்தன. 1926-ம் வருஷம் வடது சாரியைச் சேர்ந்த சியாங் கே ஷேக் ராணுவத் தலைவரானுர்: கொமின்டாங் நம்பிக்கைக்குப் பாத்திரரானுர்: பொதுவுடமைக்காரரின் மதிப்பையும் பெற்ருர். இவ்வாறு அவர் அதிகாரத்திற்கு வந்தார். 1926-ம் வருஷம் முடிவதற்குள்ளாகவே சியாங் கே ஷேக் படை சீனவில் பெரும் பகுதியை மீட்டுக்கொண்டதுடன், ஹாங்கோவையும் கைப்பற்றிக்கொண்டது: காண்டனிலிருந்து தலைநகர் ஹாங்கோவுக்கு கொண்டு போகப்பட்டது. இவ்வாறு சீன தேசிய வாதிகளுக்குக் கிடைத்துவரும் வெற்றி ஏகாதிபத்திய நாடுகளைச்சற்று பிரமிப்புறச்செய்தது.

ஒற்றுமை நிலவ

கொமின்டாங் கட்சியில் இரண்டு சாரிகள் தோன்றியதைப் பற்றி முன்பே குறிப்பிடப் பட்டிருக்கிறது: பொதுவுடமை வாதிகள் இடது சாரியில் இருந்தனர். டாக்டர் ஸென் ருஷ்ய ஆலோசகர்களது உதவியை நாடியது முதற்கொண்டு சிறுபான்மையரான இவர்கள் இக்கட்சியில் சேர்ந்தும் தனிப்பட்டிருந்து வந்தனர், ஆனுல் ஹாங்கோவில் சர்வகட்சி சம்மதி பெற்ற மத்ய ஸர்க்கார் நிறுவப்பட்டவுடனேயே, யாங்ஸிக்குத் தென்புறமாயுள்ள பிரதேசத்தில் இவர்கள் தங்களது கட்சியை ஸ்திரப்படுத்திக்கொள்ள முற்பட்டனர். ஆனுல் சியாங்கே ஷேக் மட்டும் தேசத்தில் ஒற்றுமை நிலவுவதையே பெரிதாக எதிர்பார்த்தார்: இவ்வாறு ஐக்யபத்யத்தைக் கொணர்ந்து ருஷ்யர்களது உதவியில்லாமலே, காரியத்தை நடத்துவதில் அவர் கருத்து கொண்டார். இந்த விஷயத்தில் சீனவில்இருந்த மேனுட்டினரும், ஐரோப்பியரும் சியாங்கை ஆதரித்தனர். இங்கிலாந்தும் அமெரிக்காவும், பிரான்ஸூம் சியாங்குக்கு உன்னத ஸ்தானம் கொடுக்கத் தயங்கவில்லை: கமால் பாஷா மாதிரி ஒரு சர்வாதிகாரியாக அவர் இருப்பதை அவர்கள் விரும்பினரே தவிர, லெனின் மாதிரி புரட்சியாளராக அவர் மாறிவிடக்கூடாது என அவர்கள் மிகுந்த கவலை காட்டினர். 1927-ம் வருஷாரம்பத்தில் ஹாங்கோ ஸர்க்காருக்கும், தளகர்த்தர் சியாங்குக்கும் தகராறு ஏற்பட்டது.ஷாங்கையைப் பிடித்துக் கொள்ள சியாங் விரும்பினுர், ஆத்திரப்பட்டு இவ்வாறு செய்யக் கூடாது, கிடைத்ததை பத்திரப்படுத்திக்கொண்டு தான் மேலே படையெடுக்க வேண்டும் என்றனர் ஹாங்கோ ஸர்க்கார்: கொமின்டாங் கட்சியின் வடது சாரியார் சியாங்கை ஆதரித்தனர். மார்ச்சு மாதம் ஷாங்கை சீனர் வசம் வந்து சேர்ந்தது: இரண்டு நாளைக்கெல்லாம் நாங்கிங்கும் சியாங் கே ஷேக்கால் பிடிக்கப்பட்டது. இந்த சமயத்தில் கொமின்டாங் கட்சி இரண்டாகப் பிளந்தது. தேசிய வாதிகளுக்குக் கிடைத்து வந்த வெற்றிக்கு முற்றுப் புள்ளியிடப்பட்டது: இதற்கப்புறம் வீண் உபத்திரவமே முளைத்தது: புரட்சி ஒய்ந்தது: ஆனுல் அதற்கு எதிராக வேறு ஒரு புரட்சி ஆரம்பித்தது. தங்களதுவிருப்பத்திற்கு விரோதமாக சியாங் ஷாங்கையைப் பிடித்துக் கொண்டதற்காக, சியாங்கை அதிகாரத்திலிருந்து கீழே தள்ளிவிட ஹாங்கோ ஸர்க்கார் பிரயத்தனம்செய்தனர்: அவருக்கெதிராக ராணுவம் கிளம்பும்படிச் செய்யவும் அவர்கள் முயற்சித்தனர்: ஆனுல் சியாங் இச்சமயம் நாங்கிங்கில் தமது ஸர்க்காரை ஸ்தாபித்தார். தாம் இதுவரை ஆதரித்து வந்த ஸர்க்காருடன் சண்டையிட நேரிட்டது காரணமாக, சியாங், பொதுவுடமைக்காரர்கள். இடது சாரியினர், தொழிலாளர் இவர்கள்மீது தமது கோபத்தைத் திருப்பினுர்: ஷாங்கையில் அவரை எவர்கள் மனமுவந்து வரவேற்றனரோ அவர்களையே நிர்மூலமாக்க சியாங் துணிந்து விட்டார். பின்னர் அநேகர் சுட்டுக் கொல்லப்பட்டனர். ஷாங்கை கோரக் காட்சியளித்தது: ருஷ்யாவுக்கு எதிராக சில காரியங்கள் செய்யப்பட்டன; இதனுல் ஐரோப்பிய நாடுகளுடன் நட்பு ஏற்பட்டது.

மறுபடியும் வேற்றுமை!

ஆனுல் முடிவு விபரீதமாகத்தான்இருந்தது!சீனவில் ஒற்றுமை நிலவுவதற்கு பதிலாக, மறுபடியும் இரண்டு கட்சிகள் தாண்டவமாட ஆரம்பித்து விட்டன. இந்த ஒற்றுமைக்கு ஏற்பட்ட பங்கம் பிறருக்கு அதிக பயனளித்தது. 1927-ம் வருஷம் இடது சாரித் தலைவரான பொரோடின் ருஷ்யாவுக்குத் திரும்பிவிட்டார். ஆகவே ஹாங்கோவில் இருந்த கட்சிப் பிளவு மறைந்தது. நாங்கிங் ஸர்க்காரின் அதிகாரமே மேலோங்கியது. பொதுவுடமை வாதிகளுக்கும் இதனுல் வீணையே அதிகரித்தது. இந்த சந்தர்ப்பத்தில் இடது சாரியைச் சேர்ந்தவர் பலர் தங்களுக்கு இழைக்கப்படும் கஷ்டம் சகியாமல் நாட்டை விட்டு ஓடினர்: அவர்களுள் சீனக் குடியரசின் முதல் தலைவராக இருந்த டாக்டர் ஸென்னின் பத்னியும் ஒருவர்; தமது கணவர் உயிருடனிருந்தால் ராணுவம் பெற்றிருக்கும் மஹத்துவத்தை அடக்கியிருப்பார் என்றே அவர் எண்ணினர். மறுபடியும் சீனவில் அலங்கோலம் தலைவிரித்தாடியது: ராணுவத் தலைவர்கள் திரும்பவும் அதிகாரத்திற்காகப் போட்டியிட்டனர். நாங்கிங் ஸர்க்காரின் அதிகாரத்தை காண்டன் மீறியது.

1928-ல் நாங்கிங் ஸர்க்கார் பீகிங் நகரைப்பிடித்துக் கொண்டனர். ஆயினும் பொதுவுடமைக் கட்சியினரில் மிகுந்திருந்தவர் சும்மா இருக்கவில்லை: சிகப்புப்படை ஒன்றைத் திரட்டினா. தென் பகுதியில் இரண்டு மாகாணங்களுக்குள் புகுந்து அக்கட்சியினர் பல சீர்திருத்தங்களை அமுலாக்க முற்பட்டனர். ஆகவே சியாங்குக்கு சங்கடம் அதிகரித்தது: எதிர் தரப்பார் கிராமப் புறத்தில் புகுந்து தங்களது கொள்கைகளைப் பரப்பி வந்தனர்: ஆகவே அவர்கள் அனைவரையும் அடக்கியாளுவது சியாங்குக்கு சிரமமாகவே முடிந்தது. இவ்வாறு இடது சாரியார் வசமான பிரதேசத்தின் மீது சியாங் ஏழு முறை படையெடுத்தார்: கடைசியில் 1934-ல் தான் அவருக்கு வெற்றி கிடைத்தது: இவ்வொரு படையெடுப்பும் சியாங்கின் யுத்த வீரர்களுக்கு மேலும் மேலும் பயிற்சியையே தந்து வந்ததாம். 1934-ம் வருஷம் சிகப்புப்படையினர் இனி எதிர்த்து நிற்பது சாத்தியமில்லை என்று கண்டு கொண்டு, அக்டோபர் மாதம் 16-ம் தேதி சீனவை விட்டு ருஷ்யாவுக்குச் சென்றனர். போகும் வழியெல்லாம் பல உபத்திரவங்களையும் மற்றும் எதிரியின் தாக்குதல்களையும் சமாளித்துக் கொண்டு இவர்கள் 6000 மைல்கள் கடந்தது சரித்திரத்திலேயே ஒரு பெரிய சம்பவம் எனக் கூறலாம்.

ஸ்ரீமதி சியாங் கே ஷேக் பிரசங்கம் புரியும் காட்சி.

சியாங்கின் பலம் அதிகரித்தது

இவ்வாறு 1927-ம் வருஷம் ஏற்பட்ட இரண்டாவது புரட்சியில் தலை தூக்கி நின்ற, இந்த சியாங் கே ஷேக் தற்போது உலகத்திலேயே, சிறந்த தளகர்த்தர் என்ற பிரசித்தியை அடைந்திருக்கிருர். 1927-ம் வருஷம் மே மாதம் சியாங் ஷாண்டங்குக்குள் பிரவேசித்த போது, அந்த மாகாணத்தில் இருக்கும் ஜப்பானியர்களைப் பாதுகாப்பதற்காக, ஒரு படையை அந்த ஜப்பானிய ஸர்க்கார் அனுப்பினர். இந்த சமயத்தில் இதற்கப்புறம் மறு வருஷமும் ஜப்பானிய படைக்கும் சியாங் படைக்கும் சண்டை நடந்தது. மஞ்சூரியாவைப் பற்றியே ஜப்பான் கவலை கொண்டது. இச் சமயம் சியாங் படையின் எதிர்ப்பை சமாளிக்க முடியாமல் தவித்து வந்த, வட சீனத் தலைவர்களுள் ஒருவரான மார்ஷல் சாங் ஸோ லின்னிடம் மஞ்சூரியாவுக்குள் போய்ப் புகுந்து கொள்ளும்படி ஜப்பானியர் வற்புறுத்தினர்: திரும்பும் வழியில் அத்தலைவர் கொல்லப்பட்டார். இதற்கப்புறம் பீகிங் சியாங் வசமாயிற்று: 1928-ம் வருஷம் டிசம்பர் மாதம் இறந்த தலைவரின் புத்திரன் நாங்கிங் ஸர்க்காருடன் ராஜி செய்து கொண்டான்: மஞ்சூரியா அவனிடம் ஒப்புவிக்கப்பட்டது: இவை யாவும் ஜப்பானியரால் சகிக்க முடியவில்லை. இதற்கிடையில் அக்டோபர் மாதம் நாங்கிங்கில், கொமின்டாங் மகாநாடொன்று சியாங் கூட்டினர்: ஆரம்பத்தில் சிறிது காலத்திற்கு கொமின்டாங்கின் நிர்வாக சபையாக இருக்கவேண்டுமென்றும், சிறிது காலத்திற்குப்பின்பு ஒரு ஜனநாயக ஸர்க்கார் அமுலாக்கப்படவேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டன. இந்த கொமின்டாங் நிர்வாகக் கமிட்டியார் தான், சீன தேசிய ஸர்க்காரை அமைக்கவேண்டும்; ஸர்க்காரின் நிர்வாகம் பொறுப்பு ஐந்து பிரதம அதிகாரியிடம் விடப்பட்டது. இது காரணமாக சியாங் கே ஷேக் பிரதம மந்திரியானுர்: உண்மையில் சர்வாதிகாரி என்றே சொல்லலாம்: பொதுவுடமைக்காரர் எதிர்ப்பு மட்டும் இருந்து கொண்டே வந்தது. 1931-ம் வருஷம் சியாங் இந்தப்பதவியை ராஜிநாமாச் செய்தார். மறு வருஷம் அவர் இப்பதவியை யேற்கும்படி வற்புறுத்தப்பட்டார்: மீண்டும் பொதுவுடமைக்காரருடன் போராட்டம் நடத்தினுர்: மஞ்சூரியாவில் ஜப்பானியர் தங்களது அதிகாரத்தை நிலைநாட்டிக் கொண்டனர்: மஞ்சுகோ என்ற புது ராஜ்யத்தை ஸ்தாபித்தனர் அவர்கள்: மறு வருஷம் ஷாங்கையில் சீனு-ஜப்பான் யுத்தம் பலமாக நடந்தது. இந்த நிலைமையில் சியாங் ஜப்பானுடன் சமரஸம் பேச முயன்று வந்தார்: கூடியவரையில் காலத்தைக் கடத்தி, நாட்டில் ஒற்றுமையைக் கொண்டு வரவே அவர் சிரமப்பட்டார்: ஜப்பானியர் சீனவைக் குலைத்து விட தீர்மானித்திருப்பதைஅவர் உணர்ந்தார்: அந்த தீர்மானம் நிறைவேறுவதைத் தடுப்பதற்கு நாட்டார் ஒன்றுபட்டு நின்ருல் தான் முடியும் என்பதை அவர் அறிந்தார்: ஆகவே அவர் ராஜிப்பேச்சையே பேசி வந்தார்.

ஜப்பானின் ஆக்ரமிப்பு

ஆயினும் ஜப்பான் தான் வைத்த குறியிலிருந்து பார்வையை எடுக்கவில்லை. 1932' 1933-ம் வருஷங்களில் ஜப்பான் பல மாகாணங்களைக் கைப்பற்றிக் கொண்டது. பிந்திய வருஷத்தில் சமாதானம் தாற்காலிகமாக ஏற்பட்ட போது, ஜப்பான் சீனவின் பெரிய சுவர் வரைக்கும் வந்து விட்டது: வட சீனுதான் பாக்கி இருந்தது. இது நிற்க, இதற்கிடையில் சீனு சர்வ தேச சங்கத்திடம் முறையிட்டது: 'மஞ்சுகோ குடியரசு ஸ்தாபனம்' சர்வ தேச சங்க ஏற்பாட்டையும். மற்றும் எல்லா ஒப்பந்தங்களையும் மீறியிருப்பதாகச் சுட்டிக் காட்டப்பட்டது. சீனவின் சுதந்திரத்தைப் பாதுகாப்பதாக பல நாடுகள் அளித்த உறுதியும் காற்றில் விடப்பட்டதாகக் கூறப்பட்டது: ஆகவே 1932-ம் வருஷம் சர்வதேச சங்கத்தின் முன்பு பெரிய பிரச்னை எழும்பியது: ஆனுல் காரியத்தில் ஒன்றும் இல்லை; முறையிட்டது தான் மிச்சம்: சீனுவைப்பற்றி கேட்பாரில்லை. இதற்கப்புறம் வெகு சீக்கிரத்தில் ஜப்பான் சர்வதேச சங்கத்தை விட்டுப் பிரிந்தது. இந்த தாற்காலிக சமாதானத்திற்கப்புறம் வட சீனவில் ஜப்பான், வெகு தந்திரமாக தனது அதிகாரப் புகுத்த வாரம்பித்தது: சீனுவைப் பயமுறுத்தியும் பார்த்தது: அச்சமயம் இதையெல்லாம் எதிர்ப்பது விபரீதமாய் முடியுமென நாங்கிங் ஸர்க்கார் நினைத்தனர்: ஜப்பான் மட்டும் வட சீனவிலும் குறிவைத்திருந்தது: 1936-ம் வருஷம் ஜப்பானிய அந்நிய நாட்டு மந்திரி மூன்று கோரிக்கைகளை சீனுவுக்கு அங்கீகாரத்திற்காக அனுப்பினுர். அவை:—சீனு மஞ்சுகோவை ஒப்புக்கொள்ள வேண்டும்: பொதுவுடமைக்காரரை அடக்க வேண்டும்: ஜப்பானுடன் பரிபூரணமாக ஒத்துழைக்க வேண்டும். இந்தக் கடைசி நிபந்தனையில் தான் சூக்ஷமம் இருந்தது. சீனு இதற்கு எப்படி இணங்க முடியும்? சுயமரியாதை இதற்கு இடம் கொடுக்குமா?

தலைவர் சிறைப்பட்டார்

ஜப்பானை எதிர்த்தே தீர்க்க வேண்டும் என்றனர் அநேகர், 1936-ம் வருஷம் சீன சரித்திரத்தில் மிகவும் முக்கியமானது.சியாங்மட்டும் எது நேர்ந்தாலும் அவசரப்பட்டு யுத்தத்தில் இறங்க விரும்பவில்லை: ஷென்ஸி என்ற இடத்தில் பொதுவுடமைக் காரரைப் பிடித்து வைக்கும்படி, சியாங் ஒரு தளகர்த்தரை தம் படையுடன் அனுப்பினுர். ஜப்பானுடன் யுத்தம் ஆரம்பிக்க சியாங் விரும்பாதது, அந்த தளகர்த்தருக்கு வருத்தத்தை யுண்டு பண்ணியது: அவர் பொதுடமைக் காரருடன் சேர்ந்து கொண்டார். சியாங்கும் பிறகு அங்கு போனுர்; எதிரி பலம் கண்டு இதுகாரணமாக ஒரு கலகம் ஏற்பட்டது. தப்பியோட முயற்சித்த சியாங் கைது செய்யப்பட்டார். அவர்கள் சியாங்கின் மனதை மாற்ற முயற்சித்துப்பார்த்தனர். ஜப்பானுடன் உறவு கொள்ள சியாங் விரும்பவில்லை என்பதை அவர்கள் அறிந்தனர். இதற்கப்புறம் சியாங்கின் மனைவி, மைத்துனர் டி. வி. ஸூங் முதலியோர் வந்து சியாங்கின் விடுதலைக்கு ஏற்பாடு செய்தனர். ஜப்பான் எப்படியாவது சீனுவை ஜயித்துவிட வேண்டும் என்று விரும்பியது. படையெடுப்பதற்குத் தகுந்த சமயத்தையே அது எதிர்பார்த்துக் கொண்டிருந்தது. 1937-ம் வருஷம் ஜுலை மாதம் 7-ம் தேதி பீகினுக்கருகில், மார்க்கோ போலோ பாலத்தில், ஜப்பானிய வீரர்களுக்கும் சீனப் படையினருக்கும் ஒரு சிறு சச்சரவு ஏற்பட்டது. சீனு மீது பெரிய யுத்தத்தைத் தொடர ஜப்பான் இச்சிறு சம்பவத்தையே வியாஜமாகக் கொண்டது. அன்று ஆரம்பித்த யுத்தம் இன்றும் நீடித்து நடக்கிறது. வெகு விரைவில் ஜப்பான் சீனவில் பெரும் பகுதியைப் பிடித்துக் கொண்டது ஹாங்கிங்கில் வாங் சிங் வீ தலைமையில் ஒரு பொம்மை ஸர்க்காரும் ஜப்பானியரால் நிறுவப்பட்டது. இவ்வருஷம் டிசம்பர் மாதம் எதிரிகள் நாங்கிங்குள் புகுந்து கொண்டனர். ஆகவே சீனத்தலைநகர் சுங்கிங்குக்கு கொண்டுபோகப்பட்டது. இந்த யுத்தம் ஆரம்பித்ததுமே சியாங் பிரதம மந்திரி பதவியைத் துறந்து ராணுவத்தின் தலைமையை ஏற்றுக்கொண்டனர்.



சீனுவின் பிரசித்தி பெற்ற பெரிய சுவர்.

ஜப்பான் ஆரம்பித்த யுத்தம்

இப்போது சியாங் தலைமையின் கீழ் சீனுவில் எல்லோரும் ஒன்று பட்டு ஒருமுகமாக எதிரியுடன் போராடி வருகின்றனர். வெகு சீக்கிரத்தில் சீனுவை கபளீகரம் பண்ணிவிட ஜப்பான் எதிர்பார்த்தது; கொஞ்சமும் தளராமல் சண்டை செய்து வரும் சீனர்களிடம் எல்லோரும் பரிவு காட்டுகின்றனர். ஜப்பானியர் அநேக நகரங்களை நாசமாக்கி விட்டனர்: பல அழகான பிரதேசங்கள் பாழாக்கப்பட்டிருக்கின்றன: மக்களில் பெரும்பாலோர் மாண்டனர். இந்த மஹத்தான போராட்டம் காரணமாக ஜப்பானுக்கு அதிக சிரமம் இருக்கிறபோதிலும், சண்டை நின்றபாடில்லை. சீனர்கள் கொரில்லா முறையை அனுஷ்டித்து எதிரிகளைக் கலக்கி வருகின்றனர். ஜப்பானியர் காண்டனுக்குள்ளும் ஹாங்கோவுக்குள்ளும் புகுந்துவிடுவது நிச்சயம் என்று தெரிந்தவுடன், அந் நகரங்களை சீனர்களே தீக்கிரையாக்கிவிட்டனர். ஆகையால் ஜப்பானியப்படை நிர்மூலமாக்கப்பட்ட நகரங்களுக்குள் தான் பிரவேசிக்க நேர்ந்தது. எதிர்ப்புக்கு சளைக்காமல் சீனு சென்ற நான்கு வருஷங்களுக்கதிகமாகவே நடத்திவரும் போராட்டம் ஆச்சர்யகரமானது. சமீபத்தில் சீன தளகர்த்தரும் அவரது மனைவியும் இந்தியாவுக்கு விஜயம் செய்தனர்.

"சீனுவில் நாங்கள் எங்கள் சக்திக்கு சாத்தியமான அளவுக்கு சண்டை போட்டு வருகிருேம்: தைர்யத்தையும் நாங்கள் துறக்கவில்லை: எதிர்ப்பு மஹத்தானது: கோடிக்கணக்கான மக்கள் ஜப்பானியர்களின் கொடுமை காரணமாக மிகுந்த கஷ்டப்படுகின்றனர்: ஆனுல் அவர்கள் சிறிதும் வருந்துவதில்லை. எல்லோரும் கஷ்டப்படுகின்றனர்: கஷ்டப்படவும் தயாராயிருக்கின்றனர்: பொறுமையுடன் வெற்றி பெற உழைக்கின்றனர், பெரியவர்கள் கொடுத்த சொத்தைப்பாதுகாப்பதே கடமையாதலால், நாங்கள் போராடுகிருேம், நியாயம் கிடைக்கும் என்று நாங்கள் நிச்சயமாக நம்புகிருேம். சீனுவுக்கு இழைக்கப்பட்ட மகாபாதகங்கள் மறைந்து போகும் என்றும்" நாங்கள் எதிர்பார்க்கிருேம். இவ்விதம் ஸ்ரீமதி சியாங் கே ஷேக் எழுதியுள்ளார். இது சீனரின் மன உறுதியையும் திட நம்பிக்கையையும் குறிப்பிடுகிறது!

சியாங்கின் சரிதை

சியாங் ஒரு எளிய குடும்பத்தில் தோன்றியவர்: இப்போது 54 வயதாகிறது: தகப்பனார் மிகவும் சாமான்ய மானவர்; தாய் மகனுக்கு சீனக் கொள்கைகளையே போதித்தார்: சீன தத்துவத்தையே சியாங் படித்தார்: பிள்ளை பால்யத்திலிருக்கும் போதே பிதா உலகை விட்டுப் பிரிந்தார்: சிறுவனை வளர்க்கும் பொறுப்பு தாய் மீதேவிழுந்தது: எப்படியோ சிரமப்பட்டு ராணுவப் பயிற்சி யளிக்க ஏற்பாடு செய்தாள் அவள்: பதினைந்தாம் பிராயத்திலேயே மாங் என்று சிறுமிக்கு மணம் செய்வித்தாள். இந்த தாம்பத்ய வாழ்க்கையால் ஒரு புத்ரன் பிறந்தான்: சியாங் சிங் கோ-இவன்தான் அந்த புத்திரன்—மாங்கோ போய் திரும்பினுன்: சீனவில் பிரசார இலாகாவில் அமர்ந்தான். 19-ம் பிராயத்தில் அவர் ஜப்பானில் ராணுவக் கல்லூரியில் சேர்ந்தார்: டாகடர் ஸென்னை ஜப்பானில் தான் சந்தித்தார்: தாய் நாட்டு சுதந்திரத்தில் அங்கு தான் ஆசை பிறந்தது: சியாங்கின் வாழ்க்கையின் போக்கைமாற்றி வைத்தது, அழகு மிகுந்த ஸூமே லிங் என்ற யுவதியை சந்தித்ததுதான்: பைபிள் புத்தகம் ஏராளமாக விற்று நிறைய பணம் சம்பாதித்த ஒரு கிறிஸ்தவரின் பெண் அவள்: அமெரிக்காவுக்குப்போய் பெரிய வித்யா பட்டங்களைப் பெற்றவள்: மேனுட்டு கலாசாரத்தில் மூழ்கியவள்: ஆனுல் கீழ்நாட்டு சம்பிரதாயத்திலும் வேரூன்றியவள்: ஸூங் குடும்பத்தார் தனிச்சிறப்பு வாய்ந்தவர்கள். இந்த கடைசிப் பெண் மே லிங் சியாங்கை வரித்தாள் : இருவரும் 1927-ல் மணந்தனர். விவாகத்தை யுத்தேசித்து சியாங் கிறிஸ்துவமதத்தையும் தழுவிக்கொண்டார்: முதல் தாரத்தைத் தள்ளி வைத்தார்: ஆனுல் அவளுக்கு ஏற்பாடு செய்யாமல் இல்லை. ஸூங் குடும்பத்தாரின் மூத்த பெண் டாக்டர் ஸன்னின் மனைவி. இரண்டாம் குமாரி சுங்கிங் தேசீய ஸர்க்கார் பிரதம மந்திரியான டாக்டர் டி. வி, கங்கின் மனைவி: டாக்டர் டி. வி. ஸூங்தான் சீன பாங்கியின் தலைவர். ஆகவே இந்த குடும்பத்தாரின் சிறப்பு தெரியவரும்: டாக்டர் ஸென்னின் மரணத்திற்கப்புறம் தான் சியாங்குக்கு இக் குடும்பத்தார் சம்பந்தம் சம்பவித்தது. ஏற்கெனவே சுதந்திர உணர்ச்சி கொண்ட சியாங், இதன்காரணமாக மேலும் மேலும் சீனுவின் சிறப்புக்காக சிரமப்படலானுர், உலகத்திலேயே இவ்விரு தம்பதிகளின் பிரசித்தியும் பெருமையும் மிகவும் படர்ந்திருக்கிறது. ஏகாதிபத்திய வெறியரிடமிருந்து மீண்டு, தங்கள் சீனு ஒன்றுபட்டு, பிற நாடுகளுக்கு சமமாகச் சோபிக்க வேண்டும் என்பதே அவர்கள் கருத்து: அதுவே கடமை எனக் கருதி இன்றும் உழைக்கின்றனர்!

தமிழ் நூல்கள்

குழந்தைக்கட்டி	1	4
உலகரகசியம்	1	0
நவர்த்னலாகெட்	0	12
சாணக்கிய சாஸ்திரம்	0	2
வர்த்தக மித்திரன்	1	8
ஸ்வராஜ்யம்	0	5

சுதேசமித்திரன் ஆபீஸ், சென்னை

காணமற்போன பேஸரி

சிறு கதை - "கிச்சு"

நாகலக்ஷ்மியைப் பார்த்ததும் கனகத்திற்கு கோபம் பொங்கி யெழுந்தது. "உங்களுக்கு ஞாபகமிருக்கோனே! ஒரு நாள் உங்களிடம் பேஸரி வாங்கிக் கொண்டு போனேனே அன்றிலிருந்தே எனக்கு சனியன் பிடித்தது" என்றாள் கனகம். நாகலக்ஷ்மி பின் வாங்கவில்லை. "ரொம்ப நன்றாய்ச் சொன்னே! அது அவாளவாள் அத்ருஷ்டம். அதைப்போல் அத்ருஷ்ட பேஸரி அகப்படாதடீ" என்றாள். கனகத்திற்கு இவ்வளவு கோபம் வரக் காரணமென்ன? இந்த பேஸரி கனகத்திற்கு எப்படி கெடுதல் பண்ணியது? நாகலக்ஷ்மிக்கு நல்லது எப்படிச் செய்தது என்பதைக் கதையில் படியுங்கள்!

மனிதர்களுக்கு பல தினுசு பைத்தியங்கள் உண்டு. ஒருவருக்கு வேஷ்டி பைத்தியம் இருக்கும்: மன்னார்குடி வேஷ்டி யென்றால் உசிராயிருப்பார். அதைத் தவிர வேறு ஒன்றையும் வாங்கமாட்டார். ஒருவருக்கு தைல பைத்தியம் இருக்கும்: இந்த தைலம் குளிர்ச்சி, இந்த தைலத்தை தேய்த்துக்கொண்டால் உடம்பிற்கு நல்லது என்று சொல்லிக் கொண்டிருப்பார்: யாரிடமாவது நல்ல தைலமிருக்கிறது என்று தெரிந்தால் ஒரு சீசாவை தூக்கிக்கொண்டு அவர் வீட்டிற்கு கிளம்பி விடுவார். இன்னுமொருவருக்கு 'ஒய்ப்' (Wife) பைத்தியமிருக்கும். 'என் 'ஒய்ப்' இதைச் சொன்னாள், என் ஒய்ப் அதைச் சொன்னாள்' என்று ஆபீஸில் வேலை செய்யும்பொழுது கூட தேமேனு வீட்டிலிருக்கிறவள் பெயரை இழுத்து விடுவார். ஆனால் ஸ்திரீகளிடத்தில் சகஜமாய் உள்ளது நகை பைத்தியம். டிராமில் இரண்டு ஸ்திரீகள் போனால் கூட, இன்னொருத்தி என்ன நகை போட்டுக் கொண்டிருக்கிறாள் என்று கவனிப்பதிலேயே மற்றொருவள் மனம் முழுவதும் லயித்திருக்கும்.

நாம் எங்காயாவது சினிமாவிற்காவது டிராமாவுக்காவது போகும் பொழுது அடுத்தாத்து அருணாசல ஐயரிடம் போய், 'உங்கள் சில்க் ஷர்ட்டை சற்று கொடுங்கோ, சினிமாவிற்கு போக வேண்டும்; ஒங்க பிளேசர் கோட்டை கொடுங்கோ, டிராமாவிற்கு போகவேண்டும்' என்றுகடன் வாங்கி அணிந்து கொண்டு போகிறோமா? அல்லது 'எங்க பெரியப்பா பெண்ணுக்கு கல்யாணம். உங்க ரிஸ்டு வாட்சை சித்த கொடுங்கோ' என்று கோடியாத்து கோகர்ணமய்யரை கேட்டு வாங்கி போட்டுக்கொண்டு போகிறோமா? ஆனால ஸ்திரீகள் மட்டும் எங்கேயாவது கல்யாணம் கார்த்திகைக்கு போகிறதாயிருந்தால், யாருடைய நகையாவது கடன் வாங்கிப் போட்டுக்கொண்டால், தான் நகை போட்டுக்கொண்ட மாதிரியிருக்கும் என்று எந்த சாஸ்திரத்தில்சொல்லியிருக்கோ தெரியவில்லை. பிறருடைய நகையாவது வாங்கிப் போட்டுக் கொண்டு தனக்கும் அந்த நகை இருக்கு என்று பிறர் அறியும் படியாகச் செய்வதில் என்ன ஆனந்தம்? நகை பைத்தியம் என்றவுடன், "நகை பைத்தியத்தை ஒழி" என்ற கொள்கையுடன் ஆரம்பித்த "நகை பைத்தியம்" என்று திருநாமத்துடன் கிளம்பி ஒரு வாரம் உலாவி விட்டு அப்புறம் இருந்த இடம் தெரியாமல் அஸ்தமித்துபோன சங்கத்தின் காரியதரிசி ராமமூர்த்தியின் ஞாபகம் யாருக்கும் வராமலிருக்காது.

என்றைக்கு பஞ்சாமிருதம் அண்டு பஞ்சாமிருதம் கம்பெனியின் மானேஜர் பஞ்சாக்ஷரமய்யர், தன் ஆபீஸ் கிளார்க் ராமமூர்த்தியை தன் பெண் கல்யாணத்திற்கு வரும்படியாக கூப்பிட்டாரோ அதே சுப தினத்தில் ராமமூர்த்திக்கு ஏழரை நாட்டு சனியன் பிடித்தது என்றே சொல்ல வேண்டும். ஒருவருமில்லாத சமயம் பார்த்து பஞ்சாக்ஷரமய்யர் "ராமமூர்த்தி! எல்லோருக்கும் பத்திரிகை தான் அனுப்பித்திருக்கிறேன். ஆனால் உனக்கு பத்திரிகை அனுப்பித்தால் போறாது. நேராகவே கூப்பிட வேண்டும் என்று தோன்றியது. நாளைக்கு கல்யாணத்திற்கு கட்டாயம் நீ வர வேண்டும். உன் சம்சாரத்தை கூட கூப்பிட்டு வரவேண்டும் என்று ஆத்திலே சொல்லிக் கொண்டிருந்தாள். நாளைக்கு கல்யாணம். இந்த காலத்து தர்பார் மாதிரி ஒரே நாள் தான் கல்யாணம். ஞாபகமிருக்கட்டும். வராமல் உடம்பு சரிப்படவில்லை என்று ஏதாவது சாக்கு சொல்லிவிடலாம் என்று நினைக்காதே" என்றார்.

"பேஷாக வருகிறேன். நீங்களே கூப்பிடும்பொழுது நான் வராமல் இருப்பேனா?" என்றான் ராமமூர்த்தி சிரித்துக் கொண்டே.

அன்றைய சாயங்காலம் ராமமூர்த்தி வீட்டுக்கு வந்தபொழுது அவன் மனைவி கனகம் புன்னகையுடன் அவனை வரவேற்றாள்.

"உங்கள் ஆபீஸ் மானேஜர் சம்சாரம் இப்பதான் காரை போட்டுக்கொண்டு வந்து கூப்பிட்டுவிட்டு போனாள். அவாத்தில கல்யாணமாம. கட்டாயம் வர வேண்டும் என்று சொல்லி விட்டும் போனாள்" என்றாள். அவள் மனதில் தான் என்ன உத்சாகம்? ஒரு ஏழையின் வீட்டிற்கு ஒரு பணக்காரன் வந்து விட்டால் ஏழைக்கு ஒரே ஆனந்தம். ஒரு நாற்பது ரூபாய் சம்பாதிக்கும் கிளார்க்கின் வீட்டிற்கு ஆபீஸ் மானேஜரின் சம்சாரம் நேராக வந்து கூப்பிட்டு விட்டுப் போகிறதென்றால் அதைவிட ஆனந்தம் வேறு என்ன வேண்டும்.

"அப்படியா! ஆபீஸில்அவரே என்னை தனிமையில் கூப்பிட்டு கட்டாயம் என்னை வர வேண்டும் என்று சொன்னார். ஏதோ நல்ல காலம் தான் அவருக்கு நம் பேரில் ப்ரியம் ஏற்பட்டிருக்கு. நாளை சாயங்காலம் நீ ரெடியாய் இரு, நான் ஆபீஸிலிருந்து வந்தவுடன் உன்னை அழைத்துக்கொண்டு போகிறேன்" என்றான் ராமமூர்த்தி.

2

அடுத்த நாள். சாயங்காலம் அவன் ஆபீஸிலிருந்து வந்த பொழுது, கனகம் தன் கனகம் தானா என்று அவனுக்கே சந்தேகமாயிருந்தது. அவள் புது மாட்டுப் பெண் மாதிரி தன்னை அலங்கரித்துக்கொண்டிருந்தாள். ஆனால் அவள் மூக்கிலிருந்த வைர பேஸரி மட்டும் எங்கேயிருந்து வந்தது என்று அவனுக்குத் தெரியவில்லை.

"இது ஏது?" என்று ஆவலுடன் கேட்டான். தனக்குத் தெரியாமல் தான் மாசா மாசம் சம்பளத்தை அப்படியே கொடுத்ததில் மிச்சம் பிடித்து பேஸரி வாங்கியிருக்கிறாளோ என்று ஒரு நிமிஷம் யோசித்தான். ஆனால் தன்னைக் கேட்காமல் ஒன்றும் அவள் செய்கிறவளல்லவே.

"இதுவா? ஒரு சுதேசி சிகப்பு தோட்டையும் ஒரு இரட்டை வட சங்கிலியும் போட்டுக் கொண்டு நான் வருவேன் என்று நினைத்தீர்களா? சபைக்கு மோடனம் மாதிரி இவள் எங்கேயிருந்து வந்து முளைத்தாள். இந்த இஞ்சுரித்தியை ஏண்டா கூப்பிட்டோம் என்று அந்த அம்மாமி நினைக்கமாட்டாளா? என்னடா பண்ணுகிறது? என்று யோசித்தேன். மத்தியானம் நடுத்தெரு நாகலக்ஷ்மி யாத்திற்கு போயிருந்தேன். நல்ல வேளையாக அவள் அப்பொழுது பேஸரியை கழட்டி வைத்துக்கொண்டிருந்தாள். 'ஓராத்து கல்யாணத்திற்கு போகவேண்டும். உங்க பேஸரியை சற்று தருகிறீர்களா என்று கேட்டேன்' 'போட்டுக் கொண்டு போயேன், உனக்கில்லாமலா?' என்றாள் அந்த நாகலக்ஷ்மி அம்மாமி" என்றாள் கனகம்.

"பிறத்தியாராத்து நகையை போட்டுக்கொண்டு போனால் தான் வா என்று கூப்பிடுவார்களா? நமக்கு இருக்கிற நகையை போட்டுக் கொண்டு போனால் வா என்று கூப்பிடுபவர்கள் வீட்டுக்கு போனால் போதும். போகிற இடத்தில் நம் நகை கெட்டு போனால் கூட போய்விட்டு போகிறது என்று இருந்து விடலாம், பிறருடைய நகை கெட்டுப் போனால என்ன சால் ஜாப்பு சொல்லுகிறது?" என்றான்.

"நீங்கள் ஒன்றும் அஸ்து கொட்டாதேயுங்கோ. நான் ஜாக்கிரதையாய் திருப்பிக் கொண்டுபோய் நாளைக்கு கொடுத்துவிடுகிறேன். நான் என்ன பச்சைக் கொழந்தையா கெட்டுப் போக்கிறதக்கு?" என்றாள்.

3

ராத்திரி திரும்பிவரும் பொழுது பத்து மணியிருக்கும். டிராமெல்லாம்ஷெட்டிற்கு போய்விட்டன. பஸ் ஒன்றும சரியாக கிடைக்காதபடியால் ஒரு ஜட்கா வண்டியை வைத்துக்கொண்டு வந்தனர். அன்றைய இரவு பௌர்ணமி. சந்திரன் தன்னுடைய குளிர்ந்த கிரணங்களை அந்த இளம் தம்பதிகள் மேல் வீசினான். அவர்கள் மனதில் ஒரே குதூகலம் நிரம்பியிருந்தது. அவர்கள் கல்யாணத்திலிருந்து திரும்பி வந்ததால் தாங்கள் இரண்டு வருஷத்திற்கு முந்தி கல்யாணம் செய்து கொண்டபொழுது நடந்த சிற்சில ஆனந்த விளையாட்டுகள் அவர்களுக்கு ஞாபகம் வரவே, அந்த ஞாபகத்தில் தங்களையே மெய் மறந்திருந்தனர். வீட்டிற்கு வந்த பிறகு வேறு புடவை அணிந்துகொள்ளுவதற்காக உள்ளே போனபொழுது தான் தன் மூக்கில் பேஸரி இல்லாதது அவளுக்கு தெரியவந்தது. அவள் திடுக்கிட்டாள். வண்டியிலிருந்து கீழே இறங்கும் பொழுது தெருவில் கீழே விழுந்துவிட்டதோ என்று அவளுக்கு சந்தேகம். ஹரிகேன் லைட்டை எடுத்துக்கொண்டு போய் வாசல் பக்கம் தேட ஆரம்பித்தாள். அவள் கண்களில் நீர் ததும்பியது. கல்யாண வீட்டில் சாப்பிட உட்காரும்பொழுது பேஸரியின் திருகு கரை தொள தொளவென்று ஆடிக்கொண்டிருந்தது: அதை நன்றாக திருகிவிட்டாள். அப்புறம் அது எங்கே விழுந்திருக்ககூடும். சாப்பிட்டு கையலம்பினபொழுது அங்கேயிருந்த காந்த லைட்டை ஊர்வலத்திற்கு வேண்டும் என்று எடுத்துக் கொண்டு போய்விட்டார்கள். அங்கே ஒரே இருட்டாயிருந்தது. அந்த இருட்டில் கையலம்பும்பொழுது கீழே விழுந்திருக்குமோ என்று அவளுக்கு சந்தேகம் ஜனித்தது.

"என்ன தேடுகிறாய்?" என்று கேட்டான் ராமமூர்த்தி. ஏதாவது அவள் இடுப்பிலிருந்து அரையணா, காலணா கீழே விழுந்திருக்கும என்று நினைத்தான். ஒரு நிமிஷம் என்ன பதில் சொல்லுவது என்று அவளுக்கு புரியவில்லை.

"பேஸரி"என்றாள் மெதுவாக.

"பேஸரிக்கென்ன?" என்று வேடிக்கையாக கேட்டான்.

"எங்கேயோ கீழே விழுந்து விட்டது. திருகு சுரை ரொம்ப லூஸாக இருந்தது" என்று மான்போல் மருண்டு மருண்டு விழித்தாள்.

"விழுந்து விட்டதா?" என்றான் திடுக்கிட்டு. அவன் நினைத்தபடியே கெட்டுப்போய்விட்டது.

"நான் அப்பவே சொன்னேனே, கேட்டு தொலைச்சயா?" என்று கோபத்துடன் கேட்டான். அவள் மென்னு மென்னு முழுங்கினாள். அவள் என்ன கெட்டுப்போய்விடும் என்று கண்டாளா?

"என்ன கரடி ஜபம் பண்ணுகிறே! தொலைக்கிறது தொலைத்தாய்விட்டது. இனிமேல் ஈடு கொடுக்க வேண்டியவன் நான் ஒருவன் இருக்கிறேன். உனக்கு என்ன கவலை? செக்குலக்கை மாதிரி நிற்கிறாய்?" என்று ஓங்கி கன்னத்தில் ஒரு அறை அறைந்தான். அவளை கோபிப்பதில் பிரயோஜனமென்ன? கெட்டுப் போனது கெட்டுப்போய்விட்டது. ஹரிகேன் லைட்டை தூக்கிக் கொண்டு வண்டி வந்த மார்க்கமெல்லாம் போய் தேடினான். ஒரு இடத்திலேயும் காணோம். வண்டியில் விழுந்திருக்குமோ என்று வண்டி இருந்த இடத்திற்கு போய் வண்டியை தேடினான். கல்யாண வீட்டிற்கு போய் சந்து பொந்தெல்லாம் தேடினான்.

வைர பேஸரி என்ன ஒருசிறிய கடுகா, இருக்கிற இடம் தெரியாமலிருப்பதற்கு? ஒரு பேஸரி டால் வீசிக்கொண்டு கிடந்தால் அதை பார்த்துவிட்டு யாராவது சும்மாயிருப்பார்களா? யார் கையிலாவது அகப்பட்டு இருக்கும். அகப்பட்டவர்கள் இந்த காலத்திலா அகப்பட்டதை திருப்பி கொடுப்பார்கள்! பிரயோஜனமற்ற அலைச்சல். ராமமூர்த்தி வீட்டுக்கு திரும்பும் பொழுது ராத்திரி ஒரு மணியிருக்கும். என்ன செய்வதென்று அவனுக்கு புரியவில்லை.

4

நம் கையில் பணமிருக்கும் பொழுது நமக்கு கடன் கொடுத்தவர்கள் பணத்தை திருப்பிக் கேட்கமாட்டார்கள். நம் கையிலிருந்த பணம் செலவழிந்த பிறகு தான் அவர்கள் பணத்திற்கு நெச்சரிப்பார்கள். இது உலக இயல்பு. கனகம் அந்த பேஸரி கெட்டுப் போக்காமலிருந்தால், அடுத்த நாள் அவ்வளவு தடவை நாகலக்ஷ்மி அம்மாள் வேலைக்காரியை கனகத்தின் வீட்டிற்கு அனுப்பியிருக்க மாட்டாள்? கனகம் பேஸரியைத் தூக்கிக்கொண்டு ஓடிப் போய் விடுவாள் போல் நிமிஷத்திற்கு நிமிஷம் தூது அனுப்பித்தாள். "அம்மா உங்களை பார்க்கணுமாம்! கையோடு கூப்பிட்டுக் கொண்டு வரச் சொன்னாங்க" என்றாள் வேலைக்காரி:

"எதற்காக கூப்பிட்டனுப்பியிருப்பாள் என்று கனகத்திற்கு தெரியாது? ஏண்டா போய் பேஸரியை கடன் வாங்கி போட்டுக்கொண்டு போனோம் என்று ஆய்விட்டது. "வேலையாயிருக்கிறேன். சாயங்காலம் வருகிறேன் என்று போய் சொல்லு" என்றாள் கனகம். சாயங்காலத்திற்குள்ளாவது அகப்பட்டுவிடாதா என்று ஒரு குருட்டு யோசனை. அகப்பட்டால் பிள்ளையாருக்கு நூற்றெட்டு தேங்காய் உடைப்பதாக வேண்டிக்கொண்டாள். ஆனால் பிள்ளையாருக்கு தேங்காயில் அலுப்பு வந்துவிட்டதோ என்னமோ, அவளுக்கு பேஸரி அகப்படவில்லை.

எப்படி நாகலக்ஷ்மி அம்மாள் முகத்தில் முழிப்பது என்று அவளுக்கு தெரியவில்லை, அவளிடம் போய் பேஸரி கெட்டுப் போய் விட்டது என்றால் என் பேசரியைபோல பேஸரிஅகப்படுமா? இரண்டாயிரம் ரூபாயாச்சே என்று அந்த பேராசைக்காரி சொல்லுவாளே! ஆகையால் அதேமாதிரி ஒருபேஸரி வாங்கிக் கொடுத்து விடுவது என்று தீர்மானித்தார்கள்.

அதே மாதிரி பேஸரி ஒரு கடையில் இருந்தது. நாகலக்ஷ்மி அம்மாளால் அதை அடையாளம் கண்டு பிடிக்க முடியாது; தன் பேஸரிதான் என்று நினைத்துக் கொள்ளுவாள் என்று அவர்களுக்கு நிச்சயமாக தெரியும். அந்த பேஸரியை தான் போட்டுக் கொண்டு ஒரு நிமிஷம் அழகு பார்த்தாள் கனகம், இந்த பேஸரியைதான் போட்டுக் கொள்ள கொடுத்து வைக்கவில்லையே என்று ஒரு பக்கம் ஏக்கம்; இதை வாங்குவதால் நாம் எவ்வளவு சிரமப்பட வேண்டியிருக்குமோ என்று கவலை வேறு சண்டையினால் வைரம் விலை ஏறியிருந்தது. ரொம்ப சிரமப்பட்டு கடைசியில் எண்ணூறு ரூபாய்க்கு அதை வாங்கினார்கள். அந்த எண்ணூறு ரூபாய்க்கு ராமு எங்கே போவான்? அவனோ ஏழை. ஆபீஸில் சம்பாதிக்கிற முப்பத்தைந்து ரூபாயை வைத்துக் கொண்டு குடித்தனம் பண்ணி வந்தார்கள். வேறு சொத்து ஒன்றும் இல்லை. அந்த முப்பத்தைந்து ரூபாயில் எப்படி மிச்சம் பிடிக்க முடியும்! ஏதோ சிரமபட்டு ஆபீஸில் எண்ணூறு ரூபாய் கடன் வாங்கினான். அந்த பேஸரியை கனகம் நாகலக்ஷ்மி அம்மாளிடம் கொண்டு போய் கொடுத்தாள். அது தன்னுடைய பேஸரி இல்லை என்று சொல்லுவாள் என்று நினைத்தாள். ஆனால் அவள் "நான் என்ன பேஸரிக்காகவா உன்னை கூப்பிட்டனுப்பித்தேன் என்று நினைத்தாயா! பேஸரிக்கு என்னடீ அவசரம்? பொழுது போகவில்லையே; ஏதாவது பேசிக் கொண்டிருப்போம் என்று கூப்பிட்டனுப்பித்தேன் "என்றாள் அந்த மாய ஜாலக்காரி.

5

பேஸரி தொலைந்ததின் பலனை நாளடைவில் கனகம் அனுபவிக்கலானாள். ரூபாய் கடன் வாங்கினதற்காக மாசாமாசம் ஆபீஸில் இருபது ரூபாய் பிடித்துக்கொள்ள ஆரம்பித்து விட்டார்கள். மாசம் பதினைந்து ரூபாயில் காலக்ஷேபம் பண்ணுவதென்றால் லேசானதா? பத்து ரூபாய் வாடகை கொடுத்த வீட்டை காலிசெய்து

ரூ. 60,000 பெருமானமுள்ள ஆபரணங்கள் வழங்கப்பட்டன

AMERICAN NEW GOLD WORKS, P.O.Box 54,(S.M.)Amritsar.
(B. P. S.)

வீதிகளிலும் நம்பிக்கையற்ற கடைகளிலும் வாங்காதீர்கள்

நஞ்சன்கூட பல்பொடி

பல வியாதிகளைத்தடுக்கவும், குணப்படுத்தவும்

ஜீர்சப்

கூலாயில்

ஸ்நான தைலம்

கவனிக்க. போலிகளால் பற்களுக்கே அபாயம்

சோல் ஏஜண்ட்ஸ்: யுனைடெட் கன்ஸர்ன், 54, பந்தர் தெரு, மதருஸ்
(ஊதவி வைத்தியர் Dr. P. S. C. மணி) (தபால் மூலம் சிகிச்சை பெறுக)

விட்டு மாசம் நாலு ரூபாய்க்கு அடஞ்சா முதலி தெருவில் இரண்டு ரூம் வைத்துக்கொண்டார்கள். செலவிற்கு பணம் போதாமல் வீட்டிலிருந்த பாத்திரங்கள் ஒவ்வொன்றாக கடைக்கு போக ஆரம்பித்தன. தானே வீட்டுவேலைகளெல்லாம் செய்ய ஆரம்பித்தாள். இப்படி அவள் இரண்டு வருஷம் வாழ்க்கைப் புயலில் அகப்பட்டு தத்தளிக்கையில் அவளுடைய யௌவனம் அழகு எல்லாம் எங்கேயோ போய் அடைக்கலம் புகுந்து கொண்டனபோல் தோன்றியது.

* * * *

ஒருநாள் சாயங்காலம் கபாலீஸ்வரர் கோவிலில் கனகம் நாகலக்ஷ்மிஅம்மாளைகண்டாள்.

"என்னை அடையாளம் தெரியவில்லையா அம்மாமி! உங்களுக்கு?" என்றாள் கனகம்.

"என்ன கனகமா நீ! உன்னை அடையாளமே தெரியவில்லையெடி! இளைத்து கருத்து துரும்பாய் போய் விட்டாயே!" என்றாள். இத்தனை நாள் அடக்கியிருந்த ஆத்திரம் கனகத்தை பீறிக்கொண்டு வந்தது. இந்த தொடகாலியிடமிருந்து பேஸரி வாங்கிப் போட்டுக்கொண்டு போனதினாலல்லவா இவ்வளவு கஷ்டமெல்லாம்?

"உங்களுக்கு ஞாபகமிருக்கோன்னே! ஒரு நாள் உங்களிடம் பேஸரி வாங்கிக்கொண்டு போனேனே'அன்றையிலிருந்தே எனக்கு சனியன் பிடித்தது' என்றாள் கனகம் ஆத்திரத்துடன். "நன்றாய் சொன்னே! அது அவாளவாள் அதிர்ஷ்டம். அதைப்போல் அதிர்ஷ்ட பேஸரி அகப்படாதடீ! நீ திருப்பிக் கொடுத்துவிட்டு போனபிறகு தான் என் பிள்ளைக்கு வேலை உயர்ந்தது. என் பிள்ளைக்கு கல்யாணமாச்சு. என் பெண்ணுக்கு குழந்தை பிறந்தது. அது இமிடேஷன் பேஸரிதான் ஆனால்... என்றாள் நாக லக்ஷ்மி.

"என்ன, இமிடேஷன் பேஸரியா?" என்றாள் கனகம் திடுக்கிட்டு. "ஆமாம்! இமிடேஷன் பேஸரிதான். நிஜ வைரம் என்று நினைத்தாயா? ரங்கூன் வைரமன்னா முழுவதும். இருபது ரூபாய்க்கு வாங்கினேன், ஆத்திலேகூட அவர் உனக்கு எதற்கு ரங்கூன் பேஸரி! நல்லதாக வாங்கி தருகிறேனே என்றார். நான் தான் பணத்தை வீணாக்காதேயுங்கோ. பணக்காராள் இமிடேஷன் பேஸரி போட்டுக் கொண்டாலும் "நன்னா இருக்கு; இது நல்ல பேஸரி"என்பார்கள். ஏழைகள் நல்ல பேசரி வாங்கிப்போட்டுக் கொண்டால்கூட "இது இமிடேஷன் பேஸரி என்பார்கள். இது உலக இயல்பு" என்றேன். நான் போட்டுக்கொண்டிருக்கிற ரங்கூன் பேஸரி இருக்கே இதை யார் பார்த்தால்கூட ரங்கூன் பேஸரி என்று சொல்ல மாட்டார்கள். வாங்கி இரண்டரை வருஷமாகிறதே, ஆயிரம் ரூபாய் கொடுத்து வாங்கின பேஸரி மாதிரி பளிச் பளிச் சென்று இருக்கிறது. கருத்து போயிருக்கு என்கிறாயோ. கருக்கவுமில்லை. யார் நல்ல பேஸரி வாங்க வேண்டுமென்றாலும் நான் இமிடேஷன் பேஸரியையே வாங்கும்படிக்கு சொல்லிக்கொண்டிருக்கிறேன்" என்றாள் நாக லக்ஷ்மி.

நமது தொடர் கதை

ஸ்ரீகாந்தன்

சரத்சந்திரர் எழுதியது.

(ஸ்ரீ.கு.ப.ராஜகோபாலன் மொழிபெயர்த்தது)

முன் கதைச் சுருக்கம்

சிறுபிராயத்தில் இந்திரநாதனுடன் சேர்ந்து ஸ்ரீ காந்தன் தனது இளமைப் பருவத்தை மிகவும் துணிகரமாகவும் நிர்ப்பயமாகவும் கழித்ததுடன் சமூகத்தை விரோதிக்கும் விதமாகவும் நடந்து கொள்கிருன். இதற்கப்புறம் ஸ்ரீகாந்தன் ஓர் நாள் தனது பழைய நண்பனுன ஜமீன்தாரின் வீட்டில் பியாரியைச் சந்திக்கிருன். பியாரிக்கு ஸ்ரீ காந்தனிடம் விசேஷ ப்ரீதி: பிறகு அவன் வேறு இடம் கிளம்பி வழியில் ஒரு சந்யாஸியை அடைந்து சில காலம் தங்கி விட்டு அவரிடமிருந்து பிரிகிருன். ஸ்ரீ காந்தனுக்கு தேக அசௌக்யம் ஏற்படுகிறது. இந்தச் செய்தியை யறிந்து பியாரி அவனது உதவிக்கு வருகிருள். பியாரி வீட்டிற்குப் போன அவன் அங்கு குதூஹலத்தைப் பார்க்கிருன். பிறகு அவன் பியாரிடம் தன் விவாகம், ரங்கூன் பிரயாணம் இவற்றைப் பற்றி சம்பாஷித்து விடை பெற்று கப்பலேறிக் கிளம்புகிருன். கப்பலில் அவனுக்குப் பலருடன் பழக்க மேற்படுகிறது. ரங்கூன் போய்ச் சேர்ந்ததும் அவனுக்கு ஏற்படும் அனுபவம் விநோதமாக இருக்கிறது. அங்கு அவன் உத்யோகத்திற்காக அலேந்த பின் அதை சம்பாதிக்கிருன். இதனுடன் தான் கப்பலில் சந்தித்த அபயாவின் புருஷனைக் கண்டு பிடித்து, அவன் அபயாவை ஏற்கும்படி வழி தேடுகிருன். பிறகு அபயாவை ஸ்ரீகாந்தன் சந்தித்தபோது அவள் அவனிடம் பல சீரிய கருத்துகளை வெளியிடுகிருள். ராஜலக்ஷ்மியிடமிருந்து ஒரு கடிதம் வர ஸ்ரீகாந்தன் ரங்கூனைவிட்டு புறப்பட்டு அவளிடமே வந்து சேருகிருன். சில தினங்களுக்கப்புறம் இருவரும் யாத்திரை கிளம்புகின்றனர். ஸ்ரீகாந்தன் மனுேநிலை வேறுபடுகிறது. ஸ்ரீகாந்தன் தனியே புறப்பட்டுப் போய், ஊரில் தேக அசௌக்கியமடைகிருன். அந்நிலையில் அவன் ராஜலக்ஷ்மிக்குக் கடிதம் எழுத, அவள் அவனுக்கு சகாயம் புரிய உடனே அங்கு வந்து சேருகிருள். ராஜலக்ஷ்மி அவனிடம் காட்டும் ப்ரீதி மிகவும் அபாரமானது. ஒருநாள் தன்னையே தான் அவனுக்கு அளித்து விட்டிருப்பதாகவும் அவள் சொல்கிருள்.

2

வங்காளத்து மலேரியா எனக்கு நன்ருகப் பிடிபட்டு விட்டது என்பது மேற்கத்திய ஊரில் நுழைவதற்கு முன்பேயே எனக்கு நன்ருகத் தெரிந்து விட்டது. பாட்னு ஸ்டேஷனிலிருந்து ராஜலக்ஷ்மியின் வீட்டுக்குப் போகு முன்பு நான் அநேகமாகப் பிரக்ஞையற்றவனுகத்தான் இருந்தேன். அதற்குப் பிறகு ஒரு மாதம் எனக்குக் காய்ச்சல்: டாக்டரும் ராஜலக்ஷ்மியும் ஓயாமல் என்னைச் சுற்றி உட்கார்ந்து கொண்டே இருந்தார்கள்.

ஜுரம் தணிந்ததும் டாக்டர் பாபு வீட்டு எஜமானியிடம் "மேற்கே இருப்பதால் இந்த ஊர் நல்லது என்று தான் சொல்லுகிருர்கள். ஆனல் வியாதியஸ்தரைக் கூடிய சீக்கிரம் வேறு இடத்திற்குக் கொண்டு போவது அவசியம் என்று தான் நான் சொல்லுவேன்" என்ருர்.

மறுபடியும் மூட்டை முடிச்சுக் கட்டுவது ஆரம்பமாகி விட்டது. இந்தத் தடவை அது வெகு தடபுடலுடன் நடந்தது. ரதனை நான் தனியாகச் சந்தித்து, "இந்தத் தடவை எங்கே?" என்று கேட்டேன்.

இந்தப் புதுப்பிரயாணம் அவனுக்கு இஷ்டமேயில்லை என்று உடனே கண்டேன். திறந்த கதவின் பக்கம் பார்வையை செலுத்திக் கொண்டே வாய் வார்த்தையாகவும், ஜாடையாகவும் அவன் குசு குசு என்று சொன்னதிலிருந்து நானே தெரிந்து கொண்டேன். அவன் சொன்னது இதுதான்: பீர்பூம் ஜில்லாவில் கங்காமாட்டி என்று ஒரு சிறு கிராமம் இருக்கிறது. அந்தக் கிராமத்திற்கு பட்டா கொடுக்கும்பொழுது நான் ஒரு முறை அந்த திவானுஜி கிஷன்லாலுடன் போயிருக்கிறேன். அம்மா, தானே எங்கும் போவதில்லை. ஒருதரம் அங்கே போனுல் ஓடியே வந்து விடுவாள். மறுமுறை அந்தப் பக்கம் பார்க்க மாட்டாள். கிராமத்தில் பெரிய மனிதர்கள் இல்லை என்பதல்ல; கீழ் வகுப்பினர்கள்தான் அதிகமாக இருக்கிருர்கள். அவர்கள் கீழ்மையைப் போக்கவும் முடியாது; வசீகரிக்கவும் முடியாது!

ராஜலக்ஷ்மி எதற்காக அவ்வளவு சிறிய கிராமத்தில் அந்த மனிதர்களிடையே செல்லவே விரும்புகிருள் என்பதைக் கொஞ்சம் அறிந்தேன். பிறகு "கங்காமாட்டி எங்கே இருக்கிறது?" என்று அவனைக்கேட்டேன்.

"சாம்போகோ இருக்கிறதல்லவா? அந்த மாதிரிஸ்டேஷன் ஒன்றில் இறங்கி, அங்கிருந்து சுமார் இருபது இருபத்தைந்து மைல் கட்டை வண்டியில் போக வேண்டும். பாதை எவ்வளவு இடைஞ்சலோ அவ்வளவு பயமானதும் கூட! நான்கு பங்கங்களிலும் ஒரே மைதானம். ஒரு மரம் மட்டை கிடையாது. ஒரு நீர்-நிலை கிடையாது. வெறும் சரளைபூமி, சில இடங்களில் சிவப்பு, சில இடங்களில் கறுப்பு!" என்று சொல்லி ரதன் சிறிது நேரம் சும்மா இருந்துவிட்டு என்னை உற்று நோக்கி "பாபுஜீ, என்ன சுகத்தை எதிர்பார்த்து ஜனங்கள் அங்கே இருக்கிருர்களோ, எனக்குத் தெரியவில்லை. இந்தத் தங்கமான இடத்தை விட்டு, அங்கே போகிறவர்களைப்பற்றி நான் என்ன சொல்லட்டும்" என்ருன்.

ஒரு நீண்ட பெருமூச்சு விட்ட பிறகு நான் மௌனமாக இருந்தேன். இந்த சௌகர்யமான இடத்தை விட்டு எதற்காக அந்த மயான பூமியின் நடுவில், உற்றார் உறவினரில்லாத ஏழை மக்களிடையே ராஜலக்ஷ்மி என்னை அழைத்துக் கொண்டுபோகிருள் என்பதை அவளுக்கு சொல்லவும் முடியவில்லை; அதை அறிந்து கொள்ளவும் முடியவில்லை.

கடைசியாக நான் "என்னுடைய தேகத்தை உத்தேசித்துத் தான் போகவேண்டியிருக்கும், ரதன். இங்கேயே இருப்பது ஆபத்துக்கிடமானது. என்று டாக்டர்கள் பயமுறுத்தி விட்டார்கள்" என்றேன்.

"உடம்புக்கு ஒருவருக்கும் வருவதில்லையா பாபு? எல்லோரும் கங்காமாட்டிக்கா போகிருர்கள்?" என்ருன்.

'எல்லோரும் ஏதோ ஒரு மாட்டிக்குத்தான் (மண்ணுக்குத்தான்) போகவேண்டும். குணமடைந்தாலும் அடைவார்கள். அந்த மண்ணின்மேல் நீண்ட ஓய்வு எடுத்துக்கொண்டாலும் கொள்வார்கள். ஆனல் எங்கள் வியாதி நிற்பதாகவுமில்லை. சாதாரணமானதுமில்லை, அதனுல்தான் கங்காமாட்டி உசிதமான இடம் போலிருக்கிறது' என்று எனக்குள்ளேயே சொல்லிக்கொண்டேன்.

"அம்மாவினுடைய வரவு செலவுக் கணக்கைக் காக்கள் ஒருவரும் ஒருபொழுதும் பார்த்ததில்லை. அங்கே வீடு வாசல் ஒன்றும் இல்லையாம். அங்கே ஒரு குமாஸ்தா இருக்கிருன். அங்கே ஒரு நல்ல வீடு தயார் செய்வதற்காக அவனுக்கு இரண்டாயிரம் ரூபாய் அனுப்பப்போகிருள். இதோ பாருங்கள் பாபு, இதெல்லாம் தண்டமே இல்லாத சிறை வாசம் தானே? வேலைக்காரர்கள் என்னுல் நாங்கள் மனிதர்களில்லையா?" என்ருன்.

அவனுடைய வருத்தத்தையும் சலிப்பையும் கண்டு, நான் "நீ



அங்கே போகாவிட்டால் தான் என்ன ரதன்? சிரமப்பட்டால் வேறு எங்காவது உனக்கு வேலை கிடைக்காதா?" என்றேன்.

என் யோசனையைக் கேட்டு அவன் ஒன்றும் சமாதானம் அடையவில்லை. அவன், "அம்மா கூட்டிக்கொண்டு தான் போவாள். அவர்களுக்கு என்ன மந்திர சக்தி இருக்கிறதோ யார் கண்டார்கள் பாபு! அவர்கள் பார்த்து 'நீங்கள் எல்லோரும் யமலோகம் போகவேண்டும்' என்று சொன்னால் 'மாட்டேன்' என்று சொல்ல எங்களில் யாருக்கும் தைரியம் வராது" என்று சொல்லி முகத்தைத் தூக்கிவைத்துக்கொண்டு அவன் போய் விட்டான்.

ரதன் வெகு மனஸ்தாபத்துடன் பேசி விட்டுப்போனான். ஆனல் போகிற போக்கில் அவனறியாமல் ஒரு புது உண்மையை எனக்குத் தெரிவித்துவிட்டுப் போனான். எனக்கு மட்டுமல்ல, எல்லோருக்கும் அதே கதிதான்! மந்திர சக்தியைப் பற்றி அவன் சொன்னதை நினைத்துப் பார்த்தேன். எனக்கு மந்திரம் தந்திரத்திலெல்லாம் நம்பிக்கை உண்டு என்பதல்ல; ஆனல் இந்த மாதிரி ஒரு விஷயம் ஆட்களில் ஒருவனுக்காவது 'யமலோகத்துக்குப்போ' என்று கட்டளையிட்டால் ... வல்லது தான் என்ன?

இவ்விதமான நிகழ்ச்சிகளிலிருந்து விடுவித்துக்கொள்ள முடியாதென்று, நான் என்ன தான் செய்யமுடியும்? விடைபெற்றுக்கொண்டேன். ... வாழ்க்கையில் இதற்கு மேல் என்ன செய்யமுடியும்?"—

ஆனல் நான் செய்தது ஒவ்வொன்றும் "உருண்டையான ..." ...

நானும் ஒருதரம் அதைப் பார்த்து விட்டு "ஆம்! அதுவா சுத்தமானதாகத்தான் இருக்கும்" என்றேன்.

"புதிதாக இருப்பதைப் பற்றிப் பேச்சில்லை. சுத்தமாக இருப்பதைப் பற்றித்தான் சொல்லுகிறேன்" என்று சொல்லிச் சிறிது சிரித்து விட்டு "நீ வெளிக்கு இந்தச் சட்டையுடன் நன்ருகத்தான் தோன்றுகிறாய். அதை எடுத்து விடு என்று நான் சொல்லவில்லை. ஆனல் உள்ளே அது வியர்வை நாற்றம் எடுத்திருக்கிறது, என்பதை நீ எப்பொழுது தெரிந்து கொள்ளப் போகிறாய்?" என்று சொல்லி அவள் ரதனைக் கூப்பிட்டாள். யாரும் பதில் சொல்லவில்லை.

...

ராஜலக்ஷ்மி உடனே தன் கையிலிருந்த பாத்திரத்தைக் கீழே வைத்து விட்டுப் பக்கத்து அறையிலிருந்து ஒரு புதுச்சட்டையை எடுத்து வந்து என் கையில் கொடுத்து "உன்னுடைய மகிமை ... " என்று சொல்லிப் பாத்திரத்தை எடுத்துக் கொண்டு கீழே போய் விட்டாள்.

சட்டையைக் கழற்றிப்பார்த்தேன். உண்மையிலேயே அதன் உள் பக்கம் மிகவும் அழுக்கடைந்திருந்தது. ...

ராஜலக்ஷ்மிக்கு நல்ல காற்றிலிருந்து வைத்தியம் பல சமயங்களில் எங்கும் அசாதாரணமான தோற்றமளிக்கும் ...

...

ஒருநாள் வெகு ஆச்சரியத்துடன் யோசித்தேன். ...

அவள் திடுக்கிட்டு நின்று புருவங்களை வளைத்து, "என்ன தெரியுமென்கிருர்கள்?" என்ருள்.

"மந்திரம்!" என்றேன்.

...

பியாரியினுடைய முழு சரித்திரமும் எனக்குத் தெரியாது— அறியவும் நான் விரும்பவில்லை. பின்னல் அவளைப்பற்றி எனக்கு முற்றிலும் தெரியும் என்பதல்ல, ஆனல் இது மட்டும் தான் எனக்குத் தெரியும். ...

குளிர் காலத்தின் மாலை நெருங்க ஆரம்பித்தது. ...

பொழுது முகத்தைத் திருப்பிக் கொண்டு ... மனிதர்களிலேயே அநேகம் பேர் பிரங்கங்களையும் ...

FREE
ART PHOTO ALBUM
French Art Photos of beautiful young girls in charming poses are sent against /5/- postage stamps with one album free. Limited albums left Order new lest you be disappointed
LONDON COMMERCIAL CO.
P. B. 165 (S M M.) LAHORE (INDIA)
(E A B)

லிவர் க்யூர் கொடுங்கள்

ஜிம்மி வெங்கட்ரமணய்யா & சன்ஸ்.

IMMEDIATE VASHIKARAN
On contract basis we undertake to influence or subjugate like spellbound anyone or more persons (male or female) instantly and surely cause them entirely at your own pleasure... Particulars 3 stamps. SANTI ASRAM, Dacca (Bengal)

யுடன் சொல்லுகிறது. நான பலவீனமாகக் களைப்படைந்து தோல்வியடைந்தவனாக எண்ணி, என்று என்னை அவள் கையில் ஒப்படைத்தேனோ அன்று முதல் அந்தத் தோல்வியுடன் கூட ஒரு விதமான ஏழ்மை யுணர்ச்சியும் என்னிடம் ஏற்பட்டது. ஆனால், இன்று எனது உள்ளம் தைரியமாகத் திரும்பத் திரும்ப 'ப்யாரியை நீ சரியாக அறியவில்லை. அவள் உன்னுடைய அறிவிற்கு வெளி யில நின்றுகொண்டிருந்தாள். ஆனால் ராஜலக்ஷ்மி ஒரு நாள் உன்னுடையவளாக இருந்தாள். அவளையே நீ இன்று உனது முழு உள்ளத்துடன் அங்கீகரித்துக் கொள். அவளுடைய கையின் மூலமதான் வாழ்க்கையினுடைய சகல மேன்மைகளும் நிரந்தர மாகப் பெருகிக்கொண்டிருக்கின் றன. உன்னுடைய மிஞ்சிய நாட்களை அவள் கையிலேயே ஒப்படைத்துக் கவலையற்றிரு!' என்று சொல்லிற்று.

புது வேலையாள் விளக்குக் கொண்டு வந்தான். வேண்டா மென்று அவனிடம் சொல்லி அனுப்பி விட்டு இருட்டிலேயே உட்கார்ந்திருந்தேன். 'ராஜலக்ஷ்மியை அவளுடைய சகல மேன்மை சிறுமைகளுடன் இன்று நான் ஏற்றுக்கொள்கிறேன். என்னால் எவ்வளவு கூடுமோ அவ்வளவையும் என் கையில் வைத்துக்கொள்ளுகிறேன். என் சக்திக்கு மேல் போனதை அவ ளிடம் கொடுத்து விடுகிறேன்' என்று மனதில் சொல்லிக் கொண்டு மௌனமாக உட்கார்ந் திருந்தேன்.

முதல் நாள் போல மறுநாளும் ஏற்பாடுகள் நடந்தன. மூன்றும் நாள் கூட அவை நடந்து முடிந்த பாடில்லை. அன்று மாலை நேரத் தில் பெரிய பெட்டி ஒன்றில் தட்டுமுட்டு சாமான்கள் பாத்தி ரங்களெல்லாம் போட்டுப் பூட்டி னார்கள். நான் வீட்டிற்குள்ளிருந் தே எல்லாவற்றையும் பார்த் துக்கொண்டிருந்தேன். சமயம் பார்த்து ராஜலக்ஷ்மியை அருகில் கூப்பிட்டு "இதெல்லாம் எதற் காக? நீ இங்கு திரும்பி வரவே போவதில்லையா?" என்று கேட் டேன்.

"திரும்பி எங்கே வருவது என்று சொல்லேன்?" என்றாள்.

அந்த வீட்டைப் பங்குவிற்கு அவள் எழுதி வைத்து விட்டது என் நினைவிற்கு வந்தது. "ஆனால் நீ நிரந்தரமாக அங்கே இருப்பது நல்லதா?" என்று கேட்டேன்.

ராஜலக்ஷ்மி கொஞ்சம்சிரித்துக் கொண்டு "எனக்காக நீ கவலைப் படவேண்டியதில்லை. உனக்குச் சௌகரிய மில்லாவிட்டால் திரும்பி விடு, நான் தடை செய்ய வில்லை!" என்றாள்.

அவள் சொன்ன சொற்கள் எனக்குச் 'சுறுக்' என்று தைத் தன. நான் மௌனமாகி விட் டேன். அந்த நிலைமையில் நான் கேட்கும் எந்தக் கேள்வியையும் அவள் சாதாரணமாக எடுத்துக் கொள்ளுவதில்லை என்று நான் பல தடவைகளில் கண்டிருக்கி றேன். நான் அவளைக் கபட மற்றுக் காதலிக்க முடியும், அல் லது அவளுடைய போக்கில் ஈடு பட்டிருக்க முடியும் என்பதை அவள் ஒருபொழுதும் மனதில் ஊன்றி வைத்துக்கொண்ட தாகத் தெரியவில்லை. சந்தேகத் தின் அலைபுரட்சியில் ஒரு நிமி ஷம் இந்த அவநம்பிக்கை உக்கிர மாக வெளிவரும் பொழுது அந்த ஜ்வாலை இருவர் மனத்திலும் வெகு நேரம் தங்கிப் புண்படுத் திக்கொண்டிருக்கும். இந்தச் சந்தேக நெருப்பை எப்பொழுது அணைப்பது, எப்படி அணைப்பது என்பது என்க்கு ஒன்றும் விளங்கவே இல்லை. இந்தப் பிரச்சனை கங்காமாட்டியிலாவது முடிவு பெறுமா பெறாதா என்ற விஷயம் அவள் கையில்தானிருந் தது என்று எனக்குத் தோன் றிற்று.

எல்லாவிதமான ஏற்பாடுகளி லும் நான்கு நாட்கள் கழிந்தன. நல்ல நாளை எதிர்பார்ப்பதில் இரண்டு நாட்கள். அதன் பிறகு ஒரு நாள் முன்பின் தெரியாத கங்காமாட்டியை நோக்கி நாங் கள் உண்மையிலேயே பிரயா ணம் செய்யக் கிளம்பினோம். பாதை யொன்றும் சுகமாகக் கழியவில்லை. மனதில் கொஞ்சங் கூட நிம்மதி கிடையாது. எல் லோருக்கும் மேலாக ரதன்தான் சிரமப்பட்டான் என்பது தெரிந் தது. அவன் முகத்தைத் தூக்கி வைத்துக் கொண்டு வண்டியின் ஒரு மூலையில் உட்கார்ந்திருந் தான். ஸ்டேஷன் ஸ்டேஷனாகப் போயிற்று. அவன் ஒரு வேலை யிலும் கொஞ்சம்கூடஉதவிபுரிய வில்லை. ஆனால் நான் வேறு எதையோ நினைத்துக்கொண் டிருந்தேன். இடம் நல்லதா கெட்டதா, என் வியாதி அங்கே குணம் ஆகுமா ஆகாதா, என் வாழ்க்கை என்னமோ இது வரைக் கஷ்டமின்றி நடைபெற வில்லை, அநேகக் கஷ்டங்களைச் சகித்து இவ்வளவு நாள் அதனு டன் போராடி ஒரு விதமாக ஓய்வு ஏற்பட்டிருக்கிறது. அவற் றிற்காக நான் யாரையும் குறை கூறவில்லை. என்னையும் குறை சொல்லவில்லை! அதெல்லாம் கடைசியாக இப்படி ஒரு அறி முகமாகாதப் பிரயாணத்தில் தானா கொண்டுவிடவேண்டும் என்ற ஏக்கம் தான் என்னை வாட்டிற்று. நாங்கள் போய்ச் சேரவேண்டிய இடத்தை நோ க்கி வண்டி வெகு வேகமாகப் போகப் போக, இனிமேல் என்னமோ, என்ற அந்த ரகசி யத்தின் சுமை என் உள்ளத்தில் சுமையாகச் சுமர ஆரம்பித்தது. என் மனத்தில் தோன்றியதெற் கெல்லாம் ஒரு முடிவேயில்லை. வெகு சீக்கிரத்தில், எனக்கு ஒரு பெருத்த துர்ப்பாக்கியம் நேரி டும். அதைத் தவிர்க்கவோ அதிலிருந்து விடுபடவோ முடி யாது என்று எண்ணலானேன், அப்பொழுது என்ன ஆகும்! என்னதான் ஆகாது என்பதைப் பற்றி நினைத்தபொழுது நான், வல வலத்துப்போனேன். ராஜ லக்ஷ்மி ஜன்னலுக்கு அருகில் மெள்ளமாக உட்கார்ந்து ஜன்ன லுக்கு வெளியே பார்த்துக் கொண்டிருந்தாள். பார்த்தேன்! அவளை நான் உண்மையாக ஒரு நாளும் காதலித்ததில்லை என்று எனக்குத் திடீரென்று தோன் றிற்று. ஆனாலும் நான் அவளைக் காதலித்தே தீரவேண்டும். வேறு வழியே கிடையாது. இப்பேர்ப் பட்ட நிலைமை பூமியில் யாருக் கும் எங்கேயும் ஏற்பட்டிருக் காது. ஆகையால் தான் என்னு டைய வாழ்க்கையின் துவந்து வங்களை ஒழிப்பதற்காகக் கொஞ்சம் முன்னதாகவே என னையே பரிபூர்ணமாக அவளி டம் ஒப்படைத்துவிட்டேன்! ராஜலக்ஷ்மி உன்னிடமிருக்கும் எல்லா நல்லது கெட்டதுகளு டன் உன்னை நான் ஏற்றுக் கொள்ளுகிறேன்! என்று அடிக் கடி சொல்லிக்கொண்டேன். ஆனால் என் மனதில் என்னமோ கோபமும் வெறுப்பும் மூள ஆரம்பித்தன. அதனால் தான் நினைக்கிறேன்: வாழ்க்கையில் செய்கிறேன் என்று ஒருவன் கிளம்பினாலும் உண்மையைக் கடைபிடிப்பது என்பது மிக வும் சிரமமான காரியம்.

(தொடரும்.)

கடற்கரையோர பிரங்கி



பிரிட்டிஷ் கடற்கரை யோரத்தில் வைக்கப்பட்டிருக்கும் "போச்-பஸ்டர்" என்ற பெரிய பீரங்கி. இந்த பெரிய பீரங்கி மூலம் அநேக மைல்களுக்கப்பாலும் சுட்டுத் தள்ள முடியும். ரயில்வே மார்க்கமாகக் கொண்டுபோகப்படும் இந்த பீரங்கியின் வாயைப் படத்தில் காணலாம்.

பிரிட்டிஷ் விமானப் படையினரின் பெருமை

நான்கு இன்ஜின்கள் அமைந்த "ஸ்டர்லிங்" என்ற பிரிட்டிஷ் வெடிகுண்டு விமானத்தில் பறந்துகொண்டு போகும்போதே எதிரிகளது விமானங்கள் போகும் மார்க்கத்தையும், அவை இருந்துவரும் இடங்களையும், ஒரு விமானி சில சாதனங்களை வைத்துக்கொண்டு நிர்ணயம் பண்ணுவதைப் படத்தில் பார்க்கலாம். இவ்விதம் நிலைமையைக் கண்டறிந்து பல எதிரி விமானங்கள பிரிட்டிஷ் விமானப்படையினர் நாசமாக்கினர்.

ஸங்கீத சிந்தாமணி	...	ரூ. 3
திராவிட கானம்	...	ரூ. 3
ஸங்கீத சில்லரைக்கோவை	...	ரூ. 3

முழு விபரமான கேட்லாக் இனும். முன பணமாக ரூ. 6. மணியார்டர் செய்தால, ஷை மூன்று புஸ்தகங்களையும் வேறுவிதச் செலவின்றியில் அனுப்பிவைக்கப்படும்

எம், எஸ். ராமுலு & கோ.,
286, எஸ்ப்ளனேட் :: மதராஸ்

சிறுவர் பகுதி

★

அரசியின் தீரம்

★

ஆர். மருதப்பா

சற்குணபுரி என்று ஒரு ராஜ்யம். அந்த ராஜ்யத் தில் சண்டப் பிரசண்ட ஜடா முனி பண்டிதன் என்று ஒரு ஜோஸ்ய னிருந்தான். அவன் பரம ஏழை. தன் ஜோஸ்யத் தொழிலில் போதிய அள விற்கு வருமான மில்லா மல் ரொம்பவும் கஷ்டப் பட்டு வந்தான் என்று லும் முயற்சியுடையோர் இகழ்ச்சி யடையார் என் னும் மூதுரைப்படி தன் தொழிலை விடா முயற்சி யுடன் நடத்தி வந்ததில் கொஞ்ச நாட்களுக்குக் கெல்லாம் அத் தொழில் ஓங்கியது. அவன் பேரும் புகழும் ஊரெங்கும் பரவி யது. இன்னும் கொஞ்ச நாட்களுக்கெல்லாம்சமஸ் தான ஜோஸ்யனாகவே மாறி விட்டான். 'தன் வீட்டு வாசலில் சமஸ் தான ஜோஸ்ய சண்டப் பிரசண்ட ஜடா முனி பண்டிதர் என்று ஒரு பல கையில் எழுதித் தொங்க விட்டுக் கொண்டான்.

எந்த ஊர் அரசர்களா வது ஜோஸ்யம் கேட்க வேண்டுமானால் ஜடாமுனி பண்டிதருக்கு பல்லக் கனுப்பி வர வழைத்து பிறகு அநேக மரியாதை களுடன் பல்லக்கிலேயே அனுப்பி வைப்பது வழக் கம். அதனால் அவருக்கு கொஞ்சம் அகங்காரமும் ஏற்பட்டு விட்டது.

இந்த விஷயம் சற்குண புரி அரசனுக்கு தெரிந் தது. அவர் நிரம்ப சந் தோஷ மடைந்தார். தன் ராஜ்யத்தில் இவ்வளவு சமர்த்தனாக ஒரு ஜோதி டன் இருப்பதால் அவனை உடனே காண வேண்டு மென்று ஆவல் கொண்டு, அவனை அழைத்துக் கொண்டு வரும்படி தன் மந்திரியிடம் தெரிவித் தார். மந்திரி ஒரு சேவ கனை அனுப்பி ஜோஸ் யனை அழைத்து வரும் படி சொன்னான்.

சேவகன் ஜோஸ்ய னிடம் சென்று, "ஐயா! அரசர் உம்மை உடனே அழைத்து வரும்படி சொன்னார்" என்றான்.

அதைக் கேட்ட ஜடா முனி பண்டிதர் அரசன் மீது கடுங்கோபங்கொண்டு "நான் ஜோஸ்ய சக்ர வர்த்தி. அரசன் ராஜ்ய சக்ரவர்த்தி. என்னைக்காட் டிலும் அரசன் என்ன அவ்வளவு உயர்ந்தவன். அநேக அரசர்கள் பல்லக் கனுப்பி எவ்வளவோ மரி யாதையாக என்னை வர வழைக்கிறார்கள். இவனோ ஒரு சேவகனை அனுப்பி நம்மை அழைத்துக் கொண்டு வரும்படி சொல்லி இருக்கிறான். இருக்கட்டும், இவனுக்கு சரியான புத்தி கற்பிக் கிறேன்," என்று தனக் குள் சிந்தித்துக் கொண்டு ஜோஸ்ய சுவடிகளை எடுத்து வைத்துக் கொண்டு அரச சபைக்கு போய் அரசனுக்கு நமஸ் காரம் செய்யாமல் இறு மாப்புடன் நின்றான்:

ஜோஸ்யன் தனக்கு நமஸ்காரம் செய்யாமல் இறுமாப்புடன் இருப்ப தைப் பற்றி அரசன் கொஞ்சமும் பொருட்படுத் தாது சந்தோஷ முக மலர்ச்சியுடன் தனக்கு எதிரிலிருந்த ஒரு ஆச னத்தில் அவனை அமரச் செய்து, "ஜோஸ்யரே, உமது பிரக்யாதி இப்பொ ழுது தான் நமக்கு தெரிய வந்தது. இங்கு நீர் ஒரு பெரிய பண்டிதராய் இருப்பதால் நமது ராஜ் யத்திற்கே நல்ல பெயர் விளங்குமென்று நினைக்கி றேன் எதோ நமது ராசி யை கொஞ்சம் ஆராய்ச்சி செய்து சொல்லுங்கள்"- என்றார்.

ஜோஸ்யன் "அதற் கென்ன! இதோ ஒரு நொடியில் சொல்லுகி றேன்" என்று கையிலிரு ந்த ஓலைச் சுவடியைப் பிரி த்து ஆராய்ச்சிசெய்வ தைப், போல் பாவனை செய்து பிறகு அரசனை நோக்கி, "அரசபூபா! தங்களுடைய ராசி யைப் பற்றி பலவிதத் திலும் ஆராய்ச்சி செய்து 'பார்த்து விட் டேன். விஷயத்தை எப்படி வெளியிடுவதெ ன்று தான் யோசிக்கி றேன்" என்றான்.

அரசன் 'அதைப் பற்றி நீ கொஞ்சமும் கவலைப் படாதே உள்ளதை உள்ள படி சொல்' என்றார்.

ஜோஸ்யன்:—என்ன செய்யலாம். வருவது வந் தே தீரும். நடப்பது நடந்தே தீரும். எல்லாம் அவன் செயல். இன்னும் ஒரு மாதத்தில் தங்களுக்கு ஒரு பெரிய கண்டம் இருக் கிறது. அதில் தாங்கள் கட்டாயம் உயிர் துறக்க வேண்டி நேரிடும்." இவ்வாறு சொல்லி விட்டு சபையிலிருந்து அவன் போய் விட்டான்.

அதைக் கேட்ட அர சன் திடுக்கிட்டு வெகுவாக பயந்து போனான். அன்று முதல் தன் ராஜ்ய விவகா ரத்தை சரிவரக் கவனிப்ப தில்லை. உண்பதையும் உறங்குவதையும் கூட வெறுத்தான்.

அரசன் நாளுக்கு நாள் சோர்வுற்று வருவதை கண்ட அரசி விஷயத்தை ஒருவாறு தெரிந்து கொ

ண்டு, அரசனை நோக்கி, "தாங்கள் இதைப் பற்றி கொஞ்சமும் கவலைப் படா தீர்கள்." என்று தேறு தல் கூறி விட்டு ஒரு சேவகனை அனுப்பி ஜோஸ்யனை அழைத்து வரும்படி சொன்னாள். அரசியின் கட்டளைப்படி ஜோஸ்யன் அந்தபுரம் வந்து சேர்ந்தான். அங்கு அரசன் சோர்ந்த முகத் துடன் உட்கார்ந்திருப்ப தைக் கண்டு மனதிற்குள் சந்தோஷ மடைந்தான்.

அரசி ஜோஸ்யனை நோக்கி, "ஜடா முனிப் பண்டிதரே! தாங்கள் அர சருக்கு சொன்னதை அறிந்தேன். அரசர் இற ந்த பிறகு நான் மட்டும், உயிருடனிருந்து என்ன பயன். ஆதலால் நான் இன்னும் எவ்வளவு காலம் உயிருடன் இருப் பேன் என்பதை சொல் லுங்கள்" என்றாள்.

ஜோஸ்யன் அரசியை யும் ஏமாற்ற எண்ணி சுவ டியை புரட்டி புரட்டிப் பார்த்து, "அம்மணி! அரசருக்குப் பின் நீங்க ளும் நெடு நாள் ஜீவித் திருக்க முடியாது. அரச ரின் ஆத்மா உங்களையும் கொள்ளை கொள்ளும் என்றான்.

அரசி:- அப்படியா சரி! தாங்கள் எல்லோருடைய ஆயுளைப்பற்றியும் சொல் லுகிறீர்கள். தாங்கள் இன் னும் எவ்வளவு காலம் இருப்பீர்கள்:

ஜோஸ்யன்:- அம்மணி! எவ்வளவோ பேர்களுக்கு ஜோஸ்யம்பார்த்து சொல் லும் நான் என்னைப்பற்றி தெரிந்து கொள்ளாமலா இருப்பேன். இந்த ஜன் மத்தில் எனக்கு சாவென் பதே கிடையாது"

அதைக் கேட்ட அரசி கல கலவென்று சிரித்து தன் இடையிலிருந்த குத்து வாளை எடுத்து ஜோஸ்யனின் மார்பில் குத்தினாள். அந்த க்ஷண மே தரையில் சாய்ந்து மாண்டான்.

அதைக் கண்டு அரசர் திடுக்கிட்டார். அரசி அர சனை நோக்கி, "பார்த்தீர் களா விஷயத்தை. இந்த ஜன்மத்தில் சாவே இல் லாதவனுடைய கதியை. தன்னை தானே உணர்ந்து கொள்ள சக்தியற்ற இவன் சொன்னதைக் கேட்டுத் தாங்கள் பய ந்து விட்டீர்கள்." என் றாள்.

அரசியின் தேறுதலைக் கேட்ட அரசன் அன்று முதல் கவலையை விட்டு சந்தோஷத்துடன் ராஜ்ய த்தை ஆண்டு வந்தான்.

உண்மை
உறுதிக்கும்
உத்திர
வாதம்.
—:—
"ஷண்முகம்
பிராண்டு"
ஸ்டீல் டிரங்கு
& சூட்கேஸ்கள்
தேவைக்கு வேண்டிய புது மாதிரி டிஸைன்களில் கிடைக்கும்.

ஷண்முகம்பிராண்டு ஸ்டீல்டிரங்குஒர்க்ஸ்
தயாரிப்பவர்:- சி. ஞானசுந்திர நாயகர்,
P. 3094. 341, எஸ்பிளனேட், மதராஸ்.

த்யாகராஜ கீர்த்தனம்

[காபிரைட்]

(சங்கீத வித்வான் துறையூர் எம். ராஜகோபால சர்மா)

I

பல்லவி

ராம! ராம! ராம! நாபை நீதய
ராக யுண்ட வச்சுனு? ஓ ராம!

சரணம்

1. தனயுனி யேஜாதியைன ப்ரோவனி
தல்லியு புவினி கலதா ஓ ராம!

2. தனகு தானு வஞ்சன ஜேஸுகொனு
தனவந்துடு கலடா ஓ ராம!

3. இலனு நிஸ்சயமுக நீவுலேனி தா-
வெந்தைனனு கலதா ஓ ராம!

4. ஸுதுனி மாடகு தல்லி தண்ட்ருலுய-
ஸூய படுட கலதா ஓ ராம!

5. ப்ரஹ்ம நிஷ்டுடைனட்டி யாகனுனிகி
ப்ரபல வஞ்சன கலதா ஓ ராம!

6. தொலி ஜேயு கர்மமனுபவிம் பகனு
தோயுவாரு கலதா ஓ ராம!

7. கனக தருணு லாஸலேனி ஸம்ஸாருலு
கலனைனனு கலதா ஓ ராம!

8. நிர்விகார! ஸ்ரீ த்யாக ராஜுனிகி
நின்னு வினு கலதா ஓ ராம!

II

ராம!
நாபை
நீ தய ராகயுண்டவச்சுனு

தனயுனி
ப்ரோவனி
ஏஜாதியைனதல்லியு
புவினிகலதா
தனகு தானு
வஞ்சன ஜேஸுகொனு
தனவந்துடு
கலடா
இலனு
நிஸ்சயமுக
நீவுலேனிதாவு
எந்தைனனு கலதா
ஸுதுனி மாடகு
தல்லி தண்ட்ருலு
அஸூயபடுட கலதா
ப்ரஹ்ம நிஷ்டுடைனட்டி

ஆ கனுனிகி
ப்ரபல வஞ்சல கலதா
தொலி ஜேயு
கர்மமு அனுபவிம்பகனு
தோயு வாரு கலதா
கனக தருணுல
ஸம்ஸாருலு

ஆஸலேனி
கலனைன கலதா
நிர்விகார!
ஸ்ரீத்யாக ராஜுனிகி
நின்னு வினு கலதா

நீதயராகயுண்ட வச்சுனு

—ஸ்ரீராமா!
—என்னிடம்
—உன் கருணைப் பெருக்குடன் கூடிய ஆதரவு ஏற்படாதிருக்கலாகுமா
—தன் குழந்தையை
—காப்பாற்ற மனமில்லாத
—எப்பிறப்பிலுதித்த தாயானுலும்
—இவ்வுலகத்தில் உண்டா
—தனக்குத் தான்
—வஞ்சகம் புரிந்து கொண்டு
—செல்வவந்தர்கள்
—இருப்பார்களா
—இவ்வுலகில்
—உண்மையாக
—ஸ்ரீராமா! நீ யில்லாத இடம்
—எங்காவது இருக்கின்றதா
—தன் குழந்தையின் பேச்சைக் கேட்டு
—தாய் தகப்பன்
—அஸூயை கொள்வது உண்டா
—ப்ரஹ்ம ஸ்வரூபத்தில் லயித்த மனதையுடைய ஜீவன் முக்தர்களான
—அந்த மஹான்களுக்கு
—கொடியதான வஞ்சக குணம் ஏற்படுமா
—முன் செய்த
—கர்மங்களின் பயனை அனுபவிக்காமல்
—அவைகளை விரட்டி யடிப்பவர் உண்டா
—மண், பொன், பெண் முதலானவைகளில்
—பிறவிக் கடலை இன்பமெனக்கொண்டுழலும் பாமர ஜனங்கள்
—ஆசை கொள்ளாது இருப்பது
—ஸ்வப்னத்திலும் நடக்கக்கூடிய காரியமா
—நிர்விகார ஸ்வரூபனே!
—த்யாகராஜன் என்று பெயர் கொண்ட எனக்கு
—உன்னைக் காட்டிலும் வேறு ரக்ஷகன் யாராகிலும் உண்டா
—உன் கருணை எனக்குக் கிட்டாதிருக்க வேண்டுமா (கருணை கூர்ந்து என்னை ரக்ஷித்தருள்வாய்)

ஆரோக்யமான குழந்தை

ஆரோக்யமான குழந்தைகளுக்கு தவருமல் மலம் வெளிவர வேண்டும். அடிக்கடி இதை உபயோகித்தால் மூலம் வெளிப்படும்.

Ba-Ba-Water

குழந்தைகளத் அமிர்தம். எங்கும் விற்கப்படுவது.

பா-பா வாடர்
மான்யுபாக்சரிங் கம்பெனி,
ஹைதராபாத். (தக்காணம்)

பிரபல ஜோதிஷர்

மஹா ராஜாக்களால் தங்க மெடல்கள் பரிசு பெற்றவர் ஒரு ஜாதகம் கணிக்க ரூ.2. நேரில் ஒரு ஜாதகம் பார்க்க ரூ.5. மாதவாரி ஒரு வருஷ பலன் எழுத ரூ.5. ஆரூடம்கேள்விகளுக்கு ரூ. 1. மேல் கேள்வி 1-க்கு அணு 8. ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை. பண்டித காழியூர் ம. ஸ்ரீனிவாஸாச்சாரியார், 58, லஸ் சர்ச் ரோடு, மைலாப்பூர், மதராஸ்.

சூதகம் நின்றிருந்தால்

3 நாட்டீகள் என்னும் மாத்திரைகளை 3 நாளைக்கு உபயோகித்தால் ஒழுங்கு பட்டுவிடும். ஒவ்வொரு ஆர்டருடன் உத்தரவாதம் அனுப்பப்படும். விலை ரூ. 5/8. பத்து ஷிலிங். Dr S. H. KHAN, (S. M.) 42, Churchgate St., Fort, Bombay. Phone 21343.

மிஸஸ் ச. கோ. இ.
காதர்மீரா சாயபு,
ஹெட் நர்சரி தோட்டம், சேலம் S.
ஒட்டு மாங்கன்களும், பழச்செடிகளும், இங்கிலீஷ் காய்கறி, புஷ்ப விதைகளுமிருக்கின்றன. கேட்லாக் இனாம்!

III

இது திவ்ய நாம ஸங்கீர்த்தனப்பகுதியைச் சேர்ந்த கீர்த்தனங்களில் ஒன்ருகும்.

இந்தக் கீர்த்தனத்தால் ஸ்வாமிகள் பகவான் தனக்கு அருள் புரியாதிருப்பது சரியல்லவென்பதை நிரூபித்துக் காட்டுகிருர்.

ராம ராம:—தான் அனவரதமும் ஸ்ரீ ராமனை பஜனம் செய்து பிரார்த்தித்தும், அவனருள் கிட்டாததால் இவ்விதம் சொல்லி பகவானிடம் முறையிடுகிருர்.

இது போன்று தெரிவித்துள்ள

எஞ்சாவிடராலிரும் பிணியாலேங்கி மனம்
பஞ்சாக நொந்து பரதவிக்கு நாயேனை
செஞ்சாலி யோங்குந் திருவொற்றி யப்பா நீ
யஞ்சாதே யென்றுன்னருள் கொடுத்தாலாகாதோ"

என்ற அருட்பா குறிப்பிடத்தக்கது.

தன யுனி:—இவ்வுண்மையை பல உதாரணங்களுடன் 'தனயுனிப்ரோவ' என்ற கீர்த்தனத்தில் வெளியிட்டுள்ளார்.

இலனு:—பகவான் எங்கும் நிறைந்துள்ளார் என்று சொல்லும்.

அந்த: பஹி: ச தத்ஸர்வம்
வ்யாப்ய நாராயண: ஸ்தித:||

மேலே கண்ட வேதச்ருதியின் அபிப்ராயத்தையே ஸ்வாமிகள் இங்கு குறிப்பிடுகிருர்.

ஸுதுனி மாடகு:—"கிசோ ரஸ்யாலாப: கலுபவதி பித்ரோரபிமுதே" என்று சொல்லப்படுவது போல் குழந்தைகளின் வார்த்தை பெற்றேருக்கு அமிருதம் போன்றுள்ளது. 'நாயெட வஞ்சன' என்ற கீர்த்தனத்தின் சரணத்தில் இவ்விஷயத்தைத் தெளிவாக விவரித்துள்ளார்.

தொலி ஜேயு:—அவரவர்கள் செய்துள்ள கர்மவினைக்குத் தகுந்த பலனை அனுபவித்துத் தான் தீரும் என்று குறிப்பிடுகிருர். கீதை-16-வது அத்யாயத்தில் 16, 20. ச்லோகங்களில்

அனேக சித்த விப்ராந்தா: மோஹஜால ஸமாவ்ருதா: |
ப்ரஸக்தா: காம போகேஷு பதந்தி நரகே அசுசௌ ||
ஆஸுரீம் யோனிமாபன்னா: மூடா: ஜன்மனி ஜன்மனி |
மாமப்ராப்யைவ கௌந்தேய ததோ யாந்த்ய தமாங்கதிம் || என்று சொல்லப்பட்டிருப்பது இதற்காதாரமாகும்.

கனக தருணுல:—ஸம்ஸாரிகளின் நிலமையை 'எந்துகோ பாக, 'எவரு தெலிய' முதலான கீர்த்தனங்களில் விவரித்துள்ளார். இச் சரணத்தாலும், இதற்கு முந்தின சரணத்தாலும் இல்வாழ்க்கையிலுண்டாகும் கெடுதல்களைக் கூறியிருப்பதால் தன்னை அவ்விபத்தில் சிக்கவைக்காது ரக்ஷித்தருளுமாறு ஸ்வாமிகள் பகவானை பிரார்த்திக்கிருர் என்று ஊகிக்க வேண்டியுள்ளது.

IV

ராகம் கல்யாணி   மிச்ரசாபு தாளம்

(65—வது மேள ராகம். ஸம்பூர்ணம்.)

பல்லவி

; கா மா	பா ; பா ;	பா பா ;	தா பா தா ;
ரா .	ம ரா	. ம	ரா . ம
; தா தரி	ஸா நீ தா பா	பத பம கா	கா ; கா மா
நா . .	பை . நீ .	த்	. ய .
ரீ கா தா	பா, த ப ம கா	கா கா ரீ	ரீ ஸா நி ஸ ரி ஸ
. ரா .	க . யுண் . .	ட வச் .	சு . . . . .
ரீ ; ;	; ; ஸா. ரி	ஸ நி தா பா	ப ம கா கா மா
ஞ	ஓ .	ரா . . .	ம . . . .
ரீ			
. (ராம ராம)			

(சரணங்களை பல்லவி போன்றே பாடவும்.)

(ஸங்கீத வித்வான் உமையாள்புரம் எஸ். வெங்கடராமையர் இக் கீர்த்தனத்தின் வர்ணமெட்டை உதவினுர்.)

உங்களுக்கு
மலச்சிக்கலோ அல்லது
ரத்தக்கொதிப்போ அல்லது
மண்டை கனமோ அல்லது
தலைவலியோ அல்லது
மயக்கமோ அல்லது
வாய்துர்நாற்றமோ அல்லது
சருமப்படுவனோ இருந்தாலும்
உடனே பரீக்ஷியுங்கள்

காஸ்டபீன்

ருசி மிகுந்த சாக்லட் மலவிரோசனி. மலச்சிக்கலை ஒழிக்க பத்திரமும் நிச்சயமுமான வழி.

குழந்தைகள், நடுவயதினருக்கும், ஆரோக்யம், பலத்தை அளித்திருக்கின்றது.

எல்லா மருந்து வியாபாரிகளிடமும் 2 சாக்லட் உள்ள பாகெட் ஒரு அணு. ஒவ்வொன்றும் 25, 50, 100 கொண்ட பாட்டில்களிலும் கிடைக்கும்.

CASTOPHENE
CASTOR OIL CHOCOLATES

ஏஜண்டுகள் :—
மெஸர்ஸ்:
சிவராம் & ஸ்வாமி லிமிடெட்.
154, நைனியப்ப நாயக்கன் தெரு, பி. டி., மதராஸ்.

டோங்ரேயின்
பாலாமிருதம்
பிரசித்தி பெற்ற
குழந்தைகளின் டானிக்



கே.சுவாமிநாதன் & கோ
24, எர்ரபாலு செட்டித் தெரு, மதராஸ்.
ரைஸ் மில், மாவு மில், சீக்காய் & காபி மிஷின், பம்பு வியாபாரமும், எல்லாவித காஸ்டிங் வேலைகளும், ஆயில் எஞ்சின் ரிப்பேர்களும் செய்யப்படும்.
சுவாமிநாதன் பவுண்டரி எஞ்சினீரிங் ஒர்க்ஸ்,
7, வால்டாக்ஸ் ரோட், P. T., மதராஸ்.

ஸர் சுந்தர்லால் (உப அத்யக்ஷகர் 1916-18)

ஸர் சிவஸ்வாமி அய்யர். (உப அத்யக்ஷகர். 1918-19)

யிலும் பாடம் போதிக்க ஏற்பாடு செய்வது. (3) நாட்டில் கைத்தொழில் அபிவிருத்தியை உத்தேசித்து அதற்கேற்றபடி தொழிற் பாடம் போதிக்கவும் ஏற்பாடு செய்வது. (4) யுவர்களது உள்ளத்தில் நன்னெறியில் சிரத்தை ஏற்படுவதற்காக மத போதனையை அவர்களுக்கு அளித்தல். இந்தத் திட்டம் எல்லோராலும் ஆமோதிக்கப்பட்டது. அப்போது "சுதேசமித்திரன்" ஆசிரியராகவிருந்த ஸ்ரீமான் ஜி. சுப்ரமணிய அய்யர், இந்தத் திட்டத்தைப்பற்றி அடியிற் கண்ட விதம் எழுதினார்:-"தமது முன்னோர், மதம், தத்துவ சாஸ்திரம், விஞ்ஞானம் ஆகிய துறைகளில் அடைந்திருக்கும் முற்போக்கைக் கண்டு ஆனந்த பாஷ்பம் பெருக்காத ஒரு ஹிந்துவும் இருக்கமுடியாது. தவிரவும் அவர் தற்போது மேல்நாட்டு நாகரீகம் நம்மிடையேயும் பரவி வருவதை அவர் கவனிக்காமல் இருக்கமுடியாது. தமது தேசபக்தி காரணமாக, அவர் வெகு விரைவில் மாறிவரும் உலகப் போக்கை ஒரு பக்கம் கண்காணித்து வந்தாலும், தமது முன்னோர்கள் சம்பாதித்த அரும் கலா பொக்கிஷம் பணத்தையும் விடப் பெரிதானது என்ற உணர்ச்சி தான் அவருக்கு மேலிடும். தற்காலத்தில் இந்நாட்டு மதங்களையும் பழக்க வழக்கங்களையும் மதித்து நடப்பதுதான் தேசத்திடம் தான் காட்டும் ப்ரீதியின் அளவு என்பதை ஒவ்வொரு ஹிந்துவும் அறிந்துகொண்டிருக்கிறார். இந்த சர்வகலாசாலைத் திட்டம் மிகவும் உன்னதமானது: தேசபக்தி மயமானது: ஆர்வத்தை அதிகரிக்கவல்லது இதன் முற்போக்கு உத்தேசிக்கப்பட்டிருப்பதுடன், பழைய பெருமையை எய்தவும் வழிகாட்டப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டத்தை நிறைவேற்ற ஒரு கோடி ரூபாய் வசூலாவதில் பலவித கஷ்டங்கள் இருக்குமாயினும், இந்தத் திட்டத்தின் உயர்வும், ஆர்யா வர்த்தவாசிகள் முன்பு இது சமர்ப்பிக்கும் உத்தம லக்ஷியங்களும், நம் நாட்டின் புராதன காலச் சிறப்பும், வருங்காலத்தில் கிடைக்கக்கூடிய மேன்மையும், இந்தத் திட்டத்திற்கு சமஸ்தானாதிபதிகளும், நம் நாட்டுப் பிரமுகர்களும் ஆதரவு அளிக்க வேண்டுமென்பதற்குப் போதியவை. இவ்வளவு உன்னதமான காரியம் நிறைவேற கோடி ரூபாய்க்கு மேலும் கொடுக்க வேண்டுமென்றது 'பயோனீர்' பத்திரிகை.

இதர முயற்சிகள்

காசியில் ஹிந்து சர்வகலாசாலைக்கு பண்டித மதன் மோஹன் மாளவியா ஆதரவு தேடிக்கொண்டு வரும்போது, காசி ஸெண்ட்ரல் ஹிந்து காலேஜ் டிரஸ்டிகள் போர்டின் தலைவரான டாக்டர் பெஸண்ட் "இந்திய சர்வகலாசாலை" என்ற பெயருடன் ஒன்றை காசியில் ஸ்தாபிக்க முயற்சி செய்து வந்தாள். இதற்காக டாக்டர் பெஸண்ட் ஸர்க்கார் ஆதரவைக் கோரி பல முக்கியஸ்தர்கள் கையொப்பம்கொண்ட மனுவொன்றையும் தயாரித்தனுப்பினார். தர்பங்கா மஹாராஜா ஸர் ரமேஸ்வர் சிங்பஹதூர் தலைமையிலும், அநேகர் கூடி, ஹிந்து மதப் பிரசாரத்திற்கான ஒரு கலாசாலையை காசியில் நிறுவுவதைப்பற்றி யோசித்து வந்தனர். ஒரே நோக்கம் கொண்ட மூன்று தனித் தனி ஸ்தாபனங்கள், ஒரே இடத்தில் ஆரம்பித்து நடப்பது அசாத்தியம் என்பது அப்போது உணரப்படாமல் இல்லை. ஆகவே இம் முயற்சிகளை மேற்கொண்டவர்கள் தாங்கள் ஒன்றுபட்டு வேலை செய்தால், காரியசித்தி ஏற்படும் என்பதை வெகு விரைவில் கண்டு கொண்டு ஒத்துழைக்கலாயினர். காசியில் ஹிந்து சர்வகலாசாலை ஒன்றை ஸ்தாபிப்பது என்ற பொதுவான நோக்கத்தை அவர்கள் யாவரும் தழுவினர். 1911-ம் வருஷம் ஏப்ரல் மாதம் மிஸஸ் அன்னி பெஸண்டும், பண்டித மதன் மோஹன் மாளவியாவும் அலஹாபாத்தில் சந்தித்து, தங்களது நோக்கம் ஈடேறும் மார்க்கத்தைக் குறித்து விவரித்தனர். இதற்கப்புறம் மிஸஸ் பெஸண்ட் ஐரோப்பாவுக்குப் போனதால் இவர்களது பேச்சு பலனளிப்பதற்குத் தாமதித்தது. இதற்கிடையில் சர்வகலாசாலை ஸ்தாபனத்திற்காக, நிதி சேகரிக்க செல்வாக்கு மிகுந்த தூதுக்கோஷ்டியார் நாடு முழுதும் சுற்றிவந்தனர். இவர்களுள் பண்டித மதன் மோஹன் மாளவியா, ராஜாராம்பால் சிங், பண்டித தீனதயாள் சர்மா, பாபு சங்கர பிரசாத் வர்மா முக்கியஸ்தர்கள்.

வட இந்தியாவில் வசூல்

1911-ம் வருஷம் ஜுலை மாதம் முதல் அக்டோபர் மாதத்திற்குள் "ஹிந்து சர்வகலாசாலைச் சங்க" தூதுக்கோஷ்டியார் வட இந்தியா முழுதும் போய் வந்து விட்டனர். சென்ற விடங்களில் எல்லாம் அவர்களுக்கு குதூஹலமான உபசாரம் நடத்தப்பட்டது. ஆதரிக்கப் பொதுக் கூட்டங்களும் நடைபெற்றன. பண உதவியும் ஏராளமாக வாக்களிக்கப்பட்டது. இவ்வருஷம் அக்டோபர் மாதம் தர்பங்கா மஹாராஜா ஸர் ராமேஸ்வர் சிங் பஹதூரும் பண்டித மதன்மோஹன் மாளவியாவும், ராஜப்பிரதிநிதியையும் இந்தியா ஸர்க்கார் கல்வி இலாகா மெம்பர் ஸர் ஹார்க்கோர்ட் பட்லரையும் பேட்டியிட்டனர். இந்த சிம்லா பேட்டிக்குப் பின்பு, ஸர் பட்லர் புதிய சர்வகலாசாலை ஸ்தாபிப்பதைத் தாங்கள் மனப்பூர்வமாக ஆமோதிப்பதாக அறிவித்தார். இதற்குச்சிலதினங்களுக்குப்பின்னர், தர்பங்கா மஹாராஜாவும், மிஸஸ் பெஸண்டும், பண்டித மாளவியாவும் ஸர் சுந்தர்லாலும், கங்கா பிரசாத் வர்மாவும், பாபு பகவான்தாஸும், முன்ஷி ஈஸ்வர் சரணும் காசியில் கூடியது காரணமாக, மிஸஸ் பெஸண்ட் தாம் ஸர்க்காருக்கு முன்பு சமர்ப்பித்த திட்டத்தை வாபீஸ் பெற்றுக்கொண்டார். இதற்கடுத்தபடியாக அலஹாபாத்தில் தர்பங்கா மஹாராஜாவின் அக்ராஸனத்தின் கீழ் ஹிந்து சமூகத்தில் பெரிய ஸ்தானம் வகிப்பவர்கள் கலந்து பேசினர். கல்வி இலாகா மெம்பர் ஸர் ஹார்க்கோர்ட் பட்லரைப் பேட்டியிட ஒரு தூதுக்கோஷ்டியனுப்ப இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. பேட்டி முடிந்த பிறகு இதற்காக அலஹாபாத்தில் 1912-ம் வருஷம் ஜனவரி முதல் தேதி ஒரு காரியாலயம் ஸ்தாபிக்கப்பட்டது. இதற்கு நிர்வாகக் கமிட்டியும் குறிக்கப்பட்டது: இக்கமிட்டியில் நம் சென்னை மாகாணப் பிரதிநிதிகளாக என். சுப்பராவ் பந்துலு திவான் பஹதூர் எல். ஏ. கோவிந்தராகவய்யர், டி. வி. சேஷகிரி அய்யர், வி. பி. மாதவராவ் ஆகியவர்கள் இருந்தனர் என்பது கவனத்திற்குரியது.

சட்டம் நிறைவேறியது

முயற்சியை ஆரம்பித்த சில மாதங்களுக்குள்ளேயே சுமார் 30 லக்ஷ ரூபாய் நன்கொடை பொதுஜனங்களிடமிருந்து கிடைத்துவிட்டது. ஆகவே சமஸ்தானாதிபதிகளின் சஹாயம் நாடப்பட்டது. பிகனீர் மஹாராஜா ஸர் கங்காசிங் பஹதூர் இந்த சர்வகலாசாலை ஸ்தாபனத்தில் அக்கரை கொண்டார். முதலில் தர்பங்கா மஹாராஜா 5 லக்ஷ ரூபாய் நன்கொடை தந்தார். டாக்டர் பெஸண்டும் ஸெண்டிரல் ஹிந்து காலேஜின் இதர டிரஸ்டிகளும், கலாசாலையைப் புதிய கமிட்டியிடம் ஒப்படைத்து அதை அஸ்திவாரமாகக்கொண்ட சர்வகலாசாலையை ஸ்தாபிப்பதற்கு சம்மதித்தனர். முதலில் ஹிந்து சர்வகலாசாலை சங்கக்காரியதரிசியாகவும், பின்பு சர்வகலாசாலையின் முதல் உப அத்யக்ஷகராகவும், ஸர் சுந்தர் லால் பொறுப்பேற்று அதை மிகுந்த திறமையுடன் நிர்வஹித்தார். இதற்கு ஒரு லக்ஷ ரூபாயும் அவர் அளித்தார். இந்த சர்வகலாசாலை தூதுக்கோஷ்டியார், 1912-ம் வருஷம் முதல் பல சமஸ்தானங்களுக்கும் சென்று ஆதரவு வேண்டினர். சர்வகலாசாலையை நிர்மாணிப்பதற்கான இடம் பின்பு நிச்சயிக்கப்பட்டது. இவ்வாறு சர்வகலாசாலை ஸ்தாபனத்திற்கான முயற்சி மிகத் தீவிரமாகவே நடந்து வந்தது. 1915-ம் வருஷம் மார்ச்சு மாதம் 21-ந் தேதி இந்தியா சட்டசபையில் கல்வி இலாகா மெம்பர் ஸர் ஹார்க்கோர்ட் பட்லர் காசி ஹிந்து சர்வகலாசாலை மசோதாவைப் பிரேரே

தர்பங்கா மஹாராஜா சர்வகலாசாலை ஸ்தாபனத்தில் விசேஷ சிரத்தைகாட்டினார்.

நவநாகரீகம்

★

ஒரு சட்டை

★

காசினி எழுதியது

* * * கையில் ஒரு கத்தரிக்கோலை வைத்துக்கொண்டு, தன் எதிரே குவியலாகப் பாயின் மேல் இருந்த துணியை முறைத்துப் பார்த்த வண்ணம் மாலினி உட்கார்ந்திருந்தாள். புருவத்தைச் சுளுக்கி பெருமூச்சு விட்டாள். சப்தம் செய்யாமல் அவள் வீட்டுக்குள் நுழைந்த நளினி தேவியும், நானும் 'கொல்' என்று சிரித்தோம். திடுக்கிட்டு நிமிர்ந்து பார்த்தாள் மாலினி.

'நீங்களா! வாருங்கள்! வாருங்கள்!' என்றாள்.

'இதெல்லாம் என்ன? தையல்காரன் வாயில் மண்ணைப் போடப்பார்க்கிறாயா?' என்றாள் நளினி தேவி.

ஒரு அசட்டுச் சிரிப்புச் சிரித்து விட்டு, பக்கத்தில் இருந்த பிரம்புப் பெட்டியைத் திறந்து, அதில் இருந்து ஒரு சட்டையை எடுத்துக் காட்டினாள்.

'வெட்ட, தைக்கத் தெரியாதவர்கள் கைவேலை' என்று இந்த சட்டை வாய்விட்டு கதறுவது காதவழிக்குக் கேட்கிறதே!' என்றாள் நளினிதேவி.

'உனக்குப் பரிகாசமாக இருக்கும்! நான் பட்ட கஷ்டம் எனக்குத் தெரியும்!' என்றாள் மாலினி.

'ஏன் இப்படிக் கஷ்டத்தை வர வழித்துக் கொண்டு, திண்டாட வேண்டும், வழக்கம் போல் தையல்காரனிடம் கொடுத்தால் அவன் தைத்து விட்டுப் போறான்!' என்றேன்.

மாலினி. தனக்கு ஒரு தையல் மெஷின் இந்த க்ஷணம் வேண்டும் என்று சொன்னாளாம், வாங்கவும் செய்தாளாம். பிறகு கொஞ்ச நாட்களுக்கு மெஷின் ஒரு சிறிய மேஜைக்கு அலங்காரமாக அவர்கள் வீட்டில் ஒரு மூலையில் சிவனே என்று தூங்கிற்றாம். போன வாரம் அவள் தமையன் அவளைப் பார்க்க வந்திருந்தானாம். அவன் உத்தியோகமாக இருந்த ஊரில் ஒரு தினுசுப்பட்டு விசேஷமாம். இதில் உயர்ந்த ரகமாகப் பார்த்து அவளுக்குச் சட்டைத் துணிகள் வாங்கி வந்திருந்தானாம்.

'என் வாய் சும்மாயிருக்கக் கூடாதோ! ஏதோ தான தர்மம் என்று பேச்சு வந்தது. சும்மா பாக்கெட்டில் கையை விட்டு கொஞ்சம் பணத்தை விசுறுவது தர்மமாகுமா? நம்ம சௌகரியத்தில் ஏதாவது ஒன்னைக் குறைச்சுக்கொண்டு இப்படி மீத்தர பணத்தை தானம் பண்ண வேண்டும் என்று சொன்னேன்!' என்றாள் மாலினி.

'இதிலிருந்து வந்த தர்க்கத்தில், இனி தையல்காரன் கூலியை மீத்து தானம் பண்ண வேண்டியது என்ற நெருக்கடி ஏற்பட்டதா?' என்று சிரித்துக் கொண்டே கேட்டேன்.

'ஆமாம்! உங்களுக்குளப்படித் தெரிந்தது. எங்காத்துக்காரரும் கூட இருந்தார். பேச்சு மேலே பேச்சாக வளர்ந்து, கடைசியில் இதற்கு நான் ஒப்புக்கொண்டேன். கஜம் மூணறை ரூபாய்த் துணியை ஒரு நிமிஷமாக நாசம் அடிச்சாய்விட்டது!' என்று துக்கம் தாங்கமுடியாமல் சொன்னாள்.

பிறகு அவளுடைய சட்டைகள் இரண்டை நான் வெட்டினேன்; நளினிதேவி தைத்துக் கொடுத்தாள். ஒரு சட்டைக்கு தோள் பக்கம் நன்றாக பம் என்று தூக்கி இருக்கும்படி வெட்டித் தைத்தோம். கொஸ்து அதிகம் வைக்கவில்லை. சட்டைக் கைக்கு நல்ல சரிவு கொடுத்து வெட்டி, கழுத்தை அதிகம் தாழ்வில்லாமல், வட்டக் கழுத்தாக வெட்டினேன். இதை யாதொரு ஆடம்பரமும் இல்லாமல் நளினி தைத்தாள். மற்றொரு சட்டைக்கு நிறைய கொஸ்து, காலர், பாட்டி பைபிங் எல்லாம் வைத்துத் தைக்கப்பட்டது. இரண்டு சட்டைகளும் பார்வைக்கு நன்றாகத்தான் இருந்தன.

ஒரு முத்து

'எனக்கு ஒன்று தோன்றுகிறது. இந்த மூக்குத்திக்கு முத்துப் போட்டுக்கிறோமே? இதை சிகப்பினால் செய்தால் என்ன?' என்றாள் பங்கஜம்.

'என் சிநேகிதி ஒருத்தி ஒன்னு போட்டுக் கொண்டிருக்காள். நன்றாகத்தான் இருக்கு!' என்றாள் மற்றொரு சிநேகிதி.

'எப்படி? மூன்று சிகப்பு வைத்துப் பண்ணி இருந்தா?' என்று பங்கஜம் கேட்டாள்.

'மூணு சிகப்பா? ஓ'; நீங்கள் முகத்தைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தீர்களா? நான் அதை கவனித்துக் கொள்ளவில்லை!' என்றாள்.

'நீங்கள் எதைச் சொன்னீர்கள்?' என்றாள் மாலினி.

'அர்த்த சந்திர வடிவமாக ஒரு மூக்குத்தி, அது தான் பேஸரி. ஒருத்தி போட்டிருந்தாள். நீள வாட்டமான சிகப்பை வைத்து, தங்கம் தெரியாமல் மிகவும் நன்றாகச் செய்திருந்தது. பார்வைக்கு ஒரு சிகப்பை அப்படியே செதுக்கின மாதிரியில் இருந்தது. மின் வெட்டு மாதிரியில் பிரகாசித்தது: ரொம்பவும் அழகாக இருந்தது!' என்று அவள் உற்சாகத்துடன் சொன்னாள்.

'என் கிட்டே மூணு சின்னச் சிகப்பு இருக்கு! இதை சும்மா உள்ளே போட்டு வைப்பானேன்; ஒரு முத்தாகக் கட்டி, இந்த வைர மூக்குத்தியுடன் போட்டுக் கொள்ளலாமே என்று பார்க்கிறேன். வைரத்துக்கும், சிகப்புக்கும் ஒத்து நன்னா இருக்குமோ?' என்று பங்கஜம் கேட்டாள்.

'இல்லாமல் என்ன? எல்லா—' என்று சுலோசனா சொல்லிக் கொண்டிருக்கும் போதே 'ஆ-அ-அ!' என்று அபாய சங்கு அலறிற்று; அப்படியே 'ஏர்-ரெய்ட் அறிவிப்பு' என்று எல்லாருமாக அலறி அடித்துக் கொண்டு எழுந்தோம்.

'கதவை மூடணமா? ஜன்னலை திறக்கணமா? மறந்து போச்சே!' என்று நளினிதேவி தவித்தாள்.

'எதுக்கும் காதில் பஞ்சை அடைத்துக்கொண்டு வாயில் கைகுட்டையை திணித்துக் கொண்டு, பெஞ்சுக்கு அடியில் பூந்துகொள்ளலாமே!' என்றாள் மாலினி.

'இப்போதான் நினைவு வந்தது! இன்றைக்கு முதல்—அறிவிப்பு இல்லாமல் சங்கு ஊதுவதாகப் பேபரில் போட்டிருந்ததே. இது நிஜ ரெய்ட் இல்லை?' என்று சுலோசனா சொல்லி, எல்லோருடைய பயத்தையும் தெளிவித்தாள்.

'ஆமாம். நிஜமாகவே ஒரு அபாய அறிவிப்பு ஊதும் போது, நாம் என்ன செய்வது என்பது தெரியாமல் தவிப்போமா?' என்றாள் பங்கஜம்.

'இது நமக்கு அவசியம் வேண்டி இருந்த அனுபவம்: நாம், இனிமேல் அக்கரையாக இருக்கவேண்டியதுதான்; எப்படியும் முதல் தேதி நான் எங்க பிறந்தாம் போகப் போகிறேன்! என்றாள் சுலோசனா.

"எனக்கு அவரை விட்டுப் போக மனமில்லை. அவர் வேலையோ அவர் பட்டணத்தை விட்டு நகரமுடியாது போலிருக்கு; நான் இங்கே தான் இருக்கப் போகிறேன்!' என்றாள் மாலினி.

'சரி, உஷாராக இரு! கலவையில் குழந்தை காதில் ரப்பரையும், வாயில் பஞ்சையும் திணித்து வைக்கப் போகிறாய்!' என்றேன்.



பிரிட்டனில் ஒரு துறை முகத்திலிருந்து மற்றொரு துறைமுகத்திற்கு சாமான்களை யேற்றிச் செல்லும் கப்பல்கள் பலவித கஷ்டங்களுக்குட்பட்டு வருகின்றன. ஆயினும் எந்த எதிர்ப்புக்கும் அவை கொஞ்சமாவது அஞ்சுவதில்லை. எதிரி விமானங்களை அவை முறியடித்து வருகின்றன. இந்த சம்பவங்களை எடுத்துக் காட்டவே மேலே கண்ட படம் ஒரு சித்திர நிபுணரால் தீட்டப்பட்டிருக்கிறது.

அழகுத் தெய்வமான மன்மதன் இளவேனில் ஓய்ந்ததும் பெண்மணிகள் கூந்தலைத் தன் இருப்பிடமாகக் கொண்டான் என்பர் மஹாகவி காளிதாஸர். எந்த அழகிய கூந்தல் தேவதைகள் கண்ணையும் கருத்தையும் பிணிக்குமோ, அக்கூந்தலை வருஷம் முழுவதும் எல்லாப் பருவங்களிலும் கேசவர்த்தினியின் உதவியால் பெறுங்கள். மயிர் உதிர்வதை நிறுத்துங்கள். கூந்தலைப் பெருக்கிக் கொள்ளுங்கள்.

இளமையும், அழகும் கூந்தலுக்குத்தந்து கூந்தலை மனோஹரமாக்குவது கேசவர்த்தினி ஒன்றே.

முக அழகைக் கூந்தலினால் அழகு படுத்துங்கள். உங்கள் கூந்தலைக் கேசவர்த்தினிகொண்டு அழகு படுத்திக்கொள்ளுங்கள்.

கேசவர்த்தினி

கூந்தலைப்பாதுகாப்பது, விருத்தி செய்வது, அழகுபடுத்துவது விலை அணு 12. மேற்செலவுவேறு. எல்லாக்கடைகளிலும் கிடைக்கும்.

தயாரிப்பவர்:

தென் இந்திய ரஸாயனசாலை,

ஆர். எஸ். புரம் — கோயமுத்தூர்.

22 காரட், டி. சி. என்.

ரோல்ட்கோல்ட் வளையல்கள்

அசல் தங்க வளையல்களைப்போல்

எப்பொழுதும் நிறம் மாறுமல் இருக்கும்.

5 வருஷம் உத்திரவாதமுள்ளது. சிறு குழந்தைகள் முதல் பெரியவர்கள் சைஸ் வரையில் ஒரே விலை தான். வளையல் ஜதை 1-க்கு ரூ. 6. வி. பி. செலவு: 1 ஜதை முதல் 6 ஜதைகள் வரை அணு 8. விலாசம்:-

டி. சி. நாகலிங்கப்பா & Co

பார்க்டவுன் போஸ்ட், மதராஸ்.

சித்திரமும் சிருங்காரமும்

★

"டம்போ"—பறக்கும் யானை—"பெரிய துப்பாக்கி"—லாரல் ஹார்டி படம்—ஒரு வேடிக்கை சம்பவம்—மோட்டார் ஓட்டத்தெரிய வேண்டுமோ?—புதிய கம்பெனி ஆரம்பம்—அநாவசியச் செலவைத் தடுப்பதே நோக்கம்: "ஸ்திரீ ஸ்பர்சம்"—நால்வர் சிக்கிய காதல் கதை.

"டம்போ"

பல் வர்ணக் கார்ட்டூன் படங்களைத் தயாரிப்பதில் வால்ட் டிஸ்னி அதி நிபுணர். இதற்கு முன்பு "ஸ்னோ ஒயிட்டும் ஏழு குள்ளர்களும்" "பினோக்கியோ" என்ற இரு கார்ட்டூன் படங்களை அவர் தயாரித்திருக்கிறார். அவை காட்டப்பட்ட விடமெல்லாம், பார்ப்பவர் அனைவரும் அவற்றை வெகுவாகக் கொண்டாடினர். இந்த மாதிரி படங்களைத் தயாரிப்பது மிகவும் சிரமமானது. இதற்கு அசாதாரண திறமை வேண்டும்: படத்தைப் பார்த்த பின்பு தான் தயாரிப்பதில் ஏற்பட்டிருக்கக் கூடிய கஷ்டம் புலனாகும்.

வால்ட் டிஸ்னி ஆரம்பத்தில் சிறு படங்களைத் தயாரித்து வந்தார். அவரது "மிக்கி மவுஸ் கார்ட்டூன்கள்" இப்போது உலகில் அடைந்திருக்கும் பிரசித்திக்கு எல்லை இல்லை: நிற பேதமும் வகுப்பு பேதமுமின்றி அந்தப்படங்களை பார்த்து ஜனங்கள் ஆனந்தித்து வருகின்றனர். காலக்ரமத்தில் அவர் நீண்ட படங்களைத் தயாரிக்க முன் வந்தார்.

"டம்போ" என்ற இயற்கை வர்ண கார்ட்டூன் படம் மிகவும் மனோஹரமானது. ஆச்சர்யமான கற்பனா சக்தி: அதிசயமான ஆற்றல்: இவற்றையே இந்தப் புது படம் கோஷிக்கிறது. ஆரம்பம் முதல் கடைசி வரை நல்ல உயர்தர பொழுது போக்கு அம்சங்கள் நிறைந்தது: நமக்கு உண்மையான இன்பத்தை இப் படம் அளிக்கிறது என்பதில் சந்தேகமில்லை: நம்மை நகைக்க வைக்கும் கதா பாத்திரங்களைக் காணுவதும் காதுக்கினிய இசைகளைக் கேட்டு மகிழ்வதும் நல்ல பொழுது போக்கல்லவா? இதில் மொத்தம் 9 புது பாட்டுகள் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

மிகப் பெரிய காதுகளுடன் பிறந்த யானைக்குட்டி யொன்றின் கதை தான் "டம்போ". படத்தின் சாரம்: இந்த யானைக்குட்டி ஒரு ஸர்க்கஸில் பிறந்தது: இதற்கு மிகவும் அகன்று நீண்ட காதுகள் இருப்பதைக் கண்டு, இதர பிராணிகள் இதைப் பார்த்து பரிகாசம் பண்ணுகின்றன: ஆனால் இந்த டம்போ என்ற யானைக்குட்டிக்கு இரு பிராணிகள் உதவுகின்றன: அத்யந்த ப்ரீதியைக் காட்டுகின்றன: இதற்கப்புறம் இந்த குட்டி யானை, பிறர்களது பரிகாசத்திற்குப் பயப்படாமல் இருந்து, பலவிதமான ஆச்சர்ய சம்பவங்களை நடத்திக் காட்டுகிறது; கடைசியில் ஆகாயத்தில் பறக்கவும் பறக்கிறது; ஒரு யானைக் குட்டி ஆகாயத்தில் பறந்து போவதென்றால், அதைவிட ஆச்சர்யகர மானது உலகத்தில் வேறு எது இருக்க முடியும்? ஆகவே டம்போ வெகு விரைவில் அதிகப் பிரசித்தி யடைந்து விடுகிறது.



பறக்கும் யானை இது தான்!

ஆர். கே. ஓ. ரேடியோ படமான "டம்போ" வில் பறக்கும் குட்டி யானை இந்த பொம்மை தான்: டிஸ்னியின் அபூர்வ சக்தி இதில் தெரிகிறது.

டம்போவின் நண்பர் டிமோதி மவுஸ்: இது தான் டம்போ பெருமையடைவதற்கு வழி காட்டுகிறது.

குட்டி யானை பறக்கிறது

ஆர். கே. ஓ. ரேடியோ படத்தில் "டம்போ" என்ற குட்டி யானை பறக்கும் காட்சி மிகவும் வேடிக்கையானது.

இப்படத்தில் மற்றொன்றும் பட ரசிகர்களை ஆகர்ஷித்திருக்கிறது. அது தான் காஸி ஜூனியர் என்ற இன்ஜின். இந்த இஞ்ஜின்தான் ரயில் வண்டித் தொடரில் ஸர்க்கார் பிராணிகளை இழுத்துக் கொண்டு போகிறது. இந்த இன்ஜின் காட்டும் நடிப்பும் மிகவும் வேடிக்கையானது: இடைவிடாமல் நம்மை குதூஹலிக்கச்செய்கிறது.

இந்த ஆர். கே. ஓ. ரேடியோ படம் 7-ம் தேதி முதல் நியு எல்பின்ஸ்டனில் காட்டப்படுகிறது. இந்த உன்னத படத்தைப் பார்க்கும் போது கடைசி வரை அலுப்பு ஏற்படுவதே இல்லை என்று குறிப்பிட வேண்டியது அவசியமாகும்.

* * * *

"க்ரேட் கன்ஸ்"

"பெரிய துப்பாக்கிகள்"—க்ரேட் கன்ஸ்—(Great Guns) என்பது இப்போது இருபதாம் நூற்றாண்டு பாக்ஸ் கம்பெனியார் தயாரித்திருக்கும் உன்னத படங்களுள் ஒன்றாகும். பிரசித்த ஹாஸ்ய நிபுணர்கள் ஸ்டான் லாரலும் ஆலிவர் ஹார்டியும் இதில் நடிக்கின்றனர் என்பதே இப்படத்தில் நாம் காணவல்ல பொழுது போக்கு அம்சத்திற்குத் தகுந்த அத்தாக்ஷியாகும். "லாரல்-ஹார்டி" படத்திற்கு அலாதி மதிப்பு உண்டு: தனிப் பெருமை இருக்கிறது-

லக்ஷாதிகாரியான டான் பாரஸ்டர் (டிக் நெல்ஸன்) என்ற இளைஞன் ராணுவத்தில் சேர்த்துக்கொள்ளப் படுகிறான். உடனே அவனிடம் மிகுந்த விசுவாசத்துடன் ஊழியம் புரிந்து வந்த ஸ்டான் லாரலும் ஆலிவர் ஹார்டியும் ராணுவத்தில் சேர்ந்துவிடுகின்றனர். இதற்குக் காரணம் அங்கும் தங்களது யஜமானரைப் பத்திரமாகப் பாதுகாக்கலாம் என்பதேயாகும்: டான் சாமர்த்திய சாலியல்ல என்று அவர்கள் எண்ணுகின்றனர்; ஆனால் அவர்கள் எண்ணியதற்கு விரோதமான விதம், பிறர் சகாயமின்றி தன் காரியத்தைத் தானே செய்து கொள்ளத் தனக்கு சக்தி உண்டு என்பதை, அவன் நிரூபித்துக் காட்டுகிறான். ஸார்ஜண்ட் ஹிப்போ (எட்மண்ட் மக்டானல்ட்) விடம் ஸ்டானும் ஆலிவரும் அகப்பட்டுக்கொண்டு மிகவும் கஷ்டப்படுகின்றனர்.

இதற்கிடையில் ராணுவத்தினருக்காக ஒரு கடையை நடத்தி வரும் ஜிஞ்ஜர் ஹம்மாண்ட் (ஷீலா ரயன்) இடம் டான் காதல் கொள்கிறான். ஜிஞ்ஜர் டான் வசமிருக்கும் பணத்தை யுத்தேசித்துதான் அவள் அவனிடம் நட்பு கொண்டிருப்பதாக, ஸ்டானும் ஆலிவரும் நிச்சயித்து இந்த சிநேகத்தைப் பிரித்துவிட மிகவும் முயற்சிக்கின்றனர். கடைசியில் ஜிஞ்ஜர் தான் டானிடம் உண்மையாகவே காதல் கொண்டிருப்பதாகவும், அது அவனிடம் இருக்கும் பணத்திற்காக அல்ல என்றும், கூறிய பின்னர் தான் அவர்களுக்கு நிம்மதி ஏற்படுகிறது.

பிறகு ராணுவ ஒத்திகைகள் நடக்கின்றன. ஸ்டானும் ஆலிவரும் எதிரி வசம் சிக்கிவிடுகின்றனர். டானும் பெனிலபியும் கடைசியில் வந்து அவ்விருவரையும் எதிரிகளிடமிருந்து மீட்கின்றனர். இந்த கதா முடிவு மிகவும் ருசிகரமானது: மேலும் மேலும் ஆவலை எழுப்புகிறது.

இந்தப் படத்தில் மற்றொரு விசேஷம். இதற்கு முன்பெல்லாம் லாரல்-ஹார்டி படங்கள் எவ்விதம் போகுமென்றும் எப்படி முடியுமென்றும் ஒருவராவது அறியமாட்டார். பிரதி தினமும் மனதிற்கிசைந்த விதம் படக்கதைபோய்க்கொண்டேயிருக்கும்: இப்படத்தில்தான் படப்பிடிப்பு ஆரம்பமாவதற்கு முன்னரே கதை தயாராகியிருக்கிறது. இருபதாம் நூற்றாண்டு பாக்ஸ் கம்பெனியாருடன் அவர்கள் செய்து கொண்டிருக்கும் ஒப்பந்தத்தில், படக்கதை முன்னதாகவே தயாரித்துக் கொடுத்துவிடவேண்டும் என்று ஒரு நிபந்தனை இருக்கிறது. இது காரணமாக படத் தயாரிப்பு சிறந்து விளங்குகிறது.

* * * *



இரண்டு கோமாளிகள் நடுவில்

"க்ரேட் கன்ஸ்" என்ற படத்தில் நடிக்கும் பிரபல குறும்புக்காரர்களான லாரலும் ஹார்டியும்.

ஒரு வேடிக்கை சம்பவம்

ஸ்டான் லாரலும் ஆலிவர் ஹார்டியும் படத்தில் மட்டுமே வேடிக்கையாக நடிப்பதில்லை. இதர சமயங்களில் கூட அவர்களது குறும்பு புத்தி அவர்களை விடுவதில்லை: படத்தில் நடிக்காத காலத்தில் தான் அவர்களது வேடிக்கை ஸ்வபாவம் அதிகமாக சோபிக்கிறது என்று கூடச்சொல்லலாம்.

"க்ரேட் கன்ஸ்" படப்பிடிப்பு நடந்து கொண்டிருக்கும்போது, இடையே அவர்கள் இருவருக்கும் சற்று ஓய்வு ஏற்பட்டது: அப்போது அவர்கள் தங்களிடம் வேலை செய்யும் ஜிம்மி மர்பி என்ற ஐரிஷ்காரனிடம், அமெரிக்காவில் பிரஜா உரிமை பெறவேண்டுமானால், மோட்டார் ஓட்டத் தெரிவது மிகவும் முக்கியமானது எனக் கூறி, அவன் அதை நம்பும்படிச் செய்தனர்.

ஒரு நாள் பிற்பகல் இருபதாம் நூற்றாண்டு பாக்ஸ் கம்பெனி ஸ்டுடியோவை விட்டு, அமெரிக்கா பெடரல் கோர்ட்டுக்குப் போய், பிரஜா உரிமைபெற மர்பி ஏற்பாடு செய்துகொண்டிருந்தான். மோட்டார் ஓட்டத் தெரியாத தன்னால் எப்படி ஸ்டுடியோவிலிருந்து கோர்ட்டுக்குப்போக முடியும் என்று அறியாமல் தவிப்பதாக மர்பி கூறினான்.

"போதும்! மோட்டார் ஓட்டத் தெரியாது என்று உளறி விடாதே. அமெரிக்கப் பிரஜையாகவேண்டுமானால், முதலில் மோட்டார் ஓட்டத் தெரிய வேண்டுமே. அமெரிக்காவில் ஒவ்வொருவரிடமும் மோட்டார் இருக்கிறது. அதுதான் உனக்குத் தெரியுமே. இந்த வண்டி விபத்துகள் அதிகம் ஏற்படுவதைத் தடுப்பதற்காகவே இந்த நிபந்தனையை விதித்திருக்கின்றனர்" என்றான் ஸ்டான் ஜிம்மியிடம்.

காலை நேரம் பூராவும் ஆலிவரும் இதில், சேர்ந்து கொண்டு கலாட்டா செய்யவாரம்பித்துவிட்டான். முதலில் எல்லாம் ஜிம்மிக்கு நம்பிக்கை ஏற்படவில்லை: தாங்கள் கூறுவதற்கு ஆதாரமாக ஸ்டானும்ஆலிவரும் அநேகரை அழைத்துச் சொல்லச் சொன்னார்கள். இதற்கப்புறம் ஜிம்மி கோர்ட்டுக்கு வந்து சேர்ந்ததும், அங்கிருந்த ஒருவரை, மோட்டார் ஓட்டும் லைஸன்ஸ் உண்மையிலேயே தேவையா என்று வினவினான்.

* * * *

லாரல்-ஹார்டி கம்பெனி

ஸ்டான் லாரலும் ஆலிவர் ஹார்டியும் இப்போது ஒரு கம்பெனியாகச் சேர்ந்து கொண்டிருக்கின்றனர். இந்த கம்பெனிக்கு அவர்களது வக்கீல் தான் காரியதரிசியும் பொக்கிஷதாரும் ஆவார்: இதற்கு முன்பு இவ்விருவருக்கும் பல விதத்திலும் நஷ்டம் ஏற்பட்டு வந்திருப்பதே இதற்குக் காரணம் என கூறப்படுகிறது.

இந்த கம்பெனியின் தலைவர் ஸ்டான்: உப தலைவர் ஆலிவர்: ஆனால் இந்த உத்யோகத்திற்கு விசேஷ கௌரவம் கிடையாது. இவர்களது வக்கீலான பென் ஷிப்மன்தான் இதில் முக்கியஸ்தர்: இந்த கம்பெனியின் பொக்கிஷதார் என்ற ஹோதாவில் இதன் பணப்பொறுப்பு பூராவையும் அவரே சுமந்து வருகிறார். "லாரல் அண்ட் ஹார்டி புரொடக்ஷன்ஸ்" என்பதுதான் இப் புது கம்பெனியின் பெயர். காலிபோர்னியா ஸர்க்கார் இந்தக் கம்பெனிக்கு அங்கீகாரம் அளித்திருக்கின்றனர்.

இந்தக் கம்பெனி ஸ்தாபிக்கப்பட்டவுடன், இருபதாம் நூற்றாண்டு பாக்ஸ் கம்பெனியாருடன் செய்து கொண்ட ஒப்பந்தம் தான் முதல் முதலானது: "க்ரேட் கன்ஸ்" போன்ற பல படங்களைத் தயாரிக்க இவ்விரு தமாஷ்காரர்களும் ஒப்புக்கொண்டிருக்கின்றனர். ஸ்டானும் ஆலிவரும் தனித்தனியாக ஒப்பந்தம் செய்து கொள்ள முடியாது. இந்த கம்பெனி ஸ்தாபனத்தைப் பற்றிய மற்றொரு விசேஷம் என்னவென்றால், இவ்விரு நடிகர்களது ஜீவனத்திற்கு அவசியமானதைக் காட்டிலும், அதிக பணம் வேண்டப்பட்டால் வக்கீல் ஷிப்மன் அங்கீகாரமின்றி பணம் கிடைக்காது. இவர்கள் இதற்கு முன்பு ஏராளமாகப் பணம் செலவழித்தும் பயன் அடைந்ததில்லை: இனியும் பணம் அவ்விதம் விரயம் செய்யக் கூடாதென்பதற்காகவே, இந்த ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. பிறர் வந்து கேட்டால் இது வரை அவர்கள் இல்லை என்று சொன்னது கிடையாது: நிர்த்தாக்ஷிண்யமாக ஒருவர் இருப்பது தான் அவர்களுக்கு நன்மையைச் செய்யுமாம்.

ஒரே ஒரு சமயம்தான் அவர்கள் போட்ட பணம் வீணாகவில்லை. ஸாண்டா அஹீடாவில் குதிரைப் பந்தய மைதானத்தை அவர்கள் வாங்கியிருந்தனர்: இதனால் அவர்களுக்கு நல்ல லாபம் கிடைத்து வந்தது: இருவரது மனைவிமாரும் இந்தமாதிரி குதிரைப் பந்தயம் மூலம் லாபம் சம்பாதிப்பது தர்மமல்ல என்று கூறியவுடன், அவர்கள் அதை விற்று விட்டனர்.

* * * *

கடைசியில்
"பினோக்கியோ," விற்குப்பின் நீங்கள் எதிர்பார்த்திருந்த
வால்ட் டிஸ்னியின் படம்

DUMBO

(டம்போ)
வால்ட் டிஸ்னி தயாரித்த இயற்கை
வர்ணங்களிலுள்ள பூரா கார்ட்டூன் படம்.
நீங்கள் பெரிதும் விரும்பும் பிராணிகள்
டிமோதி மூஞ்சூறு -
5 கறுப்பு காகங்கள் நடிப்பது
கேஸி ஜூனியர் - பேசும் ரயில் இஞ்ஜின்
நடனம் புரியும் யானைகள்

சிறந்த தமாஷ் அளிப்பது .... அனைவரும் விரும்புவது
ஆர். கே. ஓ. ரேடியோ வெளியீடு.

மார்ச்சுமீ 7உ சனிக்கிழமை
ஆரம்பம்.

எல்பின்ஸ்டன்

தினசரி 3 காட்சிகள் : 3—6-15 & 9-30 மணிக்கு
ஞாயிறுகளில் காலை காட்சி .... காலை 10-மணிக்கு.
குறைந்த கட்டணமும், இலவச டிக்கட்டுகளும் நிறுத்தப்பட்டுள்ளன.

கிரேக்க மன்னர் காட்டிய நன்றி



கிரேக்க மன்னர் ஜார்ஜ் ஜெர்மானியரிடமிருந்து தப்பியது ஆச்சர்யகரமானது. பாரசூட்டுகள் மூலம் அநேகம் ஜெர்மனியர் நாட்டில் இறங்குவதைக் கண்ட மன்னர் கோஷ்டியார் மலைகளில் போய் ஒளிந்துகொண்டனர்; அங்கும் அவர்களுக்கு மஹத்தான கஷ்டங்கள் சம்பவித்தன. மலைப் பிரதேசத்தை மிகுந்த பிரயாசையுடன் தாண்டி, மன்னர் கோஷ்டியாருடன் க்ரீட்டில் இடையரது குகையை வந்தடைந்தார்; இங்கு சில காலம் பத்திரமாகத் தங்கியிருந்து, எகிப்துக்குக் கப்பலில் பிரயாணமானுர். க்ரீட்டிலிருந்து தாம் எகிப்துக்குத் தப்பி வர உதவி புரிந்த நியூஜிலாந்து படையினரிடம் ஜார்ஜ் மன்னர் தமது நன்றியைத் தெரிவிப்பதைப் படத்தில் காணலாம்.

சென்றவார நிகழ்ச்சிகள்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

நேசதேசக் கடற்படையினரும் விமானப்படையினரும் இரவெல்லாம் கப்பல்களிலிருந்து இறங்க முயன்ற ஜப்பானியரைத் தாக்குவதில் தீவிரமாக ஈடுபட்டிருந்தனர். இவர்கள் ஜப்பானியருக்குக் கடுஞ் சேதம் விளைவித்தனர்.

பட்டோவியாவுக்கு மேற்கேயுள்ள பான்டான் மாகாணத்தில் ஜப்பானியப் படைகள் முதலில் இறங்கின. இந்திரமாயு என்ற விடத்திற் கருகில் இரண்டாவது படை இறங்கியது. இந்த இடம் பட்டேவியாவுக்குக் கிழக்கே 120 மைல் தூரத்திலும், செரிபரனுக்கு மேற்கே 40 மைல் தூரத்திலுமிருக்கிறது.

ரெம்பெஸ் என்ற விடத்தில் மூன்ருவது ஜப்பானிய படை இறங்கியது. ரெம்பெஸ் என்ற விடம் ஸுரபாயாவுக்கும் ஸிம்ராஸ்கிற்கும் மத்தியில் உள்ளது.

* * * *

"உதவி வராவிட்டால் முடியாது"

வாஷிங்டனிலுள்ள ஆஸ்திரேலியர் தூதரான மிஸ்டர் ஆர். ஜி. காஸ்கி கூறியதாவது:—ஜப்பான் ஆஸ்திரேலியாவைத் தாக்குமென எதிர் பார்க்கப்படுகிறது. ஜப்பானின் தாக்குதலிலிருந்து ஆஸ்திரேலியா பாதுகாக்கப்பட வேண்டுமானுல் அதற்கு உதவி வரவேண்டும். எங்களுக்கு உதவி கிடைக்காவிட்டால் நாங்கள் ஆஸ்திரேலியாவைப் பாதுகாக்க முடியாது. ஆஸ்திரேலியாவைப் பாதுகாப்பது போதிய ஆட்களையும் சப்ளைகளையும் திரட்டி வைத்த பிறகு ஜப்பானைத் தாக்குவதற்கு உபயோகப்படக் கூடிய ஒரு மூலஸ்தானத்தைப் பாதுகாப்பதாகும்.

* * * *

கலிபோர்னியா மீது குண்டுப் பிரயோகம்

அமெரிக்காவின் மேற்குக் கரையை எதிரி சப்மரீன் பிப்ரவரி 24-ந்தேதி முதன் முதலாகத் தாக்கியது. கலிபோர்னியாவின் கடற்கரைப் பிரதேச மீது எதிரி (ஜப்பானிய) சப்மரீன் அன்று பீரங்கிப் பிரயோகஞ் செய்தது.

* * * *

போர்ட் ப்ளேர் மீது குண்டு வீச்சு

சென்ற மாதம் 24-ந்தேதியும், 26-ந்தேதியும் மூன்று ஜப்பானிய விமானங்கள் அந்தமானிலுள்ள பிளேர் துறைமுகத்தில் குண்டு வீசியதாக இந்திய சர்க்கார் அறிக்கை கூறுகிறது.

24-ந் தேதி விமானக் கூடம் முக்கியமாக தாக்கப்பட்டது; அதன் மீது நான்கு குண்டுகள் போடப்பட்டன; தரையில் வேலை செய்துவந்த விமானக் கூடச் சிப்பந்திகள் பேரில் பீரங்கிப் பிரயோகம் செய்யப்பட்டது. ராணுவத்தினர் யாரும் கொல்லப்படவில்லை; ஜனங்களில் இருவர் கொல்லப்பட்டனர், 5 பேர் காயமடைந்தனர்.

26-ந் தேதி நடந்த விமான தாக்குதலில் போது ஜப்பானிய விமானங்கள் 5 நிமிஷ நேரம் தலைக்கு மேல் பறந்து, 12 குண்டுகளை வீசி, விமானக் கூடம் உள்பட பல இடங்களில் பீரங்கிப் பிரயோகம் செய்தன. சொற்ப சொத்துச் சேத மேற்பட்டது. உயிர்ச்சேதமில்லை.

* * * *

ஸிங்கியாங்கும் பங்கா தீவும் பிடிபட்டன

மேற்குபோர்னியோவிலுள்ள ஸிங்கியாங்கை பான்டியாகைகிலிருந்து முன்னேறி வந்த ஜப்பானியப்படை வசப்படுத்திக் கொண்டது.

பங்காத் தீவையும் தென் சுமத்ராவின் மேற்குப் பாகத்திலுள்ள பென்கோலென் ரெஸிடென்ஸியின் ஒரு பகுதியையும் தென்சுமத்ராவிலுள்ள டாண்டு ஜாங் காராங்கும் ஜப்பானியரால் வசப்படுத்திக் கொள்ளப்பட்டதாக அனுமானிக்கப்படுகிறது.

* * * *

ஜப்பானியரின் பலத்த தாக்குதல்

ஜப்பானியர் ஏராளமான விமானங்களைக் கொண்டு ரங்கூனைப் பெருவாரியாகத் தாக்கினர். பர்மாவில் இதுவரை இவ்வளவு பெரிய ஜப்பானிய விமானப்படை வந்ததேயில்லை.

தரையிலிருந்து 4 மைல் உயரத்தில் கோரமான யுத்தம் நடந்தது; ஆனுல் கண்ணுக்கு ஏதும் தெரியவில்லை. வீழ்த்தப்பட்ட ஜப்பானிய விமானங்கள் கீழே வந்து விழுவது நன்ருகத் தெரிந்தது. மொத்தம் எத்தனை விமானங்கள் வந்தனவென்று தெரியவில்லை; சேத விவரமும் எட்டவில்லை. எனினும் ஜப்பானியருக்குப் பெரு நஷ்டம் ஏற்பட்டதாகவே தெரிகிறது.

* * * *

அங்கராவில் வெடிகுண்டு

பிப்ரவரி 25-ந் தேதி காலை அங்கரா நகரில் ஒரு தெருவில் ஜெர்மன் தூதர் வான் பேபனுக்கும், அவர் மனைவிக்கும் அருகில் ஒரு வெடிகுண்டு வெடித்தது. இதன் அதிர்ச்சியால் வான் பேபன் தம்பதிகள் கீழே வீழ்ந்தனர். ஆனுல் காயப்படவில்லை. வேறு ஒருவரது சரீரம் வெடிகுண்டால் துண்டுதுண்டாக்கப்பட்டது.

சிங்கப்பூரில் ஜப்பானிய கடற்படை

சிங்கப்பூரிலிருந்து ஜப்பானிய செய்தி ஸ்தாபனத்துக்குக் கிடைத்த செய்தி வருமாறு:—

ஒரு ஜப்பானியக் கடற்படை சிங்கப்பூரில் உள்ள கப்பல் துறைமுகத்துக்குள் வந்து சேர்ந்து முதன் முதலாக அதன் மீது ஜப்பானியக் கொடியை உயர்த்தியது.

அதற்கு முன்னதாக சிங்கப்பூர் தீவைச் சுற்றிய கடலில் சுரங்க வெடிகளை அகற்றுவதில் ஈடுபட்டிருந்த ஜப்பானியச் சுரங்க வாரிப்படை தனது வேலையைப் பூர்த்தி செய்ததன் பேரில் ஜப்பானிய யுத்தக் கப்பல்கள் வந்து சேர்ந்தன.

அட்டைப் படம்

ஸோபனு ஸமர்த்தும், சபிதா தேவியும்

நாச்சியார் கோவில் சனிப் பெயர்ச்சி:

M. ரமணி அய்யர்-மாததூர்.
S, ராஜு முதலியார்.
S. சம்பந்தம் பிள்ளை.
டிரஸ்டிகள்.

ஸ்ரீ ராமநாதஸ்வாமி ஆலயத்தில் சித்திரைபானு-ளு சித்திரை-மீ (5)க்கு சரியான (17-4-42)ல் ஈச்வர கிருபா கடாக்ஷத்தினுல், பக்த கோடிகளுடைய திரவிய சகாயத்தினுல் ஸ்ரீ ஸத்திர பகவான் மேஷ ராசியிலிருந்து விருஷப ராசிக்கு பிரவேசிப்பதால் ஆன்ம வர்க்கத்தினர்களின் க்ஷேமத்தின் பொருட்டு ஸ்ரீ பர்ஸதவர்தனி சமேத ஸ்ரீராமனுத ஸ்வாமி பரிவாராதிகளும் ஸ்ரீ சனீஸ்வர பகவான் ஜேஷ்டாதேவி மந்ததேவி குளிகன் மாந்தி இவர்கள் நால்வருக்கும் அபிஷேக அலங்கார தூப தீப நைவேத்திய ஷோடோபசாருதி அர்ச்சனைகள் செய்து, அன்று இரவு இந்திர விமானத்தில் வெள்ளி ரிஷபாரூடராக ஸ்ரீசோமாஸ்கந்தர்சனேஸ்வரரும் காஹ வாஹனரூடருய் திருவீதி திருவிழாக் காக்ஷியும் கருணணந்த கரங்களாக கியாதி பெற்ற வித்வான்களின் மேளகச்சேரியுடன் உத்ஸவம் நடைபெறும். அன்பர்கள் வந்து தரிசித்து இஷ்ட காம்யார்த்தப் பெரும் பேருகளை பெற்று இனிது வாழ வேண்டுகிரேம்.

இப்படிக்கு,
திருப்பேணுபெருந்துரை
மஹாலிங்க சர்மா
ஷெ கோவில் பூஜகர்.

15-க்கு 1 இனம்

"போனஸ் சகாயங்கள்"

மார்ச்சு மாதம்—முதல் சொற்ப நாட்களுக்கு

நீங்கள் வாங்கும் 15 ரூபாய் சாமான்களுடன் மேலதிகமாய் 1 ரூபாய்க்கு இனமாக சாமான்கள் தரப்படும்.

உயர்தரசரக்கு குறைந்த விலைக்கு

கேவல்ராம்ஸ்

9-13, நட்டான் பஜார்
மதராஸ்.





சென்னை ஜில்லா காங்கிரஸ் கமிட்டி 6-ம் மஹாநாடு சமீபத்தில் நகரில் தேனும்பேட்டை காங்கிரஸ் மாளிகையில் ஸ்ரீ வி. நாடிமுத்து பிள்ளை தலைமையில் நடந்தது. 2. சென்ற மாதம் திருநெல்வேலி நகர சபைத் தலைவர் ஸ்ரீ வி. எஸ். சங்கர சுப்ரமணிய முதலியார் தலைமையில் தமிழ் நாடு கைத்தறி நெசவாளர் மகாநாடு கூடியது. கூட்டுறவு ரிஜிஸ்திரார் ஸ்ரீ சத்யநாதன் மகாநாட்டைத் திறந்து வைத்தார்.